



# தமிழரசு

16-4-1987 ரூ. 1

# பாவேந்தர்



தோற்றம்
29-4-1891

மறைவு
21-4-1964

# வளமான வருங்காலம் அமைய தளராது உழைப்போம்




நான் வணங்கும் தெய்வங்களாகிய
தாய்மார்களே!
என்னை வழி நடத்திச் செல்லும்
பெரியோர்களே!
என் ரத்தத்தின் ரத்தமான உடன்
பிறப்புக்களே!

தமிழ்ப் புத்தாண்டு தொடங்குகிற சித்திரை முதல் நாளையொட்டி உங்கள் அனைவருக்கும் என் வணக்கங்களையும், நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு ஆண்டு முடிந்து அடுத்த ஆண்டு பிறக்கும்போது காலம் விரைந்து சென்று கொண்டிருப்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

இந்த நினைவோடுதான், நமது மக்களுக்கு நிலையான பயன்தருகிற திட்டங்களை நிறைவேற்ற நான் அயராது பாடுபட்டு வருகிறேன்.

சத்துணவுத்திட்டம், இலவசச்சீருடை மற்றும் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம், ஏழைகளுக்கு இலவச மின் வசதித் திட்டம் இவை போன்ற சீரிய திட்டங்கள்




# தமிழரசு

தமிழ்ப் புத்தாண்டுச் சிறப்பிதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2018
பிரபவ-சித்திரை 3

மலர் : 17 இதழ் : 20

16-4-1987

செவ்வனே செயல்பட்டு வருகின்றன. இவை போலவே தாழ்த்தப்பட்ட-நலிந்த பிரிவினருக்கு வீடு கட்டும் திட்டத்தையும் இந்த அரசு துவக்கியிருக்கிறது. கல்வி பயிலும் சிறுவர்களுக்கும், ஏழைத் தாய்மார்களுக்கும் இலவசக் காலணி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறேன். ஒருங்கிணைந்த குழந்தை நலச்சத்துணவுத் திட்டம் என்ற பெயரில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும் சத்துணவு-மருத்துவக் கவனிப்பு அளிக்கும் திட்டமும் வகுக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்து கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. அது மேலும் கடுமையாகும் அறிகுறிகள் தென்படுகின்றன. வறட்சியைச் சமாளிக்கப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாகக் குடிநீர் வழங்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

பாசனத்துறையில் நமக்குச் சோதனை ஏற்பட்ட போதிலும் உணவு உற்பத்தி பாதிக்காதவாறு பார்த்துக் கொண்டுள்ளோம். வறட்சியின் காரணமாக உணவுப் பற்றாக்குறை ஏற்படாமலும் விலை உயராமலும் இருக்க, அரசு மிக விழிப்பாகச் செயல்பட்டு அதில் வெற்றியும் கண்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். தமிழகத்தில் தொழில் துறையில் அமைதி நிலவி வருவதையும், சட்டம் ஒழுங்கு காக்கப்பட்டு வருவதையும் அனைவரும் அறிவர்.

விரக்தியடைந்த சக்திகள் பயங்கரவாதச் சூழ்நிலையைத் தமிழகத்தில் உருவாக்க முயன்றதையும், அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை. எனவே தீய வன்முறைச் சக்திகள் தலையெடுக்காதவாறு நாம் மிகுந்த விழிப்போடு இருக்கவேண்டும்.



இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காணவும், அங்கு வாழும் தமிழ் பேசும் மக்கள் அச்சமின்றி மரியாதையுடன் வாழும் நிலை உருவாகிடவும், பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் தொடர்ந்து மேற்கொண்டுவரும் முயற்சி புத்தாண்டில் பயன் தரும் என்று நம்புகிறேன்.

இந்த ஆண்டு நாம் விடுதலை பெற்று நாற்பது ஆண்டுகள் நிறைவு பெறுகின்ற ஆண்டு. நமது மக்கள் தொகையில் பெரும் பகுதியினரான நலிந்த ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தந்தாக வேண்டுவது அரசின் கடமை. எனவே வருகிற புத்தாண்டில் வளர்ச்சித் திட்டங்களையும் மக்கள் நலத் திட்டங்களையும் வேகத்தோடு செயல்படுத்த வேண்டியது அவசர அவசியமாகும்.


'கட்டுப்பாடு மற்றும் ஒழுங்கு முறையுடன் இணைந்ததுதான் சுதந்திர வாழ்வு' என்று மகாத்மா காந்தியடிகள் கூறியதை நான் அனைவருக்கும் நினைவுறுத்தி, விடுதலை வாழ்வையும் மக்களாட்சி உரிமைகளையும் முன்னேற்றப் பயணத்தையும் கட்டிக் காத்திட

உழைப்போம்!
ஒழுங்குமுறையுடன் உழைப்போம்!
கட்டுப்பாடு காப்போம்!
வளமான வருங்காலம் அமைய
தளராது உழைப்போம்!

என்று அனைவரையும் அன்புக்கரம் கூப்பி அழைக்கிறேன்.


அனைவருக்கும் என் மனம் கனிந்த தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களை உரிமையாக்குகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!



(எம். ஜி. இராமச்சந்திரன்)





# ஒரு புதிய நெறியை நோக்கி...

தமிழ்நாட்டின் மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்கள் 1982 செப்டம்பர் திங்களில் தமிழகத்தின் ஆளுநராக பொறுப்பேற்றது முதல் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய சொற்பொழிவுகள் நூலாகத் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன.

'ஒரு புதிய நெறியை நோக்கி' என்ற தலைப்பிலான இந்த ஆங்கில நூலில் கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம், நிர்வாகம், கலை மற்றும் பண்பாடு, மதம், போன்ற 59 சொற்பொழிவுகள் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் வெளியீட்டு விழா 8.4.87 அன்று ஆளுநர் மாளிகைத் தோட்டத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையேற்ற இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் நூலை வெளியிட மாண்புமிகு உணவு அமைச்சர் திரு ச.இராமச்சந்திரன் அவர்கள் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரையாவது:

''மேதகு ஆளுநர் அவர்களின் ஒரு புதிய நெறியை நோக்கி என்ற புத்தகம் இன்று வெளியிடப்படுகிறது. இந்த விழாவில் கலந்துகொண்டு இந்தப் புத்தகத்தை வெளியிடுவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நமது ஆளுநர் அவர்கள் எனது நண்பர், உடன்பிறவாச் சகோதரர். நான் உடல்நலம் இல்லாத நேரத்தில் என்மீது மிகுந்த அக்கறைகாட்டி என் நல்வாழ்வுக்கு வழி வகுத்த நல்லவர்களுள் ஒருவர்.

அவர் எழுதிய இந்தப் புத்தகத்தை வெளியிடுவதை எனக்குக் கிடைத்தபேறாகக் கருதுகிறேன்.

நமது ஆளுநர் அவர்கள் பல பதவிகளில் இருந்து சிறந்த பணி ஆற்றி இருக்கிறார். மிகுந்த செயல் திறன் மிக்க தலைமைச் செயலாளராக இராஜஸ்தான் மாநிலத்தில் பணியாற்றி இருக்கிறார். தகுந்த சமயங்களில் எனக்கும் இந்த அரசுக்கும் சிறப்பான ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கிவருகிறார்.

இந்தப் புத்தகத்தைப் படிக்கும்போது ஒவ்வொரு துறையிலும் அவருக்கு இருக்கும் அறிவுத் திறன் நம்மை வியக்கவைக்கிறது. கல்வி, மருத்துவ வசதி, விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம், தொழில் வளர்ச்சி மற்றும் நிர்வாகம், சட்டம், நீதி, ஒழுங்கு மற்றும் பத்திரிகைத் துறை, நிர்வாகத் திறனில் உள்ள சவால்கள், மதம், கலை மற்றும் பண்பாடு ஆகிய அத்தியாயங்களில் அரசின் கொள்கைகள் அரசு ஆற்றிவரும் மக்கள் நலப்பணிகள், மேலும் முன்னேறச் செய்யவேண்டிய ஒழுங்குமுறை நடைமுறைகள் ஆகியவற்றைப் பற்றித் தெளிவாக விளக்கிக்கூறி இருக்கிறார்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நூல்நிலையங்களும் இந்தப் புத்தகத்தை வாங்க வேண்டும். மக்கள் எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

விழாவில் உரையாற்றிய மேதகு ஆளுநர் அவர்கள் தெரிவித்ததாவது:

''ஆளுநர்களிலேயே நான் ஒரு அதிர்ஷ்டசாலி என்று நினைக்கிறேன். முதல்வர் அவர்களும் மற்றும் அமைச்சர்களும் எனக்கு நல்ல வகையில் ஒத்துழைப்பு நல்கி வருகிறார்கள்.

டில்லியில் நடந்த எனது மகள் திருமணத்திற்கு முதல்வர் அவர்கள் வந்தார். அப்போது அவரே முன்னின்று திருமண ஏற்பாடுகளைக் கவனித்தார். ஒரு ஆளுநருக்கும் முதல்வருக்கும் இருக்கும் உறவு போன்றதல்ல எங்கள் உறவு. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவருக்கிடையே இருக்கும் உறவு போன்றது.

தமிழகத்தின் தலைநகரமான சென்னை பெரிய நகரமாக இருப்பதால் மாநில மாநாடு முதல் அனைத்துலக மாநாடு வரை இங்கு நடைபெறுகின்றன.

அப்படிப்பட்ட மாநாடுகளைத் துவக்கி வைக்குமாறு என்னை அழைக்கிறார்கள். அந்தத் தகுதி எனக்கு உண்டா என்பதை நான் நினைத்தது உண்டு.

அந்த மாநாடுகளில் பேசும்போது நான் என்னைத் தகுதிப்படுத்திக் கொண்டு பலவாறாகச் சிந்தித்துப் பேசினேன். பல்கலைக் கழகவேந்தர் என்ற முறையில் பட்டமளிப்புவிழாவில்உரையாற்றினேன். இதுபோன்று உரையாற்றும்போது நான் பேசிய கருத்துக்கள் தான் நூலாக உருவாக்கப் பட்டுள்ளன''.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா.. நெடுஞ்செழியன் அவர்கள், மாண்புமிகு உணவு அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் ஆகியோரும் விழாவில் உரையாற்றினர்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. இரா.கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவின்றார்.

—நமது செய்தியாளர்

# ஒருமைப்பாட்டுக்கு உதவும் கலைவிழா

தென்னகப் பண்பாட்டு மையத்தின் சார்பில் சென்னைக் கலை விழா சென்னை எழும்பூரிலுள்ள இராசரத்தினம் அரங்கில் 28.3.87; 29.3.87; 30.3.87 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது.



இந்தியத் திருநாட்டில் உள்ள கவின் கலைகளின் விரிந்த காட்சியைத் தமிழ்நாட்டு மக்களுக்கு அளிக்க வேண்டும் என்பது இக் கலைவிழாவின் நோக்கமாகும்.

தென் மாநிலங்கள் மற்றும் குஜராத், கோவா, பஞ்சாப், இமாசலம், மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், இராஜஸ்தான், அரியானா, ஒரிசா, பீகார், இலட்சத்தீவுகள் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 400 கிராமியக் கலைஞர்கள் இவ்விழாவில் பங்கு கொண்டு இநதியக் கலைகளின் இனிய விருந்தைத் தமிழ் மக்களுக்கு வழங்கினர்.

இக் கலைவிழாவை மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்கள் 28.3.87 அன்று துவக்கி வைத்தார்.

''பல்வேறு மொழிகளும் பண்பாடும் உள்ள நமது நாட்டில் கலைகள் மூலமாக இந்திய ஒருமைப்பாடு பேணப்பட்டு வருகிறது. ஏற்கெனவே இதுபோன்ற விழாக்கள் டெல்லி, ஐதராபாத், பெங்களூர் ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளன. அடுத்து அந்தமான் தீவுகளில் 'தீவுத்திருநாள்' கலை விழா நடத்தப்பட உள்ளது' என்று மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.



விழாவையொட்டித் தயாரிக்கப்பட்ட 'ஸ்பெஷல்' ஆப்திசௌத் என்ற ஆங்கில நூலினை மேதகு ஆளுநர் அவர்கள் வெளியிட முதல் பிரதியை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.சி.பொன்னையன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

விழாத் தலைமை ஏற்ற மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள், ''கலையை வளர்க்கவும் கலையின் சிறப்பை உயர்த்தவும், இக்கலைகள் மூலம் நாட்டு ஒருமைப்பாட்டைப் பேணவும் இதுபோன்ற கலை விழாக்கள் நடத்தப்படுகின்றன'' எனத் தெரிவித்தார்.

துவக்க நாளின் முதல் கலை நிகழ்ச்சியாகத் தமிழ்நாட்டின் பொய்க்கால் குதிரை, மயிலாட்டம் ஆகியவை நடைபெற்றன.

தமிழ்நாட்டின் சிலம்பாட்டம் கோல்சிலம்பு, மகுடாட்டம், தெருக்கூத்து, கேரளாவின் கோலாட்டம், கலரிபயட்டு, தெய்யம், கர்நாடகாவின் பூஜகுனிதா, வீரபத்ரா, வீரகஸ்னி, ஆந்திராவின் லம்பாடி, பொனலு, வீர நாட்டியம், புதுவையின் கரகம் குஜராத்தின் சிடிடோமர், கோவாவின் கோடிமோடினி பஞ்சாப் மாநிலத்தின் பாங்ரா, இமாசலத்தின் நாடி, ரசா, ஹரால், மத்தியப்பிரதேசத்தின் பந்த்வனி, ராய்நிருத்யா, உத்தரப்பிரதேசத்தின் ஹோலிபாட்டு, தரியா, இராஜஸ்தானின் தாலிநடனம் பாவை, தெஹரா தால், அரியானா மாநிலத்தின் தாமல் ஒரிசாமாநிலத்தின் சால் நடனம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் மூன்று நாட்கள் நடத்தப்பட்டன.

விழாவிற்கு வருகை தந்தோரைத் தென்னகப் பண்பாட்டு மையத்தின் இயக்குநர் திருமதி ஷீலா பிரியா இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. இரா. கற்பூரசுந்தரபாண்டியன் இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார்.

## அட்டையில்

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் 14.4.87 அன்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் புதிய நூலகக் கட்டடத்தைத் திறந்து வைத்தல்**

(நிகழ்ச்சித் தொகுப்பு அடுத்த இதழில்)

# இந்திய தேசிய நூல்—திருக்குறள்

பன்மொழிப் புலவர்
**கா. அப்பாதுரையார்**

உலக இலக்கியங்களில் உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்படும் பெருமையில் விவிலியம், குரான், ஆகியவற்றிற்கு அடுத்தபடியில் அரும் பெரும் மதிப்பையும், உலகப் பெரு நாவல்களுக்கு அடுத்தபடியாகப் பெருமக்கள் ஆர்வ ஈர்ப்பாற்றலும் ஒருங்கே கொண்ட நூல் திருக்குறள், அதைத் தனதாகக் கொள்ளும் நாடு உலக மக்களின், மதிப்பையும் அன்பையும் ஒருங்கே கொள்ளத்தக்கதாகும். ஆல்பர்ட் சுவைட்சர் கூறுகிறபடி எல்லாச் சமய நூல்களையும்போல் மேலுலக இன்ப வளம் காட்டினாலும் இந்த உலக வாழ்க்கை நிறைவின் வளமாகவே அதை வற்புறுத்தும் நூல் திருக்குறள். சமய நூல்களின் பெருமையும் இலக்கியத்தின் கலையாற்றலும் ஒருங்கே கொண்ட அந்நூலைத் தனதாக ஏற்றுக் கொண்ட நாடு மணத்தையும் அழகையும் உடன் கொண்ட பொன்மலர்போல் உலகில் திகழும்.

ஒன்றே முக்கால் அடிக்குள் ஏழே சீர்கள் அடங்கிய 1330 மந்திரங்களால் உலகை அன்பு வசியம் செய்யத் தகும் மாபெரு மந்திர ஏடு திருக்குறள். அதை மேற்கொண்ட நாடு, உலகை, இன்ப உலகமாக்கும்.

உலகின் மொழி இலக்கியக் காடுகளிடையே 25 நூற்றாண்டு பழமை வேரும், புதுமை வளமும் உடைய தமிழ்ப் பேரிலக்கிய மரத்தின் இன்கனி திருக்குறள். அதன் இனிமையை வேத காலம் முதல் தனதாகக் கொண்ட பாரத நாடு அதன் இனிய மணத்தை மீட்டும் உலகில் பரப்புவதன் மூலம் உலகின் ஆன்மீகத் தலைமையைப் பெற்று இறும்பூது எய்தும்.

உலகின் மிகப் பழமையான சிந்து வெளி நாகரிகத்தின் முத்திரைகளில் திருக்குறளின் குறட்பாக்கள் இடம் பெறுவதாகத் திருத்தந்தை ஹீராஸ் கூறுகிறார். திராவிடப் பழங்குடி மக்களின் வாழ்வில் மலர்ந்த இந்தியாவின் அறிவுச் செல்வமான இந்தத் திருக்குறள் உலகத்திற்கே இந்தியா என்னும் ஆறுமூலம் பெருவளம் நல்கும். உலக இலக்கியங்களின் தன்னிகரற்ற முதன்மைப் புதுமை வளம் கொண்ட சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி ஆகிய இலக்கியங்களுடன் பிறந்து, இந்திய இலக்கியப் பண்ணையாகிய சங்க இலக்கியத்தில் மலர்ந்தது திருக்குறள். இலக்கிய உலகில் அதுவும் அதன் சூழலும் பாரத நாட்டிற்கு மீண்டும் இலக்கியத் தலைமை அளித்தல் வேண்டும்.

உலக மொழிகளில் ஒரு வேதத்தைத் தமதாகக்கொண்ட மொழிகள் மிகச் சிலவே. அரபு, ஈப்ரு, பழம் பாரசீகம், பழைய சமஸ்கிருதம் ஆகியவையே அவை. தமிழில் தொடக்கத்திலிருந்தே ஒரு வேத மரபு இருந்து வந்துள்ளது. சைவர்களுக்குத் தேவார திருவாசகங்களும் — வைணவர்களுக்குத் திருவாய்மொழியும், தனித்தனி வேதங்களாகப் போற்றப்படுகின்றன. சமணர்களுக்கு, 'நாலடியார்' ஒரு வேதமாக விளங்கிற்று. இந்த மூன்று வேதங்கள் அல்லாமல் இவற்றுக்கு மூலமான ஆதி தமிழ் வேதமாகவும், மற்ற உலக வேதங்களின் மையமாகவும் உலகப் பொது மறையாக விளங்குவது திருக்குறள். உலக அன்னையின் திருமுகமாகத் திகழும் பாரத நாட்டிற்கு இத்திருக்குறள் மகுடத்தின். அழகுக்கு அழகு செய்யும் திலகமாக அமைவது உறுதி.

பாரதம் விடுதலை பெறும் தறுவாயில் இந்தியாவின் கடைசி ஆளுநர் நாயகமாகப் பொறுப் பேற்றவர் தமிழகத்தின் இதய நாடி அறிந்த ராஜாஜி அவர்கள்; இந்தியாவை ஓர் ஒப்பற்ற குடியரசாக ஆளுவதற்கு மிகச்சிறந்த அரசியல் வேதமாகத் திகழ்வது திருக்குறள்தான் என்பதை அவர் எடுத்துரைக்காத நாள் இல்லை. இதனைச் செயல்முறையில் காட்டும் வண்ணம் அவர் தாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனேயே திருக்குறள் பொருட்பாலில் அரசியலை மையமாகக் கொண்டு அவ்ஏட்டுக்கு ஆங்கில மொழி பெயர்ப்பும் விளக்கமும் தந்து வெளியிட்டார். அரசியல் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்த இந்நூல் பாரத நாட்டின் தேசிய நூல் என்ற முறையில் இந்திய அரசியல் உலகில் ஒரு பேரொளியாகச் சுழல் வீசுவது உறுதி.

உலகில் பண்டைக் காலத்தில் தமிழகமும் பாரத நாடும் உலகின் தங்கக் களஞ்சியங்களாக விளங்கின. இன்று இந்தியாவின் தேசியப் பறவையாக மதிக்கப்படும் மயில் அன்று தமிழகத்தில் மட்டுமே பறவையாக, உலகமெங்கும் அதன் தோகைக்குரிய விலையுயர்ந்த வாணிபச் சரக்காகவே விளங்கிற்று. தமிழகத்தின் மேற்கரையில் இருந்து கீழ்க்கரை வரை செல்லும்பாதையில், மயில் இறகுகள் வண்டியில் ஏற்றப்பட்டுக் கீழ்க்கடல் வழியாகவும் மேற் கடல் வழியாகவும் உலகெங்கும் சென்றன. திருவள்ளுவர் இந்தக் காட்சியை

'அந்தக் காலத்தில் அடிக்கடி பார்த்திருக்க வேண்டும்.

ழீலிபெய் சாகாடும் அச்சிறும்—
அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

—என்று திருவள்ளுவர் இக் காட்சியை வர்ணிக்கிறார். இந்தியாவின் இந்தப் பழம் பெருமையையும் வருங்கால இந்தியப் பெருமையுடனும் வளத்துடனும் ஒன்றிணைக்கும் ஒரு பெரும் புகழ்ப் பாலமாகத் திருக்குறள் அமைய இருக்கிறது.



இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரான டாக்டர். ராதாகிருஷ்ணன் உலக ஆராய்ச்சி பேரறிஞராகவும் விளங்கினார். அதுவரை யூதரின் தலைவரான இசாயாவும், பார்சி மதத்தலைவரான ஜரதுஷ்டிரரும்தான் உலகில் முதன் முதலாக ஒரு கடவுள் கருத்தை உருவாக்கினர் என்று கூறிய மேனாட்டு அறிஞரை மறுத்து இந்தியாவில் உபநிடத கால முனிவர்களே அப்பெருமைக் குரியவர் என்று எல்லோரும் ஒப்ப அவர் ஆராய்ந்து விளக்கினார். ஆனால் வெறும் வேதாந்த ஆற்றலாக மட்டுமின்றி அற முதல்வராகவும் பொருள் முதல்வராகவும், இன்ப முதல்வராகவும் விளங்கும் முழுமைக் கடவுட் கருத்தினை உலகுக்கு முதன் முதலாக வழங்கியவர் திருவள்ளுவரே என்று இன்றைய உலக அறிஞர் கருதுகின்றனர். மனித நாகரிக உலகில் முதல் தேசியமாகவும் முழுநிறை தேசியமாகவும் விளங்கும் இந்தியாவிற்கு, திருக்குறள் ஓர் ஒப்புயர்வற்ற தேசிய நூலாக என்றென்றும் ஒளிவீசவல்லது ஆகும்.

இந்திய மக்களின் பல வளம் செறிந்த தேசிய ஒருமைப்பாட்டின் மாளாச் சின்னமாகத் திருக்குறள் விளங்குமாக!

---

பாவேந்தரின் கவிதை இங்கே
சித்திர வடிவம் பெற்றுள்ளது.



## சேர்த்துக் கட்டிய முல்லை

சேர்த்துக் கட்டிய முல்லை வேண்டுமென்றேன் -இந்தச்
சேயிழை சிரிப்பு முல்லை தந்தாள்
பார்த்துப் பறித்த தாமரைப் பூத்
தீர்த்து விலைக்குக் கொட்டி என்றேன்
பூத்தமுகத் தாமரையால்
புதுமை காட்டி மயங்கி நின்றாள்

# எண்ணும் எழுத்தும்

டாக்டர் வா. செ. குழந்தைசாமி
துணைவேந்தர்
அண்ணா பல்கலைக் கழகம்.

இன்றைய உலகில் அறிவியல் துறையில் நாம் அடைந்திருக்கும் வளர்ச்சி அனைத்தும் கணிதத்தின் அடிப்படையில் அமைந்தவை யாகும். நியூட்டனின் விதிகளும், ஐன்ஸ்டனின் தேற்றமும் கணித மொழியில் அமைந்தவையே. கணிதம் இன்றி அறிவியல் இல்லை. கணிதம் இன்றி அணு யுகம் இல்லை; விண்வெளிப் பயணம் இல்லை. அறிவியலும், தொழில் நுட்பமும் எழுத்தின் அடிப்படையில் அமைந்தவை அல்ல; எண்ணின் அடிப்படையில் அமைந்தவை.

என் என்பது இலக்கம் - என் என்பது கணிதம். என் என்பது மனம். என் என்பது சிந்தனை.

திருவள்ளுவர் கல்விக்கு மிக உயர்ந்த இடத்தைக் கொடுக்கிறார். கல்வி, கல்லாமை, கேள்வி என்ற மூன்று அதிகாரங்களை வகுத்து ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு வகையில் கல்வி யின் இன்றியமையாமையை உரைக்கின்றார். ஆனால் அதில் குறிப்பிடத்தக்கது ஒன்றுண்டு; பொதுவாக வள்ளுவர் கல்வி பற்றிய விவரங் களைப் ( Details ) பற்றிப் பேசுவதைத் தவிர்த்திருக்கிறார். அதனால் கல்வித் துறை யில் ஏற்பட்ட புயல் வேக மாற்றங்கள் அவரது கருத்துக்கள் எவற்றையும் மறுப்பனவாக அமையவில்லை.

எனக் கல்வியையே அடிப்படையாக வைத்துப் படைக்கப்பட்ட இருபது குறள்களிலும், கல்வியின் பெருமை யைப் பலபடப் பேசுகிறார் என்றாலும், கற்க வேண்டியவைகளைப் பட்டியல் போடவில்லை. அரசன் கற்க வேண்டிய அறுபத்து நான்கு கலை பற்றி அவர் பேசவில்லை. இலக்கியம் பற்றியோ, இலக்கணம் பற்றியோ, தத்துவம் பற்றியோ அவர் பேசவில்லை.

என்ன கற்க வேண்டும் என்ற கேள்விக்குக் 'கற்பவை கற்க' என்கிறார். பரிமேலழகர் வேண்டுமானால் 'அறநூலும், நீதி நூலும், யானை, குதிரை, தேர், படைக்கலமென்றி வற்றின் நூல்களும் முதலாயின' என்கிறார். வள்ளுவர் யானையையும், தேரையும் குறிப் பிட்டிருப்பாரானால் அது இன்று பிற்பட்ட நிலையிலுள்ள சமுதாயச் சூழ்நிலையில், முடி சூடி ஆளும் அரசருக்குக்கூட உதவாது. கற்கத் தகுந்தவற்றைக் கற்க என்றார்.

கற்கத்தகுந்தன காலந்தோறும் மாறு வன. இன்றிருக்கும் பல புதிய துறைகள் இந்த நூற்றாண்டின் மத்தியப் பகுதியில்கூட இருக்க வில்லை. கல்வியைப் பல இடங்களில் வற் புறுத்திய வள்ளுவர் அதில் எந்தத் துறை பற்றியும் பேசாது கற்கத் தகுந்தன; அல்லது கற்க வேண்டுவன கற்க; கசடறக் கற்க என்று கூறியிருப்பது நிலைத்தவை எவை, நிலையாதவை எவை என்ற அவரது தொலை நோக்கின் வீச்சைக் காட்டுகிறது.

இவ்வளவு பொதுவாகப் பேசும் வள்ளுவர் ஒரு குறளில் மட்டும் இந்தப் பாதையில் இருந்து சற்று விலகுகிறார். அக்குறளில் எண்ணையும் எழுத்தையும் குறிப்பிடுகிறார்.

''எண்ணென்ப வேனை யெழுத்தென்ப
விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு''

என்பது குறள்.

இது எல்லோரும் அடிக்கடி எடுத்தாளும் குறள்; பலரும் அறிந்த குறள். இதற்கு உரை கூற வந்த பரிமேலழகர், ''அறியாதார் எண்ணென்று சொல்லுவனவும் மற்றை எழுத் தென்று சொல்லுவனவு மாகிய கலைகள் இரண் டினையும் அறிந்தார் சிறப்புடை உயிர்களுக்குக் கண்ணென்று சொல்லுவர்'' என்கிறார்.

பரிமேலழகர் எண் என்பது கணிதம் என் கிறார். எனவே வள்ளுவர் ஒரு துறையை இங்கு வெளிப்படையாகக் குறிப்பிடுகிறார். இக் குறள் நம் மனத்தில் ஒரு கேள்வியை எழுப்பு கிறது: பொதுவாக நாம் கல்வி பற்றி நினைக் கும்பொழுது எழுதப்படிக்கத் தெரிதல்; எழுத்து அதாவது சொல் அடிப்படையில் அமைந்த நூல்களைக் கற்றல்; அதில் தேர்ச்சி பெறுதல் ஆகியவற்றைத்தான் குறிப்பிடு கிறோம்.

தொன்றுதொட்டு இன்றுவரை வையம் முழுவதும் போற்றப்படும் மறைகள் ஆகட்டும், தத்துவங்கள் ஆகட்டும், சமய நூல்கள் ஆகட் டும், அவை அனைத்தும் எழுத்து வடிவில் அமைந்தவைதான். விவிலியமும், குரானும், வேத, உபநிடதங்களும், பகவத்கீதையும், புத் தரின் போதனைகளும், கன்பூசியசின் (Confu- cious) கருத்துரைகளும் எழுத்து வடிவில்தான் இன்றும் வாழ்கின்றன.

காலம் கடந்து நிற்கும் காவியங்களும் கவிதை நூல்களும் எழுத்தில் அமைந்தவையே. வள்ளுவரும், இளங்கோவும், கம்பனும், பாரதி யும், ஷேக்ஸ்பியரும் (Shakespear ), மில்ட்ட னும், ஹோமரும் (Homer), டான்ட்டேயும் (Dante), வால்மீகியும் வியாசரும், காளிதாச னும், கதேயும் (Goethe) இன்னும் அமரகாவி யங்கள் படைத்த கவிஞர்கள் அனைவரும் எழுத்து வடிவில்தான் எழுதினார்கள்.

மனித சமுதாயம் ஒவ்வொரு தலை முறைக்கும் தான் பெற்ற பாரம்பரிய அறிவை யும், தன் காலத்தில் கிடைத்த அனுபவத்தை யும் எழுத்து வடிவில்தான் அடுத்த தலை முறைக்கு விட்டுச் செல்கின்றது. அப்படி யிருக்க, கல்வி என்ற அதிகாரத்தில் அதன் முக்கியத்துவம் பற்றிப் பேச வந்த வள்ளுவர் எண்ணை முதலாவதாக வைத்து அதற்கு அடுத்து எழுத்தை வைத்திருப்பது ஏன் என்ற கேள்வி எழுகிறது. ஓரளவு வியப்பையும் ஏற் படுத்துகிறது.


இக்குறளில் இரண்டாவது வரியில் ''கண் ணென்ப வாழு முயிர்க்கு'' என்று கூற நினைத்த வள்ளுவர், எதுகை கருதி ''எண் ணென்ப'' என்று தொடங்கி இருக்கலாம் என்று ஒரு காரணம் கூறலாம்- எழுதியது வள்ளுவராக இல்லாவிட்டால். வள்ளுவரின் சிந்தனையின் தெளிவையும், சொல்லும் கருத் துக்களை நுட்பத்தொடு தெளிவோடு துல்லிய மாகச் சொல்லும் இயற்கையையும் அறிந்த வர் யாப்புக்கு அடிமைப்பட்டு எண்ணையும் எழுத்தையும் இடம் பெயர்த்து இருக்க மாட் டார் என்பதை உறுதியாக நம்பலாம்.

இரண்டாவதாக ''எண்ணென்ப எழுத் தென்ப'' என்று ஒவ்வொன்றாக வரிசைப் படுத்தி மட்டும் சொல்லவில்லை. ''எண் ணென்ப ஏனை எழுத்தென்ப'' என்று கூறு கிறார். 'ஏனைய' என்று சொல்லும்போதே சொல்லப்படும் பொருள் முதல் இடத்தை இழந்து விடுகிறது. எழுத்திற்கு இக்குறளில் இரண்டாவது இடம் உறுதிப்படுத்தப்பட்டு விடுகிறது. அப்படியானால், கல்வியில் மனித சமுதாயத்தின் அறிவுத்துறையில் எண்ணின் இடம் என்ன என்பது ஒரு கேள்வியாக நம் முன் எழுகிறது.

எண் என்பது கணிதம் என முன்பே கூறினோம். எனவே எண்ணின் முக்கியத்துவம் அதை உறுப்பாகக் கொண்டு அமைந்த கணி தத்தின் முக்கியத்துவம் என்ன என்பதையும், அதை எந்த அளவுக்கு வள்ளுவர் ஆராய்ந்து கூறி இருக்கக்கூடும் என்பதையும் நாம் சிந் திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கணிதம் அறிவியற் கலைகளின் அரசி (The queen of the science) என்று குறிப்பிடப் படுகிறது. அவ்வாறு ஒப்புக்கொள்ளப்படு கிறது. உலகிற்கு அறிவியல் ஆய்வு முறை என்ற ஒரு பாதையை வகுத்துக் கொடுத்த





கலிலியோ (Galeileo) ''இயற்கை என்னும் பெரிய நூல் கணிதக் குறியீடுகள் மூலம் எழு தப்பட்டு இருக்கிறது'' என்று சொன்னார். (Nature's great book is written in mathematical symbols - Galeileo) கிரேக்க அறிஞர் களில் தலைசிறந்தவராகக் கருதப்படும் பிளேட்டோ ''கடவுள் வடிவ அமைப்பையே தனது முழு நேரத் தொழிலாகக் கொண்டிருக் கிறார்'' (God ever geometrises- Plato) என்று கூறினார். அதைப்போலவே பித்தகோரஸ் (Pythagorean) கொள்கையைச் சேர்ந்த ஒருவர் கி.மு. ஆறாவது நூற்றாண்டில் கீழ்க்கண்ட வாறு கூறுகிறார்:

''தெய்வ அம்சம் பொருந்திய எண்ணே, எங்களை வாழ்த்துவாயாக! நீதான் மனிதர் களையும் கடவுளர்களையும் உருவாக்கு கிறாய்'' (Bless us, divine Number; thou who generatest gods and men.)

அண்மையில் ஒரு கணித, வானியல் நிபுணர், 'இவ்வுலகைச் சமைத்த இறைவன் ஒரு கணித நிபுணனாக இருக்க வேண்டும்' (. . . . the Great Architect of the universe is a great mathematician) என்று அறிவித்தார். குடியரசுத் தத்துவத்தின் தந்தை என்று கூறப் படுபவரும், சாக்ரடீசின் மிகச் சிறந்த மாண வருமான பிளேட்டோ (Plato) தனது கல்வி நிலையத்தின் வாயிலில் கீழ்க்கண்டவாறு எழுதி வைத்திருந்தார்:

'' வடிவ கணிதம் அறியாதவர்கள் உள்ளே வர வேண்டாம்'' (Let no man ignorant of geometry enter here.)

மாவீரனான அலெக்சாந்தர் யூரிப்பிடீஸ் (Euripides) எழுதிய நாடகத்தை எப்பொழுதும்


கன்பூசியஸ்


சாக்ரடீஸ்


பிளேட்டோ


அரிஸ்டாடில்

தம்மோடு எடுத்துச் செல்வார். போர்க்களத்திற்குக் கூட அக்காவியம் கூடவே செல்லும் என்று கூறப்படுகிறது. ஆனால் யூரிப்பிடீசின் நாடகத்தைப் படியாதவர்கள் உள்ளே நுழைய வேண்டாம் எனப் பிளேட்டோ எழுதவில்லை.

எண்ணை, கணிதத்தை, கடவுள் என்றும், கடவுளே ஒரு கணித மேதையாக இருக்க வேண்டுமென்றும், வடிவ அமைப்புப் பண்பே அவரது வாழ்வில் ஈடுபாடாக இருக்க வேண்டும் என்றும், பலவாறு வியந்து கூறியவர்கள் சாதாரண மனிதர்கள் அல்லர். தலைமுறை தலைமுறையாக எண்ணற்ற அறிஞர்களால் ஈடுஇணையற்ற மேதைகள் என்று போற்றப் படுபவர்கள்.

நம்மில் பலர் இதுவரை புரிந்து கொள்ளாத, ஆனால் புரிந்து கொள்ள வேண்டிய அளவுக்கு எண்ணுக்கும் அதன் அடிப்படையில் அமைந்த கணிதத்திற்கும் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது என்பது இதிலிருந்து தெளிவாகிறது.


பித்தகோரஸ்


கலிலியோ


தாந்தே


ஷேக்ஸ்பியர்


இன்றைய உலகில் அறிவியல் துறையில் நாம் அடைந்திருக்கும் வளர்ச்சி அனைத்தும் கணிதத்தின் அடிப்படையில்தான் அமைந்தவையாகும். நியூட்டனின் விதிகளும், ஐன்ஸ்டனின் தேற்றமும் கணிதமொழியில் அமைந்தவையே. கணிதம் இன்றி அறிவியல் இல்லை. கணிதம் இன்றி அணுயுகம் இல்லை; விண்வெளிப் பயணம் இல்லை; அறிவியலும், தொழில் நுட்பமும் எழுத்தின் அடிப்படையில் அமைந்தவை அல்ல; எண்ணின் அடிப்படையில் அமைந்தவை.


பண்டைக்காலத்தில் தத்துவ அறிஞர்கள் என்று கூறப்பட்ட பல மேதைகள் அதே சமயம் கணித மேதைகளாகவும் இருந்திருக்கின்றனர். இன்று மனிதவாழ்வில் பெரிய புரட்சியை ஏற்படுத்தி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் கணிப்பொறி '0' '1' என்ற இரண்டு எண்களின் அடிப்படையில் செயல்படுவதுதான்.


இதில் முழுவதுமாக எண்ணை அடிப்படையாகக்கொண்ட குறியீட்டுமொழிகளைத் தான் பயன்படுத்துகிறார்கள். எனவே 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப' என்று கூறிய வள்ளுவர் இடத்தையும் எழுத்தின் இடத்தையும் ஆழமாக, அறிவார்த்தமாக அறிந்தே எழுதி இருக்கிறார். அன்றைய உலகின் அறிவுத் துறைகள் பலவற்றின் வளர்ச்சியை முழுமையாக உணர்ந்து, அதன் அடிப்படையில் தனது அணுகுமுறையை வகுத்திருக்கிறார் என்பது புரிகிறது.


அவர் எடுத்துக்கொண்ட பொருள் எதுவாயினும் அதன் நிறை குறை அனைத்தையும் அணுஅணுவாக ஆய்ந்து அவற்றில் காலம்,இடம் இரண்டும்கடந்து நிற்கும் தன்மை வாய்ந்த உண்மைகளை மட்டும் இயன்ற அளவில் அசாதாரண தன்மையுடன் வடித்தெடுத்துச் சொல்லும் உத்தியைத் தனது நூல் முழுவதும் பெரும்பாலும் கையாண்டிருக்கிறார்.

எண் என்பது இலக்கம்-எண் என்பது கணிதம். எண் என்பது மனம். எண் என்பது சிந்தனை. தமிழர்கள் மனத்திற்கும், மனத்தில் எழும் சிந்தனைக்கும், சிந்தனையின் உயர்ந்த நிலையில் உருவாகும் கணிதத்திற்கும் ஒரே சொல்லைப் பயன்படுத்தியிருப்பது வியக்கத்தக்க ஒன்றாகும். தமிழகத்தின் அன்றைய அறிவு வளர்ச்சிக்கு ஒரு உட்சான்றாகவும் சொல்லலாம்.


மில்டன்


சர் ஐசக் நியூட்டன்


ஐன்ஸ்டீன்


பாரதியார்

# விடியும் ஒரு புதிய நாள்

செ. யோகநாதன்

கும்மிருட்டு! வானத்தில் பொட்டுப் பொட்டாய்ப் பளபளக்கின்ற நட்சத்திரங்கள்தான், இருளிற்குள் வெளிச்சத்தைத் தூவிக் கொண்டிருந்தன. ஒவ்வொரு அலையும் குபுக்கென்று மேலே உயர்ந்து நுரை சீறி மடார் மடாரென்றுகீழே விழுந்துகொண்டிருக்கையில் அந்த விசைப் படகும் தத்தளித்து மேலும் கீழுமாய் ஆடிக்கொண்டே தவித்தது.

அலைகளின் ஒவ்வொரு மோதலும் விசைப்படகை உலுப்பி அசைத்தபோது படகினுள்ளே இருந்தவர்கள் அச்சத்தால் நடுங்கி ஒருவரை ஒருவர் பற்றிக் கொண்டனர். சிலர் வாய்விட்டு அழுதனர். மொத்தம் இருபத்து நான்கு பேர் அந்த விசைப்படகினுள்ளே இருந்தனர். எட்டு ஆண்கள், ஆறு பெண்கள். பத்துக் குழந்தைகள். குழந்தைகள் இடையிடையே வீரிட்டு அழுதன.

கடலின் அலை சிதறுகையில் உப்புநீர் துள்ளியெழுந்து படகினுள் சட்டென்று விழுகின்றபோது அதன் ஈரத்தால் குழந்தைகள் உடல் குளிர்ந்து, கண் எரியக் கண் விழித்துமிரண்டு அழுதனர். வாயில் கரித்த உப்புநீர், உடலையும் நனைத்து கூதல் காற்றில் நடுங்க வைத்தது.

மாணிக்கம் வானத்தையே பார்த்தவாறிருந்தான். அவனுக்கும் நெஞ்சைப் பிளந்துகொண்டு அழுகை வந்தது. ஆனால் அழுவதற்குத் தோன்றாதவாறு மனதைத் தைரியப்படுத்திக் கொண்டான். கடல் அவனுக்கு அன்புக்குரிய தாய். பிறந்த நாளிலிருந்தும், அவன் பரம்பரை பரம்பரையாகவும் கடல்தான் அவனது வாழ்விலே எல்லாவற்றுக்கும் ஆதாரமான தாய். தாயின் மடியிலே இருந்து யாரும் அழக்கூடாதென்று அவனுடைய தாத்தா அடிக்கடி சொல்லுவார். கடலிடையே எத்தனையோ, சுழிக் காற்றுகளில் மாணிக்கம் சிக்கியிருக்கின்றான். அப்போதெல்லாம் மனம் அஞ்சியதில்லை அவன். அலைகளைத் துச்சமாயெண்ணி, படகைப் பத்திரமாகக் கரைக்குக்கொண்டு வந்து சேர்க்கிறபோது உற்சாகமும் ஆனந்தமும் அவனது கண்களிலே பளிச்சிட்டுத் தெரியும்.

ஆனால் இன்றைக்கு?

இன்றைக்கு அவன் படகோட்டி இல்லை. கடலின் ஆழந்தேடி மீன்களைப் பிடித்து வருகின்ற மீனவனும் அல்ல. மாணிக்கத்தின் முகத்தில் அலைநீர் படீரென்று அறைந்து சிதறிற்று. வாயிலே உப்புக்கரித்தது. தூவென்று துப்பினான்.

வானம் மெதுமெதுவாய் இருளினை இழந்து கொண்டிருந்தது. அடிவானிலே விடிவெள்ளி தங்கக் குழம்பாய் ஒளிர்ந்திருந்தது. இதே நேரத்திலேதான் மாணிக்கம் தனது வீட்டிலிருந்து மீன்பிடி வலைகளையுமெடுத்துக் கொண்டு கடலிற்குப் புறப்படுவான். அப்போது கடற்கரையிலே அவனது படகிற்கு அருகே கணபதியும் நடராசனும் நிற்பார்கள். பிறகு மூவருமாக படகிலே ஏறி கடலுக்குள் செல்வார்கள். அது எவ்வளவு அமைதியான காலம்! கடலும் வீடுமே வாழ்வாகிப் போன கவலையேதுமில்லா அந்த வாழ்வு எவ்வளவு பரிதாபகரமாகச் சிதறிப்போய் சின்னாபின்னமாகி.....

அவனுக்கு வீட்டிலிருந்து புறப்படக் கொஞ்சங்கூட இஷ்டமில்லை. அவன் பிறந்ததிலிருந்து இன்று வரை, இந்த இருபத்து நாலு வயது வரைதான் இருந்த வீட்டை விட்டு எங்குமே போனதில்லை. அப்படிப் போகவும் அவன் விரும்பியதில்லை. அந்தச் சிறிய வீடு. சுற்றியுள்ள தென்னை மரங்கள். வீட்டு முற்றத்திலே இதமான நிழல் விழுத்தியிருக்கின்ற வேப்பமரம், வேப்பமரத்திலேயே எப்போதும் ஓடியாடி விளையாடிக் கொண்டிருக்கின்ற அணிற் பிள்ளைகள். கண்ணைச் சரித்து, கரைந்து சோம்பலோடிருக்கின்ற காகங்கள் அதனடியில் படுத்திருக்கிற மாடுகள், வேப்பமரத்தின் இடது புறத்திலேயுள்ள கிணறு. அதைச் சுற்றிப் பசுமையாக, கூடிநின்று பேசுகிற நண்பர்களான வாழை மரங்கள்...

''இனி ஒரு நிமிஷங்கூட நீ இங்கே நிற்கவேண்டாம்; மகனே முப்பத்தைந்து வயதிற்குட்பட்ட எல்லா இளைஞர்களையும் ராணுவத்தினர் வந்து பிடித்துக்கொண்டு போகிறார்கள். நீ இங்கிருந்து புறப்பட்டுப் போனால் நாங்கள் எந்தக் கஷ்டத்தையும் சமாளித்து விடுவோம்..'' என்று அவனை அவனது தாய் கைகளைப்பிடித்துக் கொண்டே கெஞ்சினாள். மாணிக்கத்திற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கண்களில் கசிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, ''அம்மா, நான் இங்கிருந்து போய்விட்ட பிறகு நீ எப்படிக் கஷ்டம் இல்லாமல் வாழ முடியும்?'' என்று கவலையோடு கேட்டான்.

அதைக்கேட்ட அவனது தாய் வேதனையோடு புன்னகை செய்தாள்.

''எல்லோருக்கும் உள்ளது தானே எனக்கும்! நீ ஒன்றுக்கும் பயப்படாதே. இந்தக் கிராமத்திலே உள்ள நாம் அனைவரும் கோயில்களில்தான் தஞ்சம் அடையப் போகின்றோம். ஆகையினால் நீ ஒன்றுக்கும் பயப்படாமல் இங்கிருந்து புறப்படு, நேரமாகிவிட்டது.''

தான் கவலையடையாமல் அங்கிருந்து புறப்படவேண்டுமென்பதற்காகவே தனது தாய் மிகவும் நிதானமாகவும், கலக்கமின்றியும்பேசுகின்றாளென்பதை மாணிக்கம் நன்றாகவே அறிவான். தான் அங்கிருந்து புறப்பட்டதும் அவள் எப்படி நிலைகுலைந்து போய், கதறியழுவாள் என்பதனையும் அவன் நன்றாகவே அறிந்திருந்தான். அந்தக் காட்சியை நினைத்தபோதே அவனுக்கு மனம் கனத்தது. தளதளத்தது.

''சரி..படகு, புறப்பட ஆயத்தமாகிவிட்டது...புறப்பட்டு வா'' என்ற கரகரத்த குரல் மாணிக்கத்தை சுயநினைவுக்குக்கொண்டு வந்தது. குரல் வந்த திக்கினைப் பார்த்தான். விசைப்படகின் சொந்தக்காரன், அவசரப்படுகின்ற முகத்தோடு நின்றிருந்தான்.

''போனவுடன் கடிதம் போடு மகனே..'' என்றாள் தாய். அப்போது அவளது குரல் தளதளத்தது. மாணிக்கத்தின் கண்களில் பொட்டென்று கண்ணீர் உடைந்தது.

# முனுசாமியின் முன் யோசனை




முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

(ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

**இன்சூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**



''எந்த முகவரிக்கு...அம்மா?''

தாயால் அந்தக் கேள்விக்குப் பதிலே சொல்ல முடியவில்லை. வெறுமையான முகத்தோடும், மனத்தோடும் மாணிக்கத்தைப் பார்த்தாள். அவன் கேட்ட கேள்விக்கு என்ன பதிலைக் கூற முடியும்..?

மாணிக்கம் அங்கிருந்து புறப் பட்டான்.

விசைப்படகு கிளம்பியபோது தனது கடலோரக் கிராமத்தை அவன் திரும்பிப் பார்த்தான். ஓவென்று அழுது கொண்டு திரும்பவும் ஓடிப்போய்த் தனது வீட்டின் முற்றத்திலே நிற்க லாமா என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தபோது விசைப் படகு, கடற்கரையிலிருந்து தமிழ் நாட்டுக் கடற்கரையை நோக்கி வேகத்துடன் புறப்பட்டது....... சளாரென்று எழுந்த அலைக் கரம் அவனது முகத்திலே முரட் டுத்தனமாக அறைந்து அவனது கண்ணீரைத் துடைத்தது.

அவனது அம்மா அவனை அங்கிருந்து துரத்தியதற்கு நிறையவே நியாயங்கள் இருந் தன. மாணிக்கத்தின் வய தொத்த நான்கு நண்பர்கள் இரண்டு வாரங்களிற்குள் துப் பாக்கிக் குண்டுகளுக்கு அநியாய மாக இரையாகினார்கள். அப் போது அவனது தாயார் கண்ணீர் மல்க, ''அந்த நாளிலே கம்சன் எல்லா ஆண் குழந்தை களையும் கொன்று குவித்தாற் போல நிலைமைதான் இப்போது மிருக்கிறது. எனக்கு உன்னை விட்டால் வேறு நிம்மதியே இல்லை..மாணிக்கம், இங்கே யிருந்து நீ போய்விடு மகனே...'' எனறு அவனைக் கெஞ்சிக் கேட் டாள. அடுத்த வீட்டுக கனகம் பாட்டியும், மங்கையர்க்கரசியும் இதைத்தான் சொன்னார்கள். கடைசியில் மாணிக்கம் அங்கி ருந்து புறப்படச் சம்மதமானான்.

திடீரென்று கடற்கரைக் கிராமப் பககமாக விமானம் ஒன்று சீறிக்கொண்டு சென்ற தனை மாணிக்கம் கண்டான். அவனைப் போலவே அவனுக்கு அருகேயிருந்த சுந்தரமூர்த்தியும் அநத விமானத்தைக் கண்டு பதறிய குரலில், 'மாணிக்கம் அணணா, அது குண்டு வீசுகிற 'பொம்பர் விமானம்' என்று தான் நான் நினைக்கிறேன்....'' என்றார். மாணிக்கத்தின் உடல் அவனையறியாமலே பதறியது.

''அண்ணா படகைத் திருப்பிக் கரைக்கு விடுங்கள்..'' என்று நடுங்குகிற குரலில் தன்னையறி யாது கூறினான் மாணிக்கம். திரும்பிப் போனால் நாம் ஒருவர்கூடத் தப்ப முடியாது. அதைவிடக் கொடுமை உயிரோடு பிடிபடுவதும், சித்திரவதைப் படுவதும்தான்'' என்று பரிவான குரலில் ஆனால் உறுதியோடு கூறினார் படகுக்காரர்.

அப்போது அவர்கள் புறப்பட்ட கடற்கரையோரப் பக்கமாசத் திடீர் என்று பலத்த ஓசையுடன் குண்டுவெடித்த சத்தம்கேட்டது. அதைத்தொடர்ந்து தீ நாக்குகள் இருளிடையே சிவந்து நெளிந்து எழுந்தன. ஒன்றையொன்று தாவிக்கொண்டு இருள்திரை யினில் ஏறி ஏறி எரிந்தன. பெரு நெருப்பு ஜுவாலைகள்...

மாணிக்கத்தால் எதையுமே பேச முடியவில்லை. அவன் வாய டைத்து கண்கள் குத்திட்ட நிலையில் உட்கார்ந்திருந்தான். அவனது கண்களின் முன்னேயே அவனுக்கு உறவான எல்லாமே எரிந்து புகைந்துகொண்டிருந்தன.

பளீரென்று அலையொன்று சிதறி உடைந்தது. படகு அந்த வேகத்திற்குத் திமிறியெடுத்து அலையோடு ஒட்டியவாறே மேலே எழுந்து, அதே அலை யோடு கீழே இறங்கி நீரினுள் விரைந்தது.

இலேசாகக் கண்ணயர்ந்திருந்த மாணிக்கம் திடீரென்று கண் விழித்தான். அலைகளின் ஆர்ப் பரிப்பு தணிந்தாற்போல உணர்ந் படி சுற்று முற்றும் பார்த்தான். கடற்கரை மங்கிய வெளிச்சத் திலே அழகிய ஓவியம் போலத்

தெரிந்தது. நேற்று நடந்தது எல்லாம் கனவுதானா என நினைத்தவாறே படகைப் பார்த் தான். சுந்தரமூர்த்தியும் இப் போது அவனைப் பார்த்தான். நடந்ததெல்லாம் உண்மையான சம்பவமேஎன நினைத்த அவனது மனம் மீண்டும் விம்மிற்று. 'இனி எங்கே போய், எப்படி, முகமே தெரியாத மனிதர்களின் நடுவே எவ்விதம் வாழ்வதென்று' நினைத்தவாறே படகிலேயே உட்கார்ந்திருந்தான் மாணிக்கம். அவனுக்கு என்ன செய்வதென்றே தொியவில்லை. விசனமாய் அழுத்தது மனம்.

''என்ன இது? கரைக்கு இறங்கி வர உங்களுக்கு விருப்ப மில்லையா?'' என்று கேட்ட குரலில் மாணிக்கம் நிமிர்ந்து பார்த்தான். அவனுக்கு எதிரே முழங்காலளவு நீரினுள் இரண்டு இளைஞர்கள் நேயமான பார்வை யோடு நின்றனர்.

''நீங்கள் யார்?'' என்று அவர் களைப் பார்த்துக் கேட்டான் மாணிக்கம்.

அந்த இளைஞர்கள் அவனைப் பார்த்துப் புன்னகை செய்தனர். அவர்களில் ஒருவன் மாணிக் கத்தை நோக்கி 'நாங்களா, நாம் உமது சொந்தச் சகோதரர்கள்..' என்றவாறு அவனின் கைகளைப் பற்றி, ''கீழே இறங்குங்கள்'' என்றான்.

மாணிக்கம் அவனது கையைப் பற்றியவாறே கீழே இறங்கினான். அப்போது அவனின் கண்கள் கலங்கியிருந்தன. ஏனோ தெரிய வில்லை. மனதினுள்ளிருந்து விம்மலொன்று முதன் முறை யாகச் சுழித்தெழுந்தது.

# சோவியத் பூங்காவில் தமிழ் மலர்கள்

உலக இலக்கியச் செல்வங்களில் சிறந்த கூறுகளை எல்லாம் கற்றுத் தேர்ந்து அவற்றைத் தமதாக்கிக் கொண்டு சொந்த இலக்கிய வளத்தைப் பெருக்குவதில் சோவியத் மக்கள் காட்டும் ஆர்வம் அளப்பரியது.

இந்திய நூல்களை அச்சேற்றுவதற்கென்றே சோவியத் ஒன்றியத்தில் உள்ள 'முன்னேற்றப் பதிப்பகத்தில்' இந்தியப் பிரிவு கடந்த 30 ஆண்டுகளாக மாஸ்கோவில் செயல்பட்டு வருகிறது. இப் பதிப்பகத்தின் இந்தியப் பிரிவில் உள்ள 13 இந்திய மொழிகளில் தமிழும் ஒன்றாகும்.

1950-ஆம் ஆண்டு வாக்கிலும் 1960-ஆம் ஆண்டு வாக்கிலும் சோவியத் நாட்டு அறிஞர்கள் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். இதனால் ஆந்திரனோவும், செமியோன் ரூதினும் (செம்பியன்) செய்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளி வந்தன.

மிகையில் ஆந்திரனோவ் 1954 இல் தனது முதுகலைப் பட்டத் தேர்வுக்காக 'வங்காளி மொழியில் திராவிட அம்சங்கள்' என்ற ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தார்.

தமிழ் நாட்டுக்கு வந்து டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, பி. சி. லிங்கம், எஸ். அமீது ஆகியோரிடம் தமிழ் பயின்ற மிகையில் ஆந்திரனோவ் 1960-ஆம் ஆண்டுவாக்கில் தமிழ் இலக்கண நூல் ஒன்றை ரஷ்யமொழியில் வெளியிட்டார்.

ரஷ்ய மொழி இயலில் புகழ் மிகு வல்லுநரான எஸ். புலிக் தமிழ் மொழி பற்றி எழுதியிருந்த வற்றிலிருந்து இவர் பலவற்றைத் தெரிந்து கொண்டார்.

தமிழ் மொழியைக் கற்றுணர்ந்த மூதல் ரஷ்யரான ஜெராகிம் லெபதேவ் நூல்களையும் படித்துப் பயன் பெற்றார்.

இவர் (ஆந்திரனோவ்) எழுதிய தமிழ் பற்றிய நூல்கள் :—

*(1) தமிழ் மொழி (1960)*

*(2) பேச்சுத் தமிழும் அதன் வட்டார வழக்குகளும் (1962)*

*(3) திராவிட மொழிகள் (1965)*

*(4) தமிழிலக்கணம் (1916)*

*(5) ரஷ்ய - தமிழ் அகராதி*

1959-ஆம் ஆண்டிலேயே தமிழ்ச் சிறுகதைகள் முதன் முதலாகரஷ்யவாசகர்கட்குப்படிக்கக் கிடைத்தன. இந்திய எழுத்தாளர்களின் சிறுகதைகள் என்ற தொகுப்பு ஒன்றில் கு. அழகிரிசாமி, கி.வா. ஜகந்நாதன், தி. ஜானகிராமன்—ஆகிய தமிழ் எழுத்தாளர்களின் கதைகளும் இடம் பெற்றிருந்தன.

மிகையில் ஆந்திரனோவ் தனது டாக்டர் பட்டத்துக்கான ஆய்வுரையை 1960-ல் சமர்ப்பித்தார். **இதுவே தமிழ்மொழி தொடர்பாக சோவியத் ஒன்றியத்தில் சமர்ப்பிக்கப் பெற்ற முதலாவது ஆய்வுரை.**

1961-ல் இப்ரகிமோவ் புதுமைப்பித்தனின் கதைகள் பலவற்றை மொழி பெயர்த்தார். அவை தனித் தொகுதியாகவே வெளி வந்தன.

1965-ல் ரஷ்ய - தமிழ் அகராதி வெளிவந்தது, 1960- ஆம் ஆண்டிலேயே தமிழ் - ரஷ்ய அகராதி வெளியாகிவிட்டது. இதில் 38,000 சொற்கள் உள. அலெக்சாண்டர் பியாதிகோர்ஸ்கியும் ரூதினும் இதனை உருவாக்கினர். 1968-ல் சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்கு சோவியத்து நாட்டிலிருந்து வந்த இப்ராகிமோவ் இனிக்கும் செய்தி ஒன்றை வெளியிட்டார்.

பாரதிபித்தன்

உலக இலக்கியங்களில் சிறப்பான பகுதிகளைக் கொண்ட உலக இலக்கியத் திரட்டு என ஒன்றை மாஸ்கோ பெல் லெட்டர்ஸ் என்ற நிறுவனம் வெளியிட ஏற்பாடு செய்திருப்பதாகவும் அதில் திருக்குறள் இடம் பெறும் என்றும் அவர் குறிப்பாகச் சொன்னார்.

அவருக்கு முன்னரே திருக்குறளை ரஷ்ய மொழியில் உரை நடையில் யூரிகிளாஸோவ் என்பவர் மொழியாக்கம் செய்திருப்பதை அடிப்படையாகக் கொண்டு இவர் திருக்குறளைக் கவிதை வடிவில்மொழிபெயர்த்து வரும் செய்தியையும் வெளியிட்டார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் சில கவிதைகள், கல்கியின் 'அலை ஓசை', ஜெயகாந்தனின் 'வாழ்க்கை அழைக்கிறது', லட்சுமியின் 'பெண் மனம்' ஆகிய படைப்புக்களும் புதுமைப்பித்தன், கு. அழகிரிசாமி, ரகுநாதன் உள்பட சில எழுத்தாளர்களின் சிறுகதைகளும்—இவரால் ரஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன.

**சோவியத் நாட்டில் தமிழ் வளர்ச்சி பெற்று வருவதை தொகுத்துச் சொல்கிறது இந்தக் கட்டுரை**

இந்த நூல்களுக்கு சோவியத்து நாட்டில் கிடைத்த வரவேற்புப் பற்றி இவர் கூறுவது தமிழர்களுக்கு மிகுந்த மனநிறைவளிக்கக் கூடியது. இத்தகைய நூல்களை வழக்கமாக 30,000 முதல் 50,000 படிகள் வரை அவர்கள் அச்சடிப்பது வழக்கமாம். அவை உடனே விற்றுப் போய் விடுகின்றன என்கிறார் இவர். இவர் மொழி பெயர்த்த கல்கியின் அலைஓசையின் 30,000 படிகள் ஒருசில நாட்களிலேயே விற்பனையாகிவிட்டன என்று இவர் கூறுவது நமக்கு வியப்பையே அளிக்கும்.

1960-ல் தமிழ் மொழி பற்றி ஆய்வுரை தந்த மிகையில் ஆந்திரனோவ் 1971-ல் திராவிடமொழி இயலில் டாக்டர் பட்டம் பெற்றார். இன்றைய பேச்சுத் தமிழுக்கு உலகிலேயே முதன் முதலாக இலக்கணம் எழுதியவர் இவரே.

1971-ல் தமிழ் எழுத்தாளர்

களின் சிறுகதைத் தொகுப்பான 'கோவில் விளக்கு' ரஷ்ய மொழியில் வெளிவந்தது. இதில் புதுமைப்பித்தன், பி. எஸ். ராமையா, கி. வா. ஜகந்நாதன், அகிலன், ஜெயகாந்தன் முதலானோர் எழுதிய கதைகள் அடங்கியுள்ளன.

1971-க்கு முன்னரே அகிலன் ரஷ்ய மக்களுக்கு அறிமுகமாகிவிட்டார் என்பது சென்னைப் பல்கலைக் கழகத்தில் நவீன இலக்கியம் பயின்ற தத்யானா கிரீச்சினாவின் கூற்றால் நமக்கு விளங்குகிறது.

1973-க்கு முன்பே திருக்குறளும், சிலப்பதிகாரமும் ரஷ்ய மொழியில் வெளி வந்துவிட்டன.

இவை தவிர காரைக்காலம்மையார்புராணம் உள்ளிட்ட சில புராணங்களும், மணிமேகலை கதையும் ரஷ்ய மொழியில் வெளிவந்துள்ளன.

மத்திய காலத் தமிழ்ச் சமய இலக்கியங்களும், தத்துவ நூல்களும் சோவியத்து இந்தியயியல் வல்லுநர்களால் ஆராயப்பட்டுள்ளன.

திருமதி துருப்னிகோவா தமிழ் பயிலும் சோவியத் மாணவர்கட்கென்றே ஒரு பாடப் புத்தகம் தயாரித்துள்ளார். இது 1973 ஆம் ஆண்டிலேயே நடந்து முடிந்துவிட்டது.

1973-க்கு முன்னரே ஏமாந்த குள்ளநரிகள் என்னும் பழந் தமிழ்க் கதைகள் ரஷ்யமொழியில் பெயர்க்கப்பட்டு விட்டன.

1979-ஆம் ஆண்டில் 'ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்ட கவிதைகள்'—என்ற தலைப்பில் சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டில் அடங்கும் 'மதுரைக் காஞ்சி' 'திருமுருகாற்றுப்படை' ஆகியனவும், எட்டுத் தொகையில் அடங்கும் அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை முதலியவற்றில் சில செய்யுள்களும் ரஷ்யமொழியில் மொழியாக்கம் செய்து வெளியிடப்பட்டுள்ளன. அனதொலி நய்மான் என்பவர் இதனை உரை நடையில் எழுத அலெக்சாந்தர் துபியான்ஸ்கி என்பவர் இவற்றிற்குக் கவிதை வடிவம் தந்துள்ளார்.

ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்ட கவிதைகள் என்று இவற்றிற்கு அவர்கள் மகுடஞ் சூட்டியிருப்பதிலிருந்தே இதன் தொன்மையை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளமை நமக்குப் புலனாகிறது.

பட்டினப்பாலை முல்லைப் பாட்டு ஆகிய சங்க இலக்கியங்களும் பின்னர் மொழிபெயர்க்கப்பட்டு விட்டன.

மதுரை நகரில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட சோவியத்துப் பிரதிநிதி டாக்டர் அலயேவ் 'மத்திய காலச்சோழர்களின் ஆட்சியில் நிலவுரிமை'' என்பது பற்றியும், டாக்டர் பிசிசினா புதுமைப்பித்தன் படைப்புக்களின் யதார்த்தத் தன்மை என்பது பற்றியும் ஆய்வுக் கட்டுரைகள் படித்தனர்.

மாஸ்கோவிலும், லெனின்கிராடிலும் உள்ள கல்விக் கழகங்கள் பலவற்றில் தமிழ் கற்பிக்கப்படுவதாக டாக்டர் அலயேவ் அப்போது குறிப்பிட்டார்.

மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகத்தின் இந்தியப் பிரிவுத் தலைவரான திரு வர்லெந்தின் வி. அனிசோவ் முன்னேற்றப் பதிப்பகம் 1981 வரை வெளியிட்ட 2500 நூல்களில் 282 நூல்கள் தமிழில் உள்ளன என்ற தகவலைத் தருகிறார்.

1981-ஆம் ஆண்டு வாக்கில் ஜெயகாந்தன் கதைகளில் ஆறை மட்டும் மொழி பெயர்த்து ஒரு நூலாக வெளியிட்டனர். ஒரே வாரத்தில் 15,000 படிகள் விற்பனையாகி விட்டனவாம். கவிஞர் பரிணாமன் எழுதிய 'திறந்தே இருக்கின்றன' என்ற குறுநாவலை மொழி பெயர்த்து மதமும் விஞ்ஞானமும் என்ற ரஷ்ய சஞ்சிகையில் சோவியத்துத் தமிழறிஞர் டாக்டர் வித்தாலிஃ பூர்ணிகா வெளியிட்டார். வித்தாலி ஃபூர்ணிகா முன்னேற்றப் பதிப்பகம் தமிழ்ப் பிரிவில் பணியாற்றுகிறார். இவர் பாரதியையும் உக்ரேனிய கவிஞர் தராஸ் ஷெவ் சேன்கோவையும் ஒப்பிட்டு ஆய்வு செய்வதற்காகத் தற்போது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் வந்து தங்கியுள்ளார்.

அநேகமாக எல்லா சோவியத் தலைநகரங்களிலும் பாரதி நூற்றாண்டு விழா கொண்டாடப் பெற்றது என்பது ங்குக் குறிப்பிடப்பட்டது.

டாக்டர் ஸ்வெத்லெனா துருப்னிகோவா தற்காலத் தமிழ் இலக்கியத்தை ஆராய்ந்து வருகிறார்.

டாக்டர் வித்தாலி ஃபூர்ணிகா தற்காலத் தமிழ்க் கவிதைகளை



**தற்காலத் தமிழ்க் கவிதையை ஆய்ந்து வரும் ரஷ்யர் டாக்டர் வித்தாலி ஃபூர்ணிகா**

ஆராய்வதை ஒரு பெருந்திட்டமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறார்.

டாக்டர் பைச்சிகினா என்பவரும் தற்காலத் தமிழிலக்கியத்தை ஆராய்ந்து வருகிறார்.

இந்திய இயலாளரும் ஆதிகால இந்திய எழுத்துக்களை இனம் கண்டறிவதில் நிபுணருமான டாக்டர் நிகிதா குரோவ் லெனின் கிராடு பல்கலைக் கழகத்தில் தமிழ் பயிற்றுவித்து வருகிறார். திரு துபியான்ஸ்கி மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் பண்டைத் தமிழிலக்கியங்களைக் கற்பித்து வருகிறார்.

மேலே சொல்லப்பட்ட தமிழ் எழுத்தாளர்கள் படைப்புக்கள் மட்டுமன்றி டாக்டர் மு.வ. அசோகமித்ரன், இந்திரா பார்த்தசாரதி, ஆதவன் ஆகியோர் படைப்புக்களும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

சோவியத் ஒன்றியத்தில் வெளியிடப் பெறும் இந்திய மொழி நூல்களின் தலைப்புக்களின் எண்ணிக்கையில் இந்திக்கு அடுத்த இடம் தமிழுக்கே என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் மொத்தம் அச்சிடப் பெறும் படிகளின் எண்ணிக்கையில் தமிழ் முதலிடம் பெற்றுள்ளது.

பைலோ ரஷ்ய ஓவியரும், நேரு பரிசு வெற்றியாளருமான ஜார்ஜி பாப்லாவ்ஸ்கி திருக்குறளுக்குச் சித்திரங்கள் தீட்டியுள்ளார் என்பது எண்ணி மகிழத்தக்கது.



வில் அப்போது வசித்து வந்த வில்சன் என்பவர் வகைப்படுத்திப் பட்டியல் தயார் செய்தார்.

மெக்கன்சி தொகுப்பின் ஒரு பகுதி 1823, 1825 மற்றும் பிற்பட்டதொரு ஆண்டிலும் மூன்று பிரிவுகளாக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது. இரண்டாவது பகுதி கல்கத்தாவில் வைக்கப்பட்டது. மூன்றாவது பகுதி சென்னைக்கு அனுப்பப்பட்டது.

மெக்கன்சி தொகுப்புகள் இப்போது, லண்டன் நகரிலுள்ள இந்தியா அலுவலக நூலகத்திலும், கல்கத்தாவிலுள்ள ஆசிய கலைக் கழகத்திலும், சென்னையிலுள்ள அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

சிறந்த மொழியியல் அறிஞரும் 1803 முதல் 1811 வரை விரிவாக இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தவருமான டாக்டர் லெய்டன் என்பவரிடமிருந்து வாங்கப்பட்டு கிழக்கிந்திய இல்ல நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வந்த சுவடித்தொகுப்பு 1844-ல் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டது.

உயர்ந்த ஐ.சி.எஸ். அதிகாரியாகவும், சிறந்த தெலுங்கு அறிஞராகவும் விளங்கிய கி. பி. பிரவுன், தன் சொந்தத் தொகுப்பான காகிதச் சுவடிகளைக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்கினார். அத்துடன், தான் மீண்டும் 1855-ல் இங்கிலாந்திற்குப் பயணமாகும் வரை, தொடர்ந்து மேலும் மேலும் தொகுப்புகளைச் சேர்த்துக்கொண்டே வந்தார்.

கிழக்கிந்திய இல்லத் தொகுப்பு மற்றும் பிரவுன் தொகுப்பு ஆகியவற்றை முறையாகப் பட்டியல் செய்வதற்காக, புகழ் வாய்ந்த கிழக்கியல் அறிஞரான வில்லியம் டேலர் என்பவரை 1853-ல் சென்னை அரசு நியமித்தது. அவர் 1857 முதல் 1860 வரை மூன்று தொகுதிகளாகப் பட்டியலை வெளியிட்டார்.

# அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

**கி.பி.** 1800 முதல் 1850 வரை தொகுக்கப்பெற்ற மெக்கன்சி தொகுப்பு, கிழக்கிந்திய இல்லத் தொகுப்பு, மற்றும் பிரவின் தொகுப்பு ஆகிய முப்பெரும் தொகுப்புகளே அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக உருவாக்கத்திற்கு ஆதாரமாக அமைந்தன.

கிழக்கியல் படிப்பில் ஆர்வமும், பண்டைய இந்து கணித சாத்திர ஆராய்ச்சியில் பேரவாவும் கொண்டிருந்த கர்னல் காலின் மெக்கன்சி 1782-ஆம் ஆண்டு தன்னுடைய 29-வது வயதில் கிழக்கிந்தியக் கம்பெனியின் சென்னைப் பிரிவின் ஒரு பொறியியல் அலுவலராக இந்தியாவிற்கு வந்தார்.

தென்னிந்திய மக்களின் வாழ்க்கை முறை, வரலாறு, சமயம், இலக்கியம் ஆகியவற்றுடன் தொடர்புடைய பல்வேறு சுவடிகள், சாசனங்கள், வரைபடங்கள், நாணயங்கள் முதலியவற்றை 1782 முதல் 1816 வரையிலான 36 ஆண்டுக்காலத்தில் ஏராளமாகத் தொகுத்தார். மேலும் இலங்கை, ஜாவா ஆகிய தீவுகளிலிருந்தும் அத்தகைய பொருள்களைத் தேடிப் பெற்றார்.

இந்திய நில அளவைத் துறையின் தலைமை அலுவலர் பொறுப்பை ஏற்பதற்காக 1818 கல்கத்தா சென்றபோது, அதுகாறும் தான் தொகுத்தவற்றைப் பரிசிலித்துப் பட்டியல் தயார் செய்து வெளியிடும் பொருட்டு எடுத்துச் சென்றார். ஆனால் அவருடையநோக்கம் நிறைவேறாமலேயே 1821-ல் தன்னுடைய 68-வது வயதில் காலமானார்.

கிழக்கிந்தியக் கம்பெனி நிருவாக இயக்குநர்களின் அனுமதி பெற்று, அப்போது இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்த ஹேஸ்டிங்ஸ் துரை மகனார் 10,000 பவுன் விலை கொடுத்து மெக்கன்சியின் தொகுப்புகளை அவர் மனைவியிடமிருந்து வாங்கினார். பதினான்கு மொழிகளிலும், பதினாறு வேறுபட்ட வரிவடிவங்களிலும் எழுதப்பட்டிருந்த அத்தொகுப்புகளை, கல்கத்தா

மேற்குறித்த மெக்கன்சி. லெய்டன் மற்றும் பிரவுன் ஆகிய மூவரின் தொகுப்புகள் 1869-ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரி வடமொழிப் பேராசிரியர் பிக்ஃபோர்ட் என்பவரின் பொறுப்பில் கொண்டுவரப்பட்டன

**சி.என். இரமேஷ்,**
**அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்.**

1872-ல் சென்னை மாநிலக் கல்லூரி வடமொழித் துறையைச் சேர்ந்த டாக்டர் குஸ்தவ் ஆப்பெர்ட் என்பவர் நூலகத்தின் பகுதிநேரக் காப்பாட்சியராக நியமிக்கப்பட்டார்.

சென்னை மாநிலத்திலுள்ள புதிய சுவடிகளை விலை கொடுத்து வாங்கியோ அல்லது படியெடுத்தோ மேலும் பல புதிய சுவடிகளை நூலகத்தில் சேர்க்குமாறு காப்பாட்சியருக்கு 1876-ல் இந்திய அரசு ஆணை பிறப்பித்தது. அவ்வாணைக் கேற்ப அவ்வப்போது பல புதிய சுவடிகள் பெறப்பட்டு நூலகத்தில் சேர்க்கப்பட்டன.

1872-லிருந்து 1930 வரை ஒரு தலைவரும், பல்துறை அறிவும், பல்வகை எழுத்துக்களில் பயிற்சியும் பெற்ற ஒரு புலவரும், ஒரு எழுத்தரும், ஒரு ஏவலரும் அடங்கிய சிறு குழுக்கள் அவ்வப்போது தென்னகமெங்கும் சுற்றுப்பயணம் செய்து, அரிய பல சுவடிகளை நூலகத்திற்காகத் தேடிப் பெற்றன. 1951-52-ல் இறுதியாக அத்தகைய குழு ஒன்று செங்கற்பட்டு, தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டங்களில் பயணத்தை மேற்கொண்டு பல சுவடிகளைப் பெற்றது.

மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்டதையொட்டி ஏறக்குறைய 10,000 சுவடிகள (கன்னடச் சுவடிகள் சுமார் 2500, தெலுங்குச் சுவடிகள் சுமார் 7,000, மலையாளச் சுவடிகள் சுமார் 500) கர்நாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களுக்கு முறையே 1959, 1960, 1961ஆம் ஆண்டுகளில் மாற்றம் செய்யப்பட்டன.


திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்தும் (1977-ஆம் ஆண்டு), இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்தும்(1978ஆம் ஆண்டு) 19-ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து இடைப்பகுதி வரையிலான வருவாய்த் துறை நிருவாகம் பற்றிய பல செய்தி களடங்கிய சுமார் 600 சுவடிகள் இந்நூலகத்தில் பெறப்பட்டன.

மேலும் 18-2-1976 நாளிட்ட கல்வித்துறை எண் 334 கொண்ட அரசு ஆணையின் வண்ணம் தமிழ் நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை வாயிலாகப் பயனுள்ள பல சுவடிகளை இந்நூலகம் பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில், பல்வேறு பொருள் பற்றிய சுமார் 4,000 ஓலைச்சுவடிகள் 1985-ஆம் ஆண்டு பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறாகக் குறைந்த சுவடிகளுடன் துவக்கப்பட்ட இந் நூலகம் படிப்படியாகப் பெருகி இப்போது தமிழ், வடமொழி, தெலுங்கு, மராத்தி, உருது, அரபு, பெர்சியன் மற்றும் இதர கிழக்கியல் மொழிகளில், இலக்கியம், வரலாறு, மருத்துவம், கணிதம், சோதிடம், வானவியல், சமயம், தத்துவம், இசை போன்ற பல துறைகளில் சுமார் 70,000, ஓலைச்சுவடிகள் சுமார் 48,500, காகிதச் சுவடிகள் சுமார் 21,500, சுவடிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலும் பல்வேறு மொழிகளில் பல்வேறு பொருள் பற்றிய சுமார் 23,600 அச்சு நூல்களும் இந்நூலகத்தில் உள்ளன.



1844-ல் சென்னை இலக்கியக் கழகத்தில் குடி புகுந்த இந்நூலகச் சுவடிகள் நிலையாக ஓரிடத்தில் இல்லாமல், கல்லூரி நூலகத்திற்கும், பொதுக்கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கும், மாநிலக் கல்லூரிக்கும், புனித ஜார்ஜ் கோட்டைக்கும் மாறி மாறிக் குடி பெயர்ந்து 1896-ல் சென்னை அருங்காட்சியகக் கட்டடத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பின்னர் அங்கிருந்து 1939-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் சென்னைப் பல்கலைக்கழக நூல் நிலையக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது.

1942ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரினை முன்னிட்டுச் சென்னை நகரம் காலி செய்யப்பட வேண்டிய நெருக்கடி ஏற்பட்டபோது, இந்நூலகச் சுவடிகள் திருப்பதியிலுள்ள கீழ்க்கலை ஆராய்ச்சி நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, போர் முடிந்த பின்னர் மீண்டும் சென்னைப் பல்கலைக்கழக நூல் நிலைய கட்டடத்திற்கே கொண்டு வரப்பட்டு இந்நாள்வரை அங்கேயே இருந்து செயலாற்றி வருகிறது.

தலைசிறந்த சுவடி நூலகங்களுள் ஒன்றான அரசினர் கீழ்த் திசைச் சுவடிகள் நூலகத்திற்குச் சொந்தமாக ஒரு கட்டடம் அமைக்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமைதாகும்.

சுவடிகளைத் தக்க முறையில் பாதுகாத்தல், புதிய சுவடிகளைச் சேர்த்தல், விவரப்பட்டியல்கள், பருவ மலர்கள், அரிய சுவடிகள் ஆகியவற்றைப் பதிப்பாய்வு செய்து அச்சிட்டு வெளியிடுதல், ஆய்வுக்குத் துணை செய்யும் புதிய அச்சு நூல்களையும் பருவ ஏடுகளையும் சேர்த்தல், வாசகர்கள் கோரும் தகவல்களை வழங்குதல், ஆய்வாளர்க்குத்தக்க முறையில் உதவுதல்போன்றவை நூலகத்தின் முக்கியப் பணிகளாகும்.

இந்நூலகச் சுவடிகள் தக்க முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தூசு துடைத்தல், புகையூட்டுதல், தைலம் பூசுதல், மருந்துக்கலவை தெளித்தல், மீட்டு எழுதுதல், ஏடு செப்பனிடுதல், கட்டமைப்புச் செய்தல் ஆகிய முறைகள் விவரப் பட்டியல்களும் அடங்கும்.

இந்நூலகம் இதுகாறும் பல்வேறு கிழக்கியல் மொழிகளில், பல்வேறு துறைகளில் 349 வெளியீடுகளைக் கொணர்ந்துள்ளது. அவற்றுள் சுவடி விவரப் பட்டியல்களும் அடங்கும்.

1896-87 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட சுவடிகளைப் பற்றிய அறிக்கையே இந்நூலகத்தின் முதல் வெளியீடாக 1898-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

இந்நூலகச் சுவடிகளின் விவரப்பட்டியலும், மூவருடச் சுவடித் தொகுப்பின் பட்டியலும் முறையே 1901 மற்றும் 1912 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. இந்நூலகத்தின் முதல் பன்மொழிப் பருவ ஏடு 1948-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

நூல்விற்பனை: 1950 - ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட பட்டியல்கள் பாதிவிலையில் விற்கப்படுகின்றன. பின்னர் வெளியிடப்பட்ட நூல்களுக்கு 25% கழிவு தரப்படுகிறது.

அரிதானதும், மதிப்புமிக்கதுமான இந்நூலகச் சுவடிகள், பல்வேறு நிகழ்ச்சிகளையொட்டி அமைக்கப்பட்ட பொருட்காட்சிகளில் இடம்பெற்றுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்க சில நிகழ்ச்சிகள்:

1964-ல் புது டில்லியில் நடைபெற்ற 26-வது அகில உலகக் கீழ்க்கலை இயலாரின் மாநாடு, 1968ல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு, 1974-ல் சென்னையில் நடைபெற்ற மகாவீரரின் பரி நிர்வாண நூற்றாண்டு விழா, 1975-ல் ஐதராபாத் நகரில் நடைபெற்ற முதலாவது உலகத் தெலுங்கு மாநாடு, 1981-ல் மதுரை மாநகரில் நடைபெற்ற 5-வது உலகத் தமிழ் மாநாடு ஆகியவை ஆகும்.

இந்நூலகம், வெள்ளி, சனி (வார விடுமுறை நாட்கள்) மற்றும் அரசு விடுமுறை நாட்கள் தவிர்த்து ஏனைய வேலை நாட்களில் காலை 10.00 முதல் மாலை 5.30 வரை செயல்படுகிறது. உலகின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஆய்வாளர்களும், பார்வையாளர்களும் இந்நூலகத்திற்கு வருகை தந்து தங்களுக்கு வேண்டிய கருத்துக்களையும், தகவல்களையும் திரட்டிச் செல்கின்றனர்.

● அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் உள்ளது. இங்கு கிடைத்தற்கரிய ஓலைச் சுவடிகள் பெருமளவில் சேகரித்து வைக்கப் பட்டுள்ளன.



# பாப்பாகுடியில் சத்துணவுத்திட்டம்

இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் பாப்பாகுடி கிராமத்தில், மாவட்டச் சிறு சேமிப்பு ஊக்கத்தொகையில் இருந்து சுமார் ரூ.40 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட முதலமைச்சர் கல்வி சத்துணவுக் கூடத்தை, 30.3.87 அன்று மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் டி. இராமசாமி அவர்கள் திறந்து வைத்தார்.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சுமார் ரூ.75 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட வானொலிப் பெட்டிகள் பராமரிப்பு நிலையக் கட்டடத்தையும் அமைச்சர் திறந்து வைத்தார்.

திருப்புல்லாணி, மண்டபம், இராசசிங்கமங்கலம், திருவாடானை, இராமநாதபுரம் முதலிய ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 97 தொலைக்காட்சி, 691 வானொலிப் பெட்டிகள் ஆகியவற்றைப் பராமரிக்கின்ற நிலையமாக இது இயங்கும்.

இந்த நிகழ்ச்சியில் விதவை மகள் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூ.1000 வீதம் 16 நபர்களுக்கும், விதவை மறுமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூ.5,000 வீதம் இருவருக்கும், தெற்குத்தரவை இராமகிருஷ்ணன் என்பவருக்கு காதொலிக் கருவியும் அமைச்சர் வழங்கினார்.

இந்த விழாக்களில் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது "மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தினை அறிமுகப்படுத்திய பின்புதான் கல்வி கற்கும் குழந்தைகள் எண்ணிக்கை தமிழகத்தில் அதிகரித்துள்ளது. பெரிய மாவட்டமாக இராமநாதபுரம் இருந்ததால் மக்களின் தேவைகளை உடனே நிறைவேற்ற முடியாமல் கால காலமாக இருந்து வந்த குறையை மாற்றி, மூன்று மாவட்டமாகப் பிரித்து, மக்களின் பிரச்சினைகளைக் கேட்டு உடனடியாகத் தீர்த்து வைக்கும் அருமையான நிலைமையை உருவாக்கித் தந்தவர் புரட்சித் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர்.

"இராமநாதபுரம் மாவட்டத்தில் குடிநீர் வளத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளைச் சபதமாக எடுத்து, தீவிரமாய்ச் செயல்பட்டு வரும் முதல்வர், வாகனங்கள் மூலம் இராமநாதபுரம் நகருக்கு ரூ.9 இலட்சம் ஒதுக்கி, குடிநீர் வழங்கி வருகின்றார்'' என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தேவேந்திரநாத் சாரங்கி தலைமை தாங்கினார்.

## பேரறிஞர் அண்ணாவின் ஆசிரியர்:

# மோசூர் கந்தசாமி

— கெ. பக்தவத்சலம்

திருமணம்-செல்வக்கேசவராய முதலியார் (1864-1921), மணிமங்கலம் திருநாவுக்கரசு முதலியார் (1888-1931) மோசூர்-கந்தசாமி முதலியார் ஆகிய மூன்று தமிழறிஞர்களும் சென்னை பச்சையப்பன் கல்லூரியின் இடைக் காலத்தில், தமிழ்த் துறையைப் பொலிவு பெறச் செய்து புகழ் பெற்றனர். இவருள்ளும், ஆங்கிலப் பேராசிரியருக்கு வழங்கிய ஊதியத்திற்கு நிகரான ஊதியத்தைப் பெறும் நிலைக்கு உயர்ந்த முதற் பெரும் பேராசிரியர் மோசூர் - கந்தசாமி முதலியார் அவர்களே.

வடஆர்க்காடு மாவட்டம் அரக்கோண (அரன் குன்றம்)த்தை அடுத்துள்ள தொடர்வண்டி நிலையம் 'மோசூர்'.

''மோசை என்பதற்கு இலவ மரம் (செந்நிறப்பூக்களையுடைய பட்டுப்போன்ற பருத்தி மரம்), முருங்கை, வாழை, அவுரி என்னும் பொருள்கள் உண்டு. இவற்றுள் ஒன்றால் அவ்வூருக்கு அப்பெயர் வந்திருத்தல் வேண்டும். இப்போதும். அவ்வூரில் முருங்கை மரங்கள் மிகுதியாக உள்ளன. ஆதலின் மோசை—ஊர் என்பது மோசையூர் என்று ஆகி, பிறகு மோசூர் என மருவி இருத்தல் வேண்டும்.

''மோசி கீரனார். மோசி சாத்தனார் என்னும் கடைச் சங்கப் புலவர்கள் வாழ்ந்திருந்த ஊர் இதுவாயிருக்கலாம் என்று ஆராய்ச்சியில் தோன்றுதலால். மோசூர் என்பது இப் புலவர் காலத்தில் மோசி எனவும் மருவி வழங்கியிருத்தல் வேண்டுமெனத் தோன்றுகிறது'' என்று, தாம் பிறந்த ஊரைப் பற்றி ''மோசூர் ஆலடிப்பிள்ளையார் புகழ்ப் பத்து'' உரையில் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார் (1940).

'ஊரும் பேரும்' முழுதாகச் சேர்த்தெழுதும் பழந்தமிழ் மரபிலேயே பேராசிரியரின் பெயர் அமைந்துள்ளமை எண்ணி மகிழுதற்குரியது. இவர் 19.1.1887 அன்று பிறந்தார்.

மோசூர் பொன்னம்பல முதலியார் (1858—1920), சென்னை ஒற்றைவாடை வீதியில் (வால் டாக்ஸ் தெரு—வ.உ.சி.சாலை) அரிசி மண்டி வைத்து வாணிபம் செய்திருந்தார். இவர் திருவாலங்காட்டில் உள்ள மோசூரார் கோயில் என வழங்கும் வரசித்தி விநாயகர் கோயிலுக்குக் கிணறு எடுத்து உதவியவர். அக்கிணற்றின் தூயநீர் இன்றளவும் ஊரார்க்கும் பயனாகின்றது.

பேராசிரியர், சென்னை, தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப்பள்ளியில் பயின்றதன் பின்னர். பச்சையப்பன் கல்லூரியில் பயின்று தத்துவத் துறையில் 1914-ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார்.

இளமைப் பருவ முதற்கொண்டே பேராசிரியரின் அத்தை வீட்டின் ஒரு பகுதியில் வசித்து வந்த சித்தாந்த சரபம், அட்டாவதானம் பூவை. கலியாண சுந்தர முதலியாரிடம் (1854-1918) நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பேராசிரியர் பெற்றிருந்தார் இதனால் கல்லூரிப் படிப்பை முடித்ததும் அப்பெரியாரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும், சைவ சமய நூல்களையும் பாடங் கேட்கும் நல் வாய்ப்பு உண்டாயிற்று. பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியராக விளங்கிய திருமணம் செல்வக்கேசவராய முதலியாரின் தொடர்பும் இவரது தமிழூற்றத்தைப் பெருகச் செய்தது.

இங்ஙனம் தமிழ்ச்சுவை மாந்திய இவர், அவ்வின்பப் பெருக்கிலேயே எப்போதும் தோய்ந்திருக்க விரும்பி. சிறிது காலம் பார்த்திருந்த, சென்னை அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவர் அலுவலக உதவியாளர் பதவியை உதறி, பச்சையப்பன் கல்லூரியின் தமிழாசிரியர் பொறுப்பை 1918இல் ஏற்றார்.

கல்லூரியில் ஆசிரியப் பொறுப் பேற்ற பின்னரும். தமிழறிஞர்

தமிழ் வளர்த்த பெரியார்



## தமிழ் கற்பித்தோர் வணக்கம்

என்றுமுள தமிழறிவும் சித்தாந்தப்
புலமையுமா ணவர்தேர் இன்பே
நன்றுடையான் கலியாண சுந்தரப்பேர்
நாவலன்றன் தாளும், நாளும்
கன்றுடையா வெனச்சங்க நூலுணர்த்தெங்
கனகசுந் தரப்பே ராளன்
அன்றலர்ந்த மலரடியும் அகத்திலுறு
கருவூலம் ஆகு மன்னோ

## வெண்பா

தூய தமிழர் உள்ளத்துள்ளே தோன்றுநிலை
ஆய சிவமே! அளந்தறிய - வாயாப்
பெரும்புகழ் உண்மை பிறங்கிடச்செய் நல்லோர்
விரும்புந் தமிழ்மேலோர் வீறு.

—மோதூர். கந்தசாமி முதலியார்

ஈழத்துத் திரிகோணமலை தி.த. கனகசுந்தரம் பிள்ளை (1863—1922) அவர்களிடம் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பெருங்காப்பியங்களை முறையாகப் பாடம் கேட்டார். பின்னர் இராமலிங்கத் தம்பிரான் அவர்களிடம் காஞ்சிப் புராணம், தணிகைப் புராணம் முதலிய பிரபந்தங்களைப் பாடம் கேட்டுத் தமிழறிவினை வளப்படுத்திக் கொண்டே இருந்தார்.

பேராசிரியர் கந்தசாமி முதலியார் இராமலிங்க வள்ளலாரிடம் பேரீடுபாடு கொண்டவர். ஏழுகிணறு வீராசாமிப் பிள்ளைத் தெரு, 39 ஆம் எண்ணுள்ள இல்லத்தில் தமையனார் சபாபதிப் பிள்ளையுடன் வள்ளலார் வசித்த காலத்தில் பேராசிரியரின் பெரிய பாட்டனார் திரு. சுப்பராய முதலியார், வள்ளற் பெருமானின் பிள்ளைப் பருவ நண்பராகப் பழகியவர்.

வள்ளலார் அடியவரான காரணப்பட்டு-சமரச பஜனை ச.மு. கந்தசாமி பிள்ளையவர்களைப் பேராசிரியர் மோ. கந்தசாமி முதலியார் தம் இல்லத்தில் இருக்கச் செய்து, அவர் விரும்பிய வகையில், திருவருட்பா முழுவதும் 1924-ஆம் ஆண்டு ஓர் அரிய பதிப்பாக வெளிவரப் பேருதவி புரிந்துள்ளார். 1570 பக்கங்களில் திருவருட்பா முழுவதும், அழகிய முறையில் அச்சிடப்பெற்றுள்ளது. இப்பதிப்பு, பேராசிரிரின் பெருமைப்பின்பயனாகக்கிடைத்துள்ள பெரும் பரிசில் எனலாம். இப்பதிப்பின் முன்னுரையையும், வள்ளலாரது வாழ்க்கை வரலாற்றையும், பிற அரிய குறிப்புகளையும் பேராசிரியர் எழுதியிருப்பதோடு, இந்நூலின் கையேட்டுப் படியை ஒழுங்கு செய்தல் அச்சுப் பிழை திருத்தல் முதலிய பல பணிகளையும் செய்துள்ளார். இவ்வரிய திருவருட்பாப் பதிப்பு, அந்நாளில் ஐந்து ரூபாய்க்குக் கிடைத்தது.

திருவொற்றியூர் பட்டினத்தார் கோவில் தெருவிலுள்ள இராமலிங்கர் மடத்தை, முதலில் ஏழு கிணறு தெருவில் 1912இல் நிறுவச் செய்தோருள் பேராசிரியரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1921 முதல் 1945 வரை, பேராசிரியர் பச்சையப்பன் கல்லூரிக் கழகத்து உறுப்பினராக இருந்தார்.

1931 முதல் 1945 வரை, சென்னை அரசின், உயர் நிலைப் பள்ளிக் கல்வி இறுதி வகுப்பின், பாடப்புத்தகம் வகுப்போராசப் பணியாற்றினார்.

1935, 39, 40 ஆண்டுகளில், சென்னை அரசு பணித்துறை தேர்வாணைக்குழு சோதனையாளராகக் கடமையாற்றினார். அக்காலத்தில் ஐ.சி.எஸ். உயர் தேர்வுக்கான மொழித்தேர்வுத் தாள்கள் திருத்தி, மதிப்பெண்கள் வழங்குவதற்காக டில்லியிலிருந்து இவருக்கு நேரே அனுப்பப் பெற்றன. இத் தேர்வாளராக இயங்குவதற்கு, இவர் ஆசிய அரசுக் கழகத்தில் உறுப்பினராக நியமிக்கப் பெற்றிருந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தேர்வுக்குழு உறுப்பினராயும், அதன் தலைவராயும் இவர் இருந்திருக்கிறார். சென்னை, அண்ணாமலை, ஆந்திரப் பல்கலைக் கழகங்களின் உறுப்பினராவும், அவற்றின் உட்கழகங்களின் உறுப்பினராகவும் இலங்கி இவர் ஆற்றியுள்ள கல்விப் பணிகள் பல.

27 ஆண்டுகள், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியராகவும், அக் கல்லூரி திராவிடக் கலைப் பயிற்சிகளின் மேற்பார்வையாளராகவும் பணியாற்றிய பேராசிரியர் 1-7-1945 அன்று ஓய்வு பெற்றார்.

இவர் 1925 முதல் 1928 வரை சென்னை பெத்துநாயக்கன் பேட்டை அருள்மிகு அருணாசலேசுவரர் கோயில் அறங்காவலராக நியமிக்கப்பட்டிருந்தார். அக்காலத்தில், கோயிலுக்குரிய வீடுகள் பலவற்றைப் புதுக்கிஅமைத்து வருவாய் பெருக வழி செய்தார். பின்னர் வேறு அலுவல்களால், இப்பதவியைத் தாமே விட்டார்.

1922 முதல் பல ஆண்டுகள் அவ்வப்போது இவர் சென்னை உயர் நீதி மன்றத்தின் வழக்குமுறை உரைப்போராக (ஜூரி) இருந்திருக்கின்றார்.

இவர் 'மோசூர் ஆலடிப் பிள்ளையார் புகழ்ப்பத்து என்றொரு பனுவல் இயற்றி, உரையுடன் 1940 இல் வெளியிட்டார். அந்நூலின் உரைமுகத்தும் அகத்தும் பண்டைக்காலத் தண்டமிழ் மக்களின் பண்பாட்டுச் சிறப்பும், வழக்க ஒழுக்கங்களும் நுட்பமுடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இவர் தமிழ் நூல்கள் சிலவற்றிற்கு உரையெழுத விழைந்தார். பூண்டி அரங்கநாத முதலியார் (1844-1893) இயற்றிய கச்சிக் கலம்பகத்திற்கு இவர் எழுதிய உரையுடன் கூடிய நூல், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக, இதுவரை நான்கு பதிப்புகள் வெளிவந்துள்ளன. வேறு சில கலம்பகங்களுக்கும் சிற்றிலக்கியங்களுக்கும் இவர் எழுதி வைத்துள்ள உரைகள் இன்னும் வெளிப்போந்தில.

இவர் ஆங்கிலத்திலும், இனிய தமிழிலும், நகைச்சுவையுடன் பேசும் சிறந்த சொற்பொழிவாளராகத் திகழ்ந்தார். ''தமிழ்மொழியில் பேச எடுத்த பொருளைப் பலப்பட விரித்துரைப்பதும், பல அடுக்குகளைச் செறித்துப் பேசுவதும், விரைந்து பேசுவதும், தொடர்ந்து பேசுவதும் இவர் தம் இயல்புகளாகும். தாம் கருதிய பொருளை எவ்வகையோர்க்

கும் அஞ்சாது எடுத்துரைக்கும் நெஞ்சம் படைத்தவராகவும் இருந்தனர்.

கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்ற பேராசிரியர் எஞ்சிய தம் வாழ் நாளில் தமிழ்நூல்கள் சிலவற்றிற் குச் சீரிய உரையெழுதிப் பதிப் பிக்க ஆர்வம் கொண்டிருந்தார். அதற்காக அவர் முயற்சிகளை மேற்கொண்டபோது, மணிமேக லையின் பௌத்த சமயக் கருத் துகளை அறிவதற்காக அந்நாளில் மாநிலக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக விளங்கிய சமண சமய அறிஞர் அ.சக்கரவர்த்தி நயி னார் அவர்களிடம் முறையாகச் சனிக்கிழமைதோறும் பாடம்கேட் டுக் குறித்து வந்தார். ஆயின் அவர் எண்ணங்கள் ஈடேறுமுன்பே 29-8-1945ஆம் நாள் திருவடிப் பேறடைந்தார்.

''மோசூர் திரு.கந்தசாமி முத லியாராவர்கள் தமிழ், ஆங்கிலம் வல்ல அறிஞராய்த் திகழ்ந்தது டன் தமிழ் கற்றார் பாலெல்லாம் மிக்க அன்பு பூண்டு அவர்க்கு வேண்டும் உதவிகள் புரிந்து வந்த இரக்க நெஞ்சினர், வடலூர் இராமலிங்க வள்ளலார் திருவடிக் கண் அளவிலா அன்பும்தமிழறிவும் வாய்ந்த ஒருவரை நாம் பெறுதல் அரிதரிது'' என்று மறைமலையடி களார், பேராசிரியரது மாண்பி னைத் திட்பமுடன் உரைத்துள் ளார்.

''வகுப்பிற்கு இப்பெரியார் பளபள என மின்னும் தலையணி யுடன் நீண்ட சட்டையணிந்து கண்ணாடியும் சந்தனப்பொட் டும், புன்னகையும் மின்னு முகத் தோடு வந்து புகுந்தார். நாங்கள் வாய்பிளக்க ஆங்கிலத்தில் பெரும் பேச்சுப் பேசினார். தமிழாசிரியர் இவ்வாறு ஆங்கிலத்தில் நீளப் பேசுவது நாங்கள் துய்த்த வியப்பு விருந்தாகும். தொடர்ந்து ஒரே மூச்சாகத் தேன்மழை பொழிவது போலத்தமிழில்பேசி முடித்தார்'' என்று பேராசிரியரின் தோற்றப் பொலிவையும் ஆளுமையையும் நம் கண் முன் கொண்டு நிறுத்து கிறார், பல்கலைச் செல்வர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்.

தம் தந்தையார் நினைவாக, அவரது அருமைத் திருமகள் திரு மதி அருட்பிரகாசம் அம்மையார் 5.5.1955ஆம் நாள், பேராசிரி யர் மோசூர் கந்தசாமி முதலியார் நினைவுத் தொடக்கப்பள்ளியை அவர் வாழ்ந்து மறைந்த 44, முல்லா சாயுபு தெரு வீட்டிலேயே தொடங்கினார். இப்போது அதற்கு மூன்றாவது வீட்டிலேயே மிகச் சிறப்பாக நடந்துவரும் இப் பள்ளி, பேராசிரியருக்குரிய நினை வுச் சின்னமாக நின்று நிலவுகிறது.

பேராசிரியரது புகழுக்கு முடி மணியாக விளங்குவது அவரிடம் பயின்ற மாணவர்களுள், அறிஞர் அண்ணா அவர்களும் ஒருவர் என் பதாகும். 1968ஆம் ஆண்டில், சென்னையில் நடைபெற்ற உல கத் தமிழ் மாநாட்டின்போது அறிஞர் அண்ணா பேராசிரியரைப் பின்வரும் சொற்களால் நினைவு கூர்ந்தார்:

''கல்லூரி வாழ்வில், 'எனக்குத் தமிழ் உணர்வை ஊட்டிய பெரிய வர்கள் இருவர், அவர்கள் பச்சை யப்பன் கல்லூரித் தமிழ்ப் பேரா சிரியர்களாகப் பணியாற்றிய மணி. திருநாவுக்கரசு முதலியார் மோசூர் கந்தசாமி முதலியார் ஆகியவர்கள் ஆவர்.''

1945 வரை அறிஞர் அண்ணா அவர்கள் பேசிய பல பேச்சு மேடைகளுக்குப் பேராசிரியர் தலைமை தாங்கியுள்ளார்.

# திரைப்படம் வீடியோ குறித்து விவாதம்

**ப**ம்பாய் திரைப்படத் தணிக்கைக் குழு வின் நிர்வாக அலுவலர் திரு ஜி.என். ஜாத் வானி, தமிழ்நாட்டிலுள்ள மண்டலத் திரைப் படத் தணிக்கை அலுவலர் திரு ராகவன் ஆகிய இருவரும், மாண்புமிகு தமிழ்நாடு சுற் றுலாத்துறை அமைச்சர் திரு வி.வி.சுவாமி நாதன் அவர்களுடன் 31.3.87 அன்று திரைப் படம் சம்பந்தமான சில பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர்.

திரைப்படத் தணிக்கையின் போது நீக்கப்படவேண்டும் என்று தணிக்கைக் குழு வினால் ஆணையிடப்பட்ட பகுதிகள், படம் திரையிடப்படும் போது காட்டப்படுவதை எப்படித் தடுப்பது, திரைப்படங்களின் வீடியோ கேசட்டுகள் திருட்டுத்தனமாகத் தயாரிக்கப்பட்டு விற்கப்படுவதை எப்படிக் கண்டுபிடிப்பது? அத்தகைய குற்றவாளிகளை எப்படித் தண்டிப்பது? ஆகிய பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன. இவ்விவாதம் உள் துறைச் செயலர் திரு டி. வி. வெங்கடராமன் இ.ஆ.ப., திரைப்பட அரங்குகளின் பொதுச் செயலாளர் திரு டி.இராமானுஜம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாதர் சங்க முற்போக்கு அணியினர், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு வி.வி.சுவாமிநாதன் அவர்களிடம், 'இரட்டை வால் குருவி என்ற திரைப்படம் பெண்களை இழிவு படுத்தியுள்ளது' என்று கருத்தமைந்த மனுவைக் கொடுத்தது குறித்தும் இந்த விவா தத்தில் பேசப்பட்டது.

அகில இந்தியச் சார்பில் திரைப்படத் தணிக்கைகள் குறித்துக் கருத்தரங்கு, தமிழ் நாட்டில் நடத்தப்படும் என்ற கருத்தும் தெரி விக்கப்பட்டது.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய் யப்படும் ஆங்கிலத் திரைப்படங்களுக்கு அனு மதிக்கப்படுகிற சுதந்தரம், வயதுவந்தவர் களுக்கென உருவாக்கப்படும் இந்தித் திரைப் படங்களுக்குத் தணிக்கைக் குழு வழங்கும் சலுகை ஆகியவை தமிழ்த் திரைப்படங் களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று திரு டி. ராமானுஜம் கேட்டுக் கொண்டார்.

திரைப்படத் தயாரிப்பாளர்கள், வீடியோ காசட் தயாரிப்பாளர்கள், திரைப் பட விநியோகஸ்தர்கள் ஆகியோர் பங்கு பெறும் கூட்டு ஆலோசனைக் கூட்டம் நடத் தலாம் என்ற கருத்தும் இந்த விவாதத்தின் போது தெரிவிக்கப்பட்டது.

# உழைப்பும் உயர்வும்

— உவமைக் கவிஞர் சுரதா





மிகப்பெரிய தேசந்தான் நமது தேசம்
வீரத்தின் விளைநிலந்தான்; எனினும், சாதித்
தொகைக்கணக்கால், சோம்பேறித் தனத்தால், நீண்ட
தூக்கத்தால், பொறாமையினால், தொன்று தொட்டுப்
பகைப்பெருமை பேசியதால், அண்ணன் தம்பி
படையெடுப்பால், சிற்றின்ப வெறியால், நன்கு
வகுத்தமுறை வழுவியதால் வீழ்ச்சி யுற்றோம்;
வகையற்றோம்; துன்புற்றோம்; அடிமைப் பட்டோம்.

தோள்வளர்ச்சி ஆடவர்க்கும், ஒவ்வோர் நாளும்
தொழில்வளர்ச்சி நாட்டுக்கும் தேவை யாகும்!
ஆள்வளர்ச்சி அடைவதனால் ஆவதென்ன?
அவ்வளர்ச்சி வெறுஞ்சதையின் வளர்ச்சி தானே!
வாள்வளர்ச்சி எதற்காக இனிமேல்? விண்ணில்
வளர்மதியைத் தொடும்வளர்ச்சி யன்றோ வேண்டும்?
தேள்வளர்ச்சி மனப்பான்மை வளரு மாயின்
தேசத்தில் மோசந்தான் மோட்ச மாகும்!

விழித்தால்தான் பொருள்தெரியும்; வயலில் நெல்லை
விதைத்தால்தான் அதுவிளையும்; பத்தில் ஐந்தைக்
கழித்தாலும் வகுந்தாலும் குறையும்; மாந்தர்
கவலைக்கோர் கவலைமருந் தாவ தில்லை;
இழைத்தால்தான் நூல்கிடைக்கும் என்ப தாலே
இழைக்கின்றோம் பஞ்சுதனை, எந்த நாடும்
உழைத்தால்தான் முன்னேற முடியு மன்றி
உபதேசத் தால்தேசம் உயர்வ தில்லை!



# உழைப்பின் பெருமை

கவிஞர் முகவை இராஜமாணிக்கம்

உலகின் உயிரே உழைப்பாம்—அந்த
உழைப்பின் நாடி உழைப் போரே!
உழைப்பவர் உரமும் உறுதியும் கொண்டால்
எழிலும் வளமும் எங்கணும் பொங்கும்!


குதுப் மினாரும் - கல்லணைத் தேக்கமும்
தாஜ் மகாலும் - தஞ்சைக் கோவிலும்
பாக்ரா நங்கலும் - பாம்பன் பாலமும்
உழைப்போர் கரத்தால் எழுந்த ஆலயங்கள்!

செங்கதிரை விளைவிப்பான் மேழிச் செல்வன்
சீருடைகள் குவித்திடுவான் நெசவு செய்வோன்
அங்கமெல்லாம் வியர்வைசிந்த உழைப்பான் வல்லான்
இங்கிதமாய்த் தொழில்புரியும் இவனே வீரன்!

உழைப்பவர் இல்லையேல் உலகம் இல்லை!
உல்லாச வாழ்வுக்கு உரியன எல்லாம்
உயிர் வாழ்தலுக்கு அவசியப் பொருளும்
உழைப்பவர் திறத்தால் உருவான வையே!

கண்ணைக் கருக்கிடும் கோடை வெயிலும்
கரங்கள் விறைத்திடும் கடும்பனிக் குளிரும்
என்ன வருத்தினும் சளைக்காது இடரை
எதிர்த்துத் தொழில்கள் புரிவார் உழைப்போர்!


உற்பத்தி பெருகிட வருவாய் உயரும்
உரிமைகள் கிடைக்கும் உலகம் சிறக்கும்
மனைகள் தோறும் மகிழ்ச்சி நிலவும்
உழைப்பவர் வாழ்வும் மலர்க்கா டாகும்!





# கலைவாணர் விரும்பும் தமிழ்நாடு

## — கவிஞர் சுப்பு ஆறுமுகம்



வான்விருந்து கிடைக்கும்என்று மேலே சென்றேன்!
வந்த இடம் தமிழகம் போல் இனிக்க வில்லை!
நான் விரும்பும் தமிழ்நாடு மலர்ந்த இந்நாள்
நானில்லையே நாட்டில்எனும் வருத்தம் கொண்டேன்!
கூன் விழுந்த முதுகானேன், தலைகுனிந்தேன்!
தலைகுனிந்த காரணமும் சொல்வேன், கேளீர்!
ஏன் என்று வில்லிசைப்பேன் என்.எஸ்.கே. நான்
என்னருமைத் தமிழ்நாடே! இனிய மக்காள்!

எவர்க்கேனும் ஏதேனும் வழங்கிடாமல்
என்னாலே இங்கிருக்க முடிவதில்லை!
எவருக்கும் எதன்மீதும் பற்றில்லையாம்!
எங்ஙனம்யான் மேலுலகில் தொடர்ந்திருப்பேன்!
அவர் கேட்க, இவர் உதவ, இவர்பின் கேட்க,
அவர் உதவ-அஃதன்றோ அன்பின் இன்பம்!
தவிப்போர்க்கு உதவுகிற சுகத்தைப்போல
தவவாழ்க்கைச் சுகம்தானும் சுவைப்பதுண்டோ?

மாமதுரைக் கோபுரம் மேலுலகில் இல்லை!
மாமல்லை போலில்லை—அழகின் எல்லை!
தேமதுரத் தமிழோசை பொருநை, வைகை
தென்பெண்ணை, பாலாறு, காவேரித்தாய்
நாமணக்க, பூமணக்க, பாமணக்க
நடைபயிலும் தமிழ்நிலம்போல் விண்ணில் இல்லை!
பூமிதனைத் தழுவும்முக் கடலும் இல்லை!
பொன்னுலகில் எதுஇருந்தென்? பொதிகை இல்லை!

[கலைவாணர். வானுலகிலிருந்து புத்தாண்டு வாழ்த்து வில்லிசைக்க, அது காற்றில், கனவில், காதில் வந்து ஒலிப்பதாக ஓர் இலக்கியக் கற்பனை]

குற்றால அருவியிலே சுருதிசேர்த்து
குரங்காட்டும் கொம்பசைவில் தாளம் கூட்டி,
கற்றாரின் அடக்கம் போல் தென்றல் காற்று
காதோடு காதாக ராகம் கூற,
பெற்றாளின் தாலாட்டுத் தமிழே போல
பெரும்புலவர் கவிகொணர, பாணர் பாட
புற்றோரம் படுத்திருக்கும் பாம்புங்கூட
பூங்கொடியாய் ரசிக்கும் தமிழகம் அங்கேது?

உலகத்தமிழ்ச் சங்கம் விண்ணில் ஏது?
உயர்ந்தோர்க்கு விழா எடுக்கும் அரசு அங்கேது?
கலையரங்கம்! தொழில்பண்ணை! மேடைப்பேச்சு!
கல்விதரும் நிலையங்கள் மேலே ஏது?
நிலம்தன்னை இல்லார்க்குப் பகிர்தல் ஏது?
நெசவாளர்க் குதவிசெயும் அரசு அங்கேது?
இலவசசத் துணவுச் சீருடைதான் ஏது?
எப்படியேனும் படிக்கச் செய்தல் ஏது?

ஆகமொத்தம் இவற்றில் ஏதும் விண்ணில் இல்லை!
அத்தகைய அமருலகம் எனக்கெதற்கு?
கோகுலத்துக் கிருஷ்ணனல்ல—நானே!—நாகர்
கோவில் கிருஷ்ணன் சிரிப்புக்கலையின் தூதன்!
ஆகையினால் தமிழ்நாட்டை வானிருந்தே
ஆசையினால் பார்ப்பதற்கே தலைகுனிந்தே
மேகவிடுதூதாய் வில்லிசைத்தேன்—என்றன்
மின்னல் ஒளிச்சிரிப்பே—புத்தாண்டு வாழ்த்தாம்!











# உனது வசந்தம் வெளியே இல்லை!

—கவியரசர் இளந்தேவன்

வளைந்த வானை நோக்கி நிமிர்ந்து
வளரும் மரங்கள் கோடி
வளைந்த தோளில் மலர்கள் ஏந்தும்
வசந்தப் பாடல் பாடி!

பழைய வேம்பில் புதிய காம்பில்
தளிர்கள் என்ன வண்ணம்!
இளைய சூட்டில் புதிய ரத்தம்
இயற்கை பாய்ச்சும் சின்னம்!

உவகை யோடு உடையை மாற்ற
உலகம் துள்ளும் வேளை,
கவிதை நூறு குயில்கள் பாடக்
காதல் கொள்ளும் சோலை !

கரும்பு வில்லும் மலர்கள் அம்பும்
காமன் ஏந்தும் காலம்!
திரும்பும் எட்டுத் திசைகள் எங்கும்
தெய்வம் தோன்றும் நேரம்!

உயிர்களுக்கு வசந்தம் இன்று!
உனது வசந்தம் என்று?
துயர்களுக்குத் துயர்கொ டுக்கத்
துணிகி றாயே அன்று!

உனதுவசந்தம் வெளியில் இல்லை
உணர வேண்டும் மனிதா!
மனிதவசந்தம் என்ப தென்றும்
மனதின் வசந்தம் மனிதா!

இரண்டுமாத வசந்த கால
எல்லை இல்லை உனக்கு!
உருண்டுசெல்லும் ஆண்டு முழுதும்
உனது வசந்தக் கணக்கு!



# பெருக்கலோடு சில பொழுதுகள்

## கவிஞர் ஈரோடு தமிழன்பன்

எண்கள்
தமக்குள்
முத்தமிடும் ஓசையே
என் காதில்
பெருக்கலாய் வந்து விழுகிறது.

சின்ன
வயதிலேயே பிள்ளைகளைப்
பக்கத்திலிருந்து கடன் வாங்கப்
பழக்கியதே - இந்தக்
கழித்தல் தான்.

கடன் வாங்கியவன்
எவனும் நின்றதில்லை
படுத்து விடுவான் என்பதற்கு
அந்தப்
படுக்கைக் குறியே மாட்சி.

எண்களின்
சோம்பலே கூட்டல்!
வேகத்தில்
ஆமைக்கு அண்ணாச்சி
ஏன்
கூட்ட வந்தோம் என்று
இடையில் நின்று
இரத்தம்
சிந்துகின்ற
சிலுவைக்
கணக்கின்னும்
வளர்கிறது.

வர்க்கங்களை
வகுத்து,
சமயங்களை வகுத்து,
சாதிகளை
குலங்களைக் கோத்திரங்களை
வகுத்து,
வகுத்து வகுத்து
வகுப்பு முறையால் வந்ததெல்லாம்
வகுப்புக் கலவரங்கள்.

அந்த
வகுத்தல் குறிக்கு
முன்னும் பின்னும்
வரலாறு
உகுக்கிறது
கண்ணீர்த் துளிகள்.

பெருக்கல்
குறிமட்டுமே
மோசத்தனங்களோடு
மோதத் தயார் என்று
கராத்தே
கரங்களைக்
கம்பீரமாய் உயர்த்தி நிற்கும்.

எண்களையே
விசாரித்துப் பாருங்கள்
எது பிடிக்கும்
என்று.

பெருக்கலோடு
வாழ்வதே
பிடிக்கும் என்று - அவற்றின்
வாய்பாடும்
வாய்திறந்து பாடும்!
நியாயத்தையும்
நேர்மையையும் பெருக்கினால்
விடை - இன்பமாகும்.

ஆனால்
தன்னலத்தையும்
அச்சத்தையும் பெருக்கினால்
விடை - ஈனத்தனமாகும்.
மூடத்தனத்தையும்
மூர்க்கத்தனத்தையும் பெருக்கினால்
விடை - மிருகத்தனமாகும்.

எனவே தான்
பெருமையுள்ள
பெருக்கல் குறியும்
தரங்கெட்ட வேளைகளில்

தப்புக் குறியாக
தாழ்ந்த பள்ளத்தில்
தலைகவிழ்ந்து வீழ்ந்தது!
தன் மானம் நீத்தது!

# பாவேந்தர் பாட்டு செந்தமிழ்த் தேன்சொட்டு



சந்தனப் பொதிகை விட்டுச்
சதிராடிக் குதித்து வரும்
சிந்தனைத் தென்றல், குளிர்
சிந்திடும் வெண்ணிலவு! இனிய
தேன் தேன் தேன் சொட்டு
பாவேந்தன் செந்தமிழ்ப்பாட்டு!

தேள் தேள் தேள் கொட்டு
பாவேந்தன் படைத்தளித்த
பாசறைத் தமிழ்ப் பாட்டு!

சாதிமத பேதம் சொல்லிச்
சமுதாய நலத்தைக் கல்லி
நீதியிலே கீழ்மேல் காட்டும்
நீசருக்கெல்லாம் இங்கே
தேள் தேள் தேள் கொட்டு
பாவேந்தன் படைத்தளித்த
பாசறைத் தமிழ்ப் பாட்டு!

பாதியிலே புகுந்துவிட்ட
பழிப்புறும் தீண்டாமையாம்
மேதியை வளர்த்துவரும்
மேன்மையிலாச் செயல்ஒழியத்
தேள் தேள் தேள் கொட்டு
தென்றமிழ்ப் பாவேந்தன் பாட்டு!



— கவிஞர் மன்னர் மன்னன்

# இளைய தலைமுறை ஏற்றம் பெற...

## கவிஞர் தணிகை உலகநாதன்



இளம்பருவம் வாழ்வினிலே இனிக்கின்ற பருவம்
இளந்தென்றல் பருவமது இலட்சியத்தின் வித்தாம்
இளைஞர்களே! இளைஞர்களே! நாட்டினெதிர் காலம்
இருக்கின்ற தும்கையில் மறந்துவிட வேண்டா
வளமையுடன் வலிமைமிகும் இப்பருவம் வாழ்வின்
மலர்ச்சிதரும் வயலதனின் நாற்றங்கால் ஆவீர்.
இளைஞர்களால் ஆகாத செயலெதுவும் இல்லை
இதையெண்ணி எந்நாளும் தலைநிமிர்ந்து நிற்பீர்.

சின்னதொரு பருவத்தும் செயற்கரிய செயல்கள்
செய்திட்டோர் பலருண்டு சிந்தித்துப் பாரீர்.
பன்னிரண்டு வயதுக்குள் பாரதியாம் சிறுவன்
படைத்திட்ட கற்கண்டுச் சுவைக்கவிதை பலவாம்.
மன்னியசீர் கரிகாலன் இளமையிலே நாட்டின்
மன்னவனாய் அமர்ந்திட்டான் நல்லரசு செய்தான்.
சின்னமலர் போன்றவனாம் ஜேம்ஸ்வாட்டு என்பான்
சீரியதோர் நீராவி ஆற்றலினைக் கண்டான்.

பரம்பரையாய் நம்நாடு அடிமையிலே சிக்கிப்
பரிதவித்த காலம்போய் நமைநாமே ஆளும்
உரிமையினைப் பெற்றுள்ளோம் உலகஅரங் கினிலே
உயர்நிலையைப் பெறுவதற்கே ஊக்கமது கொள்வீர்.
தரமான இளைஞர்களே தாயகத்தின் உயிராம்
தங்கத்தின் மேலாகும் அவர்தொண்டே; என்றும்,
விரிவான கலைகல்வி தொழில்களிலே மேன்மை
விளங்கிடவே பொது.அறிவுப் பூஞ்சோலை ஆவீர்.

நாடுநமக் கென்செய்த தெனவெண்ணி டாமல்
நாட்டுக்கு நாமென்ன செய்திட்டோம் என்னும்
பீடுடைய பெருங்கொள்கை தனைப்போற்ற வேண்டும்
பேசிடுநல் நாட்டுநலத் திட்டங்கள் யாவும்
கேடின்றி நிறைவேற ஒத்துழைக்க வேண்டும்
கிளைத்துவரும் அறிவியலின் துறைதோறும் நாளும்
ஈடுபட்டே எல்லாரும் எல்லாமும் பெற்றே
இன்பங்கள் பெருகிடவே பாடுபட வேண்டும்.

சிற்றெறும்பும் உழைப்பாலே சேர்ந்து வாழும்;
தேனீக்கள் சேர்ந்தொன்றாய்த் தேனைச் சேர்க்கும்.
மற்றிவற்றைப் போலுழைப்பால் உயர்ந்து வாழ்வில்
மனங்குளிர வளமெல்லாம் சேர்க்க வேண்டும்
வெற்றுரைகள் காலத்தை வீணே ஆக்கும்
வெற்றிக்கே உழைப்புத்தான் கருவி ஆகும்
பெற்றவர்கள் மற்றவர்கள் உளம்களிக்கப்
பெருமையொளி வீசிடவே வளர்க! வாழ்க!



# آرمان
ARMAN

## "بهارادی داسان"
## شاعر بزرگ اومانیست تامیل

بمناسبت صده بهارادی داسان

تامیل یکی از قدیمی ترین و غنی ترین زبانهای هند به شمار می‌آید و ادبیات و شعر این زبان علاوه بر قدمت از غنای محتوی برخوردار است. ادبیات نوین تامیل جایگاهی ویژه دارد و بر تارک آن دو نام می‌درخشد. یکی سوبرامانیا بهارانی یار (SUBRAMANI BHARATHIAR) و دیگری پاوندار ...ادی داسان (BHARATHI DASAN)
...ی بنیانگزار جنبش نوین ادبیات تامیل و ... است. شعرهای میهنی ... ود ...ان است. او در مبارزه استقلال ...ت داشت و از طرف پلیس ...فت و بزند کی ... زمینی در ... اندیچری که تحت ... از انگلیسها به ...
(... ...ت.



بابا ...

به ... ...
آرش

علاقه میلیونها تامیل زبان است. از طرف دولت پاندیچری دارایی و یادگارهای بهارادی داسان بعنوان دارایی ملی ثبت گردیده است. دانشگاهی ... نامگذاری گردیده و مجسمه‌اش در میدانها و اماکن عمومی نصب گردیده. بدینسان خلق راهش را گرامی می‌دارد و یادش را جاودان.

بهارادی داسان در دوران حیات خود ...ه ای منتشر می‌کرد که کویل (فاخته)، نام ... ... توسط فرزند شاعر ... انتشار می‌یابد ... شماره ... ... در حدود ... ایران ... ... است.

... داستان به زبانهای مختلف

بقیه در صفحه ۷

# பேர்ஷிய மொழியில் பாவேந்தர் கவிதை

பாரதியார் அவர்களின் கவிதைகள் இன்று பல்வேறு மொழிகளிலும் பெயர்க்கப்பட்டு வருகின்றன. அதைப் போலவே பாவேந்தரின் கவிதைகளும் பல மொழிகளில் பெயர்க்கப்படும் சிறப்பைப் பெற்று வருகின்றன.

அர்மான் (ARMAN) என்னும் பாரசீக ஏடு ஒன்று பாவேந்தரின் கவிதைகள் முதல் தொகுதியில் இடம் பெற்றுள்ள 'முன்னேறு' என்னும் தலைப்பிடப்பட்ட கவிதையை, பாரசீக மொழியில் பெயர்த்து வெளியிட்டுள்ளது. அராஷ் (ARASH) என்பவர் இந்த மொழிபெயர்ப்பைச் செய்திருக்கிறார்.

பாவேந்தரின் கவிதையும் பேர்ஷிய மொழியில் பெயர்க்கப்பட்டுள்ள அவரது கவிதை - வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் ஆகியவற்றின் சில பகுதிகளும் இங்கே இடம் பெற்றுள்ளன.

## முன்னேறு

சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம், பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்
பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்குப்
பேசு சுயமரியாதை உலகெனப் பேர்வைப்போம்
ஈதே காண் சமூகமே யாம்சொன்ன வழியில்
ஏறு ஏறு ஏறு ஏறே!

—பாவேந்தர் பாரதிதாசன்

(۱)

مرشوم: ... ...
– تو از هم از هم پاشیده‌ای. تو ...
...
نوخستهای. تو دیگر بادر یاد آموختن نیستی/
حوا ... است.
از تو دیگر انتظاری نمی‌توان داشت.
مرید ان:
ما انتظار داریم
هنگامی که خسته بخواب می‌روی
هیچکس دیگر ترا بیدار نخواهد کرد و نخواهد گفت:
– بلند شو غذا آماده است.
چرا می‌بایستی غذا آماده باشد،
هنگامی که تو دیگر ... وجوش نیستی؟
اگر می‌خواهی بخواب.
هیچکس جستجویت نخواهد کرد تا بگوید:
– ... ...
... ... ... هستند.
چرا می‌بایستی ... ...
هنگامی که مرد های ... ... خواهی شد؟
چونکه حرکت با ... ...
مرشوم:
– ... از حد مبارزه کرده‌ای. تو دیگر در ... مبارزه نیستی

...آن ...
آن ...
... ماد شوار
آن این گوسفند:
اگر ما ... کنیم
... می ...
اگر ما ... انتظار ... را ... 
... هم
... ...
... ... انتظار ...
... ...
هنگامی که ... ... است
... هم ... اند.
... ... ... ... بارند.

ترجمه: ... ...

۱۰ ... ۱۹۸۶

# இவரும் ஓர் அப்பா

**அரசு மணிமேகலை**

''பேப்பரைப் பாத்தியா உமா? இவன்லாம் ஒரு அப்பனா?''

உமாவின் தந்தை கிருஷ்ணன் பேப்பரை உமாவின் முன்னால் விசிறி எறிந்தார்.

''என்னப்பா?''

''படிச்சுப்பாரு! அதோ! போட்டோல்லாம் தான் போட்டிருக்கானே...''

''வரதட்சணைப் பாக்கிக்காக இளம்பெண் உயிரோடு எரிக்கப் பட்டாள். கண்டமுத்துப் புதூரில் நேற்று இந்த சம்பவம் நடந்தது. கணவனைப் போலீசார் கைது செய்து காவலில் வைத்திருக்கிறார்கள்.''

வாய்விட்டு உரக்கப் படித்தாள் உமா.

''இதுக்கு அவ அப்பாவை ஏன்ப்பா திட்டறீங்க?''

''கடைசியிலே போட்டிருக்கான் பாரும்மா. போன வாரம் அந்தப் பொண்ணை அப்பன்காரன்தான் கூட்டிக்கிட்டு வந்து புருஷன் வீட்டிலே விட்டிருக்கான். அந்தப் பொண்ணு பயந்து அழுதுஇருக்கா. அப்படியும் விடாப்பிடியா விட்டுட்டுப் போயிருக்கான்மா...''

புருஷனைக் கண்டு பயந்து அழுகிற ஒரு பெண்ணின் உருவம் மனத்தில் தோன்றியது.

தந்தையின் காலைக் கட்டிக் கொண்டு அழுகிறாள். அப்பா விடுவித்துக் கொண்டு, மெல்ல வெளியே நடக்கிறார். புருஷன் வந்து, அவள் தலை முடியைப் பற்றித் தூக்குகிறான்.

உமா கண்ணை இறுக்கி மூடிக் கொண்டாள். முகமறியாத ஒரு பெண்ணின் அழுகை மட்டும் காதுக்குள் விடாமல் கேட்டுக் கொண்டே இருந்தது.

''புருஷன் கூடத்தான் இருக்கணும்னு கொண்டு வந்து விட்டுட்டுப் போனாரே! இப்ப உயிரோட பலி கொடுத்துட்டாரே என்னத்தைச் சாதிச்சிட்ட மாதிரி?''

பொருமினாள் உமா...

''அதைத்தாம்மா சொல்றேன். ஊராருக்குப் பயந்துகிட்டு, கொண்டாந்து விட்டாரே, இப்ப அந்த ஊரார யமன்கிட்டேயிருந்து மீட்டுக்கிட்டு வந்து ஒப்படைக்கப்போறாங்க?

சின்னவள் ராதிகா, அப்பா பக்கத்தில் வந்து உட்கார்ந்தவள் கடுகடுப்பாகப் பேசினாள்.

''நல்லாச் சொன்னிங்கப்பா, ''ஓங்க பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணலியா இன்னும்''னு நாலுபேரு கேட்டுட்டா போறும். அதுக்குப் பயந்துகிட்டே அவசரம் அவசரமா எவனாவது அகப்பட்டாப் போறும்னு தேடி ஓடறாங்க. மனம் சலிச்சு, பொண்ணு தாய்வீட்டுக்கு வந்தாப் போதும். தரதரன்னு இழுத்துட்டுப் போயித் தள்ளிட்டு வந்துடறாங்க .... ச்சே!''

''அதுதான் ராதிகா ஏன்னு கேக்கறேன்! அங்கே புருஷன் கொடுமை. இங்கே அப்பன் தொந்தரவு. இந்தப் பொண்ணு என்னதான் பண்ணும்? எங்கே போகும்? புருஷன்காரனுக்குத் துணிச்சல் அதிகமாயிடுது. அடிச்சா உதைச்சாக் கூட அப்பன்காரன் வந்து கேக்க மாட்டான்ங்கற ஆணவம் வந்துடுது.''

கிருஷ்ணன் கோபமாகப் பேசினார். கற்பகம் மெல்ல, எட்டிப் பார்த்தாள்.

''சரிசரி... அப்பாவும் பொண்ணும் சாப்பிட வாங்க; அந்தப் பொண்ணோட அப்பா என்ன தன்னோட பொண்ணு செத்தா பரவாயில்லைன்னா அப்படிக் கொண்டு வந்து விட்டிருப்பாரு? பொண்ணு நம்ம வீட்டிலேயே இருந்தா, விரோதம் அதிகமாயிடப்போவுதுன்னு நினைச்சுக் கூட்டிக்கிட்டு வந்து,விட்டிருப்பாரு.''





''ஆமாம்! பொண்ணைக் கொண்டாந்து விட்டுட்டா விரோதம் அதிகமாகாது. இவதான் கண்டா... போடி. பேச வந்துட்டே! உன்னை மாதிரி ஆளுங்களாலேதான் நாடே குட்டிச் சுவராகுது...''

கிருஷ்ணன் சீறி விழுந்தார். ''அப்பா! நம்ம நாட்டுலே இன்னும் சரியா விழிப்புணர்ச்சி ஏற்படலை. பெண்களோட பிரச்சினைகளைப் பெண்களே சரியாப் புரிஞ்சுக்கலை.''

ராதிகா சலிப்போடு முற்றுப் புள்ளி வைத்தாள். துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு சாப்பிட எழுந்தார் கிருஷ்ணன். மவுனமாகப் பின் தொடர்ந்தாள் உமா.

அன்றொரு நாள் நடந்த இந்தச் சம்பவம் இப்போது தேவையில்லாமல், உமாவுக்கு ஞாபகம் வந்தது.

சமையல் கட்டு மூலையில் கைகளைக் கட்டிக் கொண்டு, முதுகைச் சுவரில் முட்டுக் கொடுத்துக் கொண்டு உட்கார்ந்த்திருந்தாள் உமா. வயிறு இலேசாக மேடிட்டிருந்தது.

தயங்கிப் பின் ஏதோ சொல்லத் தொடங்கினாள்.

''நீ ஒண்ணும் சொல்ல வேணாம்மா. குடும்பத்துக்குக் குடும்பம் இருக்கிறதுதான் எல்லாமே. இங்கே நீ ஒக்காந்துக்கிட்டு இருந்தியானா, அங்கே நிலைமை சரியாயிடுமா என்ன? புறப்படு... புறப்படு!''

''அப்பா! அக்காதான் அவ்வளவு சொல்லுதேப்பா! அத்தான் மட்டும் கண்டபடி சுத்தலாம்! வந்து கர்ப்பிணியாச் சேன்னு கூடப் பாக்காமே அக்காவைப் போட்டு அடிக்கலாம். சரி! அவரு அடிக்கிறாரு! கூடவே அந்தாளோட.அம்மாக்காரி என்ன இடிக்கிறது, திட்டறது?''.

''ஏய் ராதிகா....சின்னப் பொர்ண்ணா லட்சணமா உன் வேலையைக் கவனி, கிளம்பு உமா...''

கிருஷ்ணன் அதட்டினார்.

''என்ன இந்த அப்பா இப்படி மாறிவிட்டார்... ஏன்?'' என்பது போல ராதிகா புருவத்தைச் சுளித்துக் கொண்டு பார்த்தாள்.

கிருஷ்ணன் முன்பு வீராவேசமாகப் பேசியபோது, 'பெண்ணுக்குக் கல்யாணம் ஆகவில்லை என்பதும், மாப்பிள்ளை வந்த பின் மாமனார் விலாக்கள் முறிக்கப்பட்டு விடுகின்றன என்பதும், இப்போதுதான் ராதிகாவிற்குப் புரியத் தொடங்கின.

''இனி இவர் இப்படித்தான் பேசுவார்'' என்பது புரியத் தொடங்கிய வேளையில், மனசுக்குள் இருந்த இலட்சிய அப்பாவின் உருவம் மெல்ல மறையத் தொடங்கிற்று...

ராதிகா, பரிதாபமாக உமாவைப் பார்த்தாள்... உமா மவுனமாக, பெட்டிக்குள் துணிகளை அடுக்கிக் கொண்டு, கிளம்பத் தயாரானாள். ராதிகா கண்ணுக்குள் கடல் கொந்தளிக்கத் தொடங்கியது..!

## கருமுத்துச் செல்வம்



தூத்துக்குடியிலுள்ள மத்திய கடல்மீன்வள ஆராய்ச்சி மையம், கறுப்பு முத்துச் சிப்பிகளை வளர்த்து, உருவாக்குவதில் வெற்றி பெற்றுள்ளது. இதற்கான நுட்பமும் இங்கேயே உருவாக்கப்பட்டது.

கரு முத்துக்கள் விலை மதிப்பற்றவை; சிறந்தவை. வளர்ப்பு நுட்பங்களைப் பயன்படுத்தி, பசிபிக் தீவுகளில் கரு முத்துச் சிப்பிகள் உருவாக்கப்படுகின்றன. உலகெங்கிலும் இவற்றுக்கு கிராக்கி உள்ளது. நமது நாட்டில் உருவாக்கப்படும் கருமுத்து 'பிங்க்தாடா புகாடோ' என்ற வகையைச் சார்ந்தது.

தூத்துக்குடி மையம் 1978-ல் நடத்திய ஆய்வில் வங்காள விரிகுடாக்கடலில் அந்தமான்-நிகோபார் தீவுகளின் அருகே கருமுத்துச் சிப்பிகள் கண்டெடுக்கப்பட்டன. பின்னர், லட்சத்தீவுகளில்கூட இவை கிடைப்பது அறியப்பட்டது. இதர இந்திய கடல்பகுதிகளில் இவை மிக மிக அரிதாகவே கிடைக்கின்றன. உலகச் சந்தையில் நமது நாடு தனது பங்கினைப் பெற, போட்டியிட கரு முத்து வளர்ப்பு வெற்றி உதவும்.

தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என முப்பெரும் பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது.

இவற்றுள் இசை நடு நாயகமாக அமைந்து சிறப்புப் பெறுகிறது.

தமிழகத்தில், வாழ்வியல் நிகழ்ச்சிகள் அனைத்திலும் இசைக்கு முதன்மையுண்டு.

தாலாட்டில் தொடங்குகின்ற பாட்டு - வாழ்வு இறுதிவரை தொடர்கின்றது.

பாணர், பாணினி போன்றவர்கள் பண்டைக்காலத்தில் ஊர் ஊராகச் சென்று இசை பாடி மன்னருக்கும் பொதுமக்களுக்கும் மகிழ்ச்சியை அளித்திருக்கிறார்கள்.

இசைக்களத்தில் பல்வேறு வகையான இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. பயன்படுத்தப்படுகின்றன.

தமிழகத்துக்கே உரிய இசைக் கருவிகளுடன் வேறு மாநில இசைக்கருவிகளும் இங்கே ப்யன் படுத்தப்பட்டு வருகின்றன.

ஒரு சில இசைக்கருவிகளின் சிறப்பை இங்கே காணலாம்.

# இணையிலா இன்பம் வழங்கும் இசைக் கருவிகள்

-எம். ஆர். பாலகிருஷ்ணன்

### பஞ்சமுக வாத்தியம்

இது ஐந்து முகங்களைக் கொண்ட மிகப் பெரிய வாத்தியக்கருவி. இது, இதற்காக அமைந்த தாங்கியின் மீது அல்லது நான்கு சக்கரங்களையுடைய வண்டிமீது வைக்கப்பட்டிருக்கும். இது கோயில்களில் மட்டுமே வாசிக்கப் பயன்படுத்தப் படுகிறது. இந்த வாத்தியத்தில் ஐந்து முகங்களும் சிவனுடைய முகங்களாகிய சத்யோஜதம், ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம் ஆகிய பெயர்களால் குறிப்பிடப்படுகின்றன. இந்தக் கருவியின் அடிப்பகுதி மிகப் பெரிய சால் அல்லது குடத்தின் வடிவிலமைந்தது. இது வெண்கலத்தால் ஆனது. இதன் மேற்புறத்திலிருந்து சற்று உயர்ந்த நிலையில் ஐந்து குழாய் உருளைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த உருளைகள் தோலால் மூடப்பட்டிருக்கும். இவை பறை எனப்படும்; இந்தப் பறைகளின் மட்டம் அனைத்தும் ஒரே அளவில் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் சிலவற்றில் மட்டும் நடுவில் உள்ள பறை சற்று உயர்ந்த நிலையிலும் சற்று அகன்ற நிலையிலும் காணப்படுகின்றது. இந்த வாத்தியம் இரண்டு கைகளாலும் வாசிக்கப்படுகின்றது. இது தனியாகவும் சுத்தமத்தளத்துடன் இணைந்தும் வாசிக்கப்படுகின்றது. (இதன் கட்டை தபேலா தரங்கத்தைப் போன்றதாகும்.) இதனுடைய சுதியானது தோலை அதன் கழுத்துப் பகுதியில் இறுக்குவதாலும் நெகிழ்த்துவதாலும் சரி செய்யப்படுகிறது. இந்த பஞ்சமுக வாத்தியம் தமிழில் 'குடமுழா' எனப்படுகிறது. இதனை, 'குடப்பஞ்சமுகி' என்று அருணகிரிநாதர் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய பஞ்சமுக வாத்தியம் சென்னை அருங்காட்சியகத்திற்கு 1937-ல் தஞ்சாவூரிலிருந்து வாங்கப்பட்டது. இதனைப் புதுப்பித்து வாசித்துக் காட்டியவர் திருவாரூர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த தம்பியப்பன் என்பவர். இந்த இசை அகில இந்திய வானொலியால் 1947-ல் பதிவு செய்யப்பட்டது.



பஞ்சமுக வாத்தியம்

### ஏக்தார் - நரவீணா

அரசாங்கத்திற்கு விஷயம் சொல்லல், பஜனை, சோதிடம் ஆகியவைகளில் உபயோகப்படுத்தப்படுகிறது.

### துந்தினா

சிவாஜி பஹாடே (புனா சிவாஜி அரசு) கதை மூலம் அரசருக்கு மக்களுடைய நிலைமையைத் தெரிவிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டது.

### தந்திப் பானை

300 வருடங்களுக்கு முன் சென்னையில் பயன்படுத்தப்பட்டது. பாஞ்சாலங் குறிச்சி மன்னன்



ஏக்தார் - நரவீணா


கட்டபொம்மன் படைகளுக்குப் பாடல் மூலம் துப்புத் தெரிவிக்க இக்கருவியைப் பயன்படுத்தினான். போகி பண்டிகையின் போது சென்னையில் இதனை வாசிப்பார்கள். இந்த இசைக்கருவியின் துணையோடு, வெள்ளையர்கள் நம் நாட்டை எப்படி ஏமாற்றிப் பிடித்தனர் என்பதைப் போன்ற பரிகாசப் பாடல்கள் பாடுவார்கள். தெருக்களில் பாடிவரும் இப்பாட்டுக்களையும் இக்கருவியையும் வெள்ளையர் அரசாங்கம் தடை செய்தது. 1947-இல் இக்கருவி அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டது.



தண்டோரா

**கும்மட்டி**

பாலநாகம்மா கதையிலும், ராஜா தேசிங்கு கதையிலும் இதை இசைத்துக் கொண்டே கதை சொல்லுவார்கள். தண்ணீர் கொண்டு செல்லும் மண் கூஜாவில் இக்கருவியைச் செய்து இக் கதைகளைச் சொல்லி வாசித்தார்கள். இதற்கு ''பு்ர்ர கதா'' என்று பெயர். பால நாகம்மா கதையானது பதிபக்தியின் பெருமையைச் சிறப்பாக எடுத்துரைப்பதாகும். இசைத்துக் கொண்டு வாசிப்பது நாகேந்திர வீணை எனப்படும். இந்தத் தாள வாத்தியம் கும்மட்டியைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு வாசிப்பார்கள்.



துந்தினா



நாதபேரி-நகாரா

**தண்டோரா-தமுக்கு வாத்தியம்**

இது கோவில்களில் சாமி ஊர்வலம் வரும்போது, அதை மக்களுக்கு அறிவிக்கவும், அரசாங்க விஷயங்களை மக்களுக்கு அறிவிக்கவும் பயன்படுத்தப்பட்டது. காய்கறிகள் விற்றுவரும் வியாபாரிகள் சந்தையில் மக்களுக்குத் தெரியப்படுத்தவும் இதை உபயோகப்படுத்தினர். மண்சட்டி போன்ற அமைப்பில் செய்து,தோலால் மூடப்பட்டது. செம்பு, பித்தளை, வெண்கலம், மரம் ஆகியவற்றிலும் செய்வார்கள். வீடுகள் ஏலம் இடும்போது அதனை அறிவிக்க இதனை உபயோகப்படுத்துவார்கள். இது தோலால் ஆனது.



தாந்தீப் பானை

**தாசரி தப்பட்டை-வெண்கலத் தட்டு (பெல்)**

திருப்பதி சாமிக்குக் கோவிந்தா என்று கூறிக்கொண்டு வாசிப்பது. புரட்டாசி மாதம் தளிகை போடும்போது வாசிப்பது.

**டில்லியில் . . .**

அக்பர் சக்ரவர்த்திக்கு முகமது சலீம் ஜஹாங்கீர் பிறக்கும்போது டங்கா-நகாரா-நாதபேரி என்ற வாத்தியத்தை இசைத்து அரசுக்குத் தெரிவித்தனர். இது தோல் சம்பந்தப்பட்ட இசை. இதை ஆக்ராவிலிருந்து டெல்லிக்குத் தெரிவித்தனர். இது, அரசர் கட்டளையை மக்களுக்கு அறிவிக்கும்போது இசைக்கும் கருவியாகும். கோவில்களில் ஆராதனை செய்வதைத் தெரிவிப்பதும் ஆகும். இதை அக்பருக்குச் சொல்லிக் கொடுத்தவர் பீர்பால் எ-ற அமைச்சர் ஆவார்.

**திருநெல்வேலியில் . . .**

பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் அரசருக்கு, திருநெல்வேலி சிவன் கோவில் - திருச்செந்தூர் முருகன் கோவில் ஆகியவற்றில் நடக்கும் ஆராதனையை அறிவிப்பது. அதன்பிறகே அரசர் பூசைசெய்து உணவு உட்கொள்வார்.

**ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோவிலில்**

நகாரா மண்டபத்திலிருந்து சாமி புறப்படும்போது நாகரா வாத்யத்தை இசைப்பார்கள். இந்த மண்டபத்திலிருந்து, சுவாமி புறப்பட்ட செய்தியை மற்ற நகரங்களுக்குத் தெரிவிக்க இதைப் பயன்படுத்தினார்கள்.

# அன்புக்குத்தான் எத்தனை அடைக்குந்தாழ்கள்?

## டாக்டர் பொன் சௌரிராஜன்

எப்படிப் பிறந்தேன், எப்படி வளர்ந்தேன், அன்போடு காதலித்து இன்பமோடு எப்படி வாழ்ந்தேன்! - இவற்றையெல்லாம் இன்று நினைத்து என்ன பயன்? அவற்றோடு அந்தப் பிறந்து வளர்ந்த இன்பத்தோடு, காதலித்து வாழ்ந்த இன்பத்தோடு சாகாமல் போனேனே என்று இன்று கலங்குகிறேன். அன்று அவருடனேயே செத்தொழிந்திருந்தால் - சாவு என்னும் ஒரு சில வினாடித் துன்பம் இருந்தாலும் உள்ளம் நிறைந்த இன்பத்தோடு மாண்டு மறைந்திருப்பேன்!

அவர் இறந்தார். அவ்வளவுதான். மறுநாளே அண்ணியும் நாத்தனாரும் பெட்டி சட்டிகளைத் துழவித் துழவித் தங்கட்கு வேண்டியவற்றைச் சேகரித்துக் கொண்டனர். மாமியாரோ 'அங்கு நில்லாதே' 'இங்குச் செல்லாதே' என்று மிரட்டி வேலை வாங்கத் துவங்கிவிட்டார். தப்பித் தவறி கோயில், குளம் என்று நாத்தியுடனோ - மாமியுடனோ எப்போதோ தேர்த் திருவிழாவில் வெளியே சென்றால், உண்டு கொழுத்து ஊர் சுற்றும் வெறிநாய்களின் கழுகுக் கண்கள் என்னையே ஊடுருவிப் பார்த்தன. எப்படியோ அத்தனையையும் தாங்கிக் கொண்டு அவர் தந்த, யாரும் பறிக்க விரும்பாத ஒரே ஒரு செல்வத்தால், என் கைக்குழந்தையால் - ஓரளவு வாழ்ந்து வந்தேன். இந்தத் துன்பத்தையும் தொல்லையையும் அறிந்துதானோ என்னவோ என் அண்ணன் என்னைக் காண ஒரு சமயம் அங்கு வந்திருந்தார்.



இதனை எல்லாம் என் அண்ணனிடம் சொல்லி அழுதேன். அவரும் கலங்கினார். 'மாறுதலாக இருக்கட்டும்' என்று என் மாமனாரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு, என்னை அழைத்துச் சென்றார். நானும் மகிழ்வோடு கைக்குழந்தை கண்ணனைத் தூக்கிக்கொண்டு சென்றேன். அண்ணிக்குத் துணையாக என் குழந்தையோடு அவள் குழந்தைகளையும் பார்த்துக் கொண்டேன்; அவள் கைவேலைகளை நானே வலியவந்து ஏற்றுச் செய்தேன். இயல்பாகவே இரக்கக் குணம் உடைய அண்ணி, என்னை அன்புடனேயே பார்த்துக் கொண்டாள். என்றாலும் பிறந்து வளர்ந்த சொந்த வீட்டிலேயே உரிமையில்லாத ஒருத்தியாக, பிறர் ஏவலுக்குக் காத்துப் பணி செய்து வயிறு வளர்க்கும் ஒருத்தியாக வாழ்வது மனத்திற்குப் பிடிக்கவில்லை என்றாலும் புகுந்த அந்த வீட்டை விட்டு பிறந்த இந்த வீடு அவ்வளவு கொடுமையாக இல்லை.

இப்படி அண்ணன் வீட்டில் இருந்த அப்போதுதான் குமரவேலனைச் சந்தித்தேன். அன்றாடம் நான் கோயில் குளத்துக்குப் பொழுது விடியுந்தறுவாயில் சென்று குழந்தையின் துணிகளைத் துவைத்துக் குளித்துவிட்டுக் குடம் விளக்கிக் கழுவி, நீர்மொண்டு கொண்டு வந்து விடுவேன். சில நாட்களாக யாரோ ஒருவர் அதே நேரத்தில் வந்து குளித்துக்கொண்டிருந்தார். ஒரு நாள் நான் குளத்திலிருந்து கரையேறும்போது தோளில் துவைத்துப் போட்டிருந்த துணிகளில் ஒன்று, கீழே விழுந்துவிட்டது. தோளில் நிறையத் துணிகளும் இடுப்பில் குடமும் இருப்பதைக் கண்டு, விழுந்த துணியை அவர் எடுத்து, என் தோளில் போட்டுவிட்டு அன்போடு என்னைப் பார்த்தார். நானும் என் நன்றியைக் கண்களாலேயே காட்டிவிட்டு வீட்டுக்கு வந்து விட்டேன்.

பிறகு சில நாட்கள் அறிந்தும் அறியாமலும் அவரும் நானும்

ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வோம். ஒருவர் வருகைக்காக ஒருவர் காத்திருப்போம். ஒருநாள் அவர் பேசினார். 'பொன்னு! இன்னும் இரண்டு நாளில் நான் சென்னைக்குப் போறேன். இந்தக் கோயில் வேலையாக வந்திருந்தேன். வேலை முடிந்துவிட்டது. உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது. திருமணம் செய்து கொள்ளுகிறேன்' என்று எடுத்த எடுப்பிலேயே எல்லாம் பேசிவிட்டார். என்ன பேசுவது என்று ஒன்றுந் தோன்றவில்லை.

'சாயங்காலம் கோயிலுக்கு வருகிறேன்' என்று சுருங்கச் சொல்லிவிட்டு விறுவிறு என்று வீட்டுக்கு வந்துவிட்டேன். மனம் 'படபட' என்று அடித்துக்கொண்டது. என் கணவரின் அன்பான முகமும் அழகான தோற்றமும் நினைவுக்கு வந்தன. அவரை மானசீகமாகக் கண்டு மன்னிப்புக் கேட்டேன். இப்படிப் புகுந்த வீட்டுக்கும் பிறந்த வீட்டுக்கும் பாரமாக இருப்பதைவிட, உற்றாரின் - ஊர் இளைஞர்களின் கண்ணுக்கும் காமச் சொல்லுக்கும் கருவியாவதைவிட, அன்பான, நல்ல ஒருவருக்கு மனைவியாவது கட்டிய கணவனுக்குத் துரோகமாகாது என்று என் மனச்சான்றே சொல்லி வற்புறுத்தியது.

ஒரு முடிவோடு அன்று மாலை கோயிலுக்குப் போயிருந்தேன். கைக்குழந்தையையும் தூக்கிக் கொண்டு போயிருந்தேன். 'பொன்னு! குழந்தை யாரது?' என்று கேட்டபடியே மெல்ல நெருங்கினார்.

'இம்! என்னுடையதுதான்! என்று தலையைக் குனிந்தபடியே கூறினேன்.

'ஆங்!' என்று நெருங்கிக் கொண்டிருந்தவர் நெருப்பை மிதித்ததுபோல் நின்றுவிட்டார். தலையைத் தூக்கிப் பேசுவதற்குள் விடுவிடு என்று நடந்து கோயில் அலுவலகத்துள் சென்று மறைந்துவிட்டார்.

என் மாமியார் வீட்டாரும் 'வா' என்று வந்து அழைக்கவில்லை. ஒரு கடிதம்கூட எழுதவில்லை. இந்த நிலையில்கொண்டு போய்விட அண்ணனுக்கு மனம் வரவில்லை. அண்ணிக்கும் துணையாக இருந்ததால் அவளும் வீட்டைவிட்டுப் போகும்படி என்னைக் கூறவில்லை. ஆனால் அண்ணனுக்கு மட்டும் உள்ளூர நான் அனுபவித்து வரும் அடிமைத் துன்பம் உறுத்திக்கொண்டே இருந்திருக்க வேண்டும். ஒரு சமயம் அண்ணி தன் குழந்தைகளுடன் பிறந்தகத்துக்குப் போயிருந்தபோது அண்ணன் ஒரு நண்பரை அழைத்துவந்து எனக்கு அறிமுகப்படுத்தினார்.

'தங்கச்சி! இத பாரும்மா! நீ எவ்வளவு நாள் இப்படிக் காலங் கழிப்பே. இன்னும் இருவது வயசுகூட ஆகலை. அதுக்குள்ளே கடவுள் சோதிச்சுட்டார்' என்று விம்மி விம்மி அழுதார். பிறகு தொடர்ந்தார்.

'நீ விதவை என்பதைச்சொல்லித் தான் இவரை அழைத்து வந்தேன். இவர் மதுரையில் ஆசிரியர் வேலை செய்கிறார். என் நண்பன் திருமலை, இவரை அனுப்பி வைத்துள்ளான். இவருக்கு உன்னைப் பிடித்துள்ளது. உன் நினைப்பு எப்படியோன்னுதான் தயங்குகிறேன்' என்று ஒருவாறு சொல்லி முடித்தார்.

நான் தேம்பி தேம்பிக் கலங்கியபடியே கீழே விளையாடிக் கொண்டிருந்த கைக்குழந்தையை எடுத்து அணைத்தபடி தோட்டத்துப் பக்கம் போனேன்.

'தங்கச்சி' என்ற அண்ணன் குரல் கேட்டுத் திரும்பினேன்.

'என்னவோ எனக்கு நீ பாரம்னு நெனச்சி இப்படி முடிவு எடுக்கலே! நாலு வேலைக்காரி வேலெயே செய்துட்டு ஒரு வயிற்றுக் கஞ்சி குடிக்கிறே! நீ பிறந்த வீட்டிலேயே அடிமை போலே வாழ்ற உன்னை எத்தனை நாள்தான் கல்லுமாதிரி இரக்கமில்லாமெ பார்த்துக்கிட்டிருக்க முடியும். என்னாலே முடியலே அம்மா! அதான் திருமலைக்கு எழுதியிருந்தேன். அனுப்பி வைச்சிருக்கான்' என்று கலங்கியபடியே மாட்டுக் கொட்டகை மூங்கிலைப் பற்றியபடி சொன்னார்.

அண்ணனின் அன்பும், அவர் படும் துன்பமும் எனக்கு விளங்கிற்று.

'சரி அண்ணா! உங்க விருப்பம் போல் செய்யுங்கன்னு' சொல்லிக் குழந்தையைக் கொடுத்துவிட்டு மாட்டுக் கொட்டிலைக் கூட்டிச் சுத்தம்செய்யலானேன். அண்ணன் குழந்தையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் போனார். கொட்டில் கூட்டி முடிந்ததும் வீட்டினுள் போனேன். அந்த நண்பர் அங்கு இல்லை. அண்ணன்மட்டும் குழந்தையை மடியில் போட்டுத் தட்டிக்கொடுத்தபடியே வருத்தத்தோடு தூங்க வைத்துக்கொண்டிருந்தார். அவர் கண்கள் கலங்கியிருந்தன.

அண்ணன் மடியில் கிடந்த குழந்தையைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டே ''என்ன அண்ணா! ஏன் இப்படிக் கவலையாக இருக்கீங்க!' என்று கேட்டேன்.

'ஒண்ணும் இல்லம்மா! நீ விதவையின்னு தெரிந்துதான் அவன் வந்தானாம்! ஆனால் கையில் குழந்தை இருப்பது தெரியாதாம். குழந்தையோடு உன்னைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தா அவனைச் சுற்றியிருப்பவங்கள்ளாம் கேவலமா நெனப்பாங்களாம். குழந்தையை ஏதாவது ஒரு கான்வென்ட்லே சேர்த்துட்டா அவ்வளவு கஷ்டமிருக்காதாம். எல்லாத்துக்கும் சேர்த்து ஒரு இருபத்தஞ்சாயிரம் கொடுத்துட்டா போதும். கடிதம் எழுதுங்கள் என்று சொல்லிவிட்டுப் போயிட்டான்!' என்று கலங்கினார்.



குழந்தையைத் தரையில கிடத்திவிட்டு அவர் கால்களைப் பிடித்துக்கொண்டு கதறினேன். 'அண்ணா! வேலைக்காரியா இங்கு வாழ எனக்கு உரிமை கொடுங்க. இதுவே போதும். எப்படியோ இந்தக் குழந்தையை படிக்க வைத்துப் பயனுள்ள பிள்ளையா செய்திடுங்க....அது போதும். அதுக்காக உங்களுக்கும், அண்ணிக்கும் செருப்பா உழைக்கிறேன்'னு வாய்விட்டு அழுதேன்.

அண்ணன் அன்போடு என் தலையை வருடியபடியே' அழாதே தங்கச்சி, அழாதே! நான் சாகிற வரை நீ என்னோடேயே இருக்கலாம். போ! உன் தலைவிதி இப்படி இருக்கு!' என்று துயரத்தோடு சொல்லி, எழுந்து வயல் வெளிப் பக்கம் போய்விட்டார்.

அண்ணன் கொடுத்த வாக்கைக் காப்பாற்றிவிட்டுத்தான் செத்தார். என் மகனைப் படிக்க வைத்து, பெரிய பதவியிலும் வைத்து, செல்வக் குடும்பத்தில் திருமணமும் செய்து வைத்துவிட்டுத்தான் செத்தார். அதன் பிறகு அண்ணன் போன பிறகு அண்ணியின் சொந்தக்காரங்க எல்லாம் அங்கே அதிகமாக வந்து வந்து போனாங்க. வந்து போகும் போதெல்லாம் ஆற்றல் எல்லாம் அழிந்துபோய், சோற்றுக்குக் கேடாய்க் கிடக்கும் இந்தக் கிழத்தை யாரும் மதிப்பதில்லை.

'பெற்ற பிள்ளைக்குச் செலவுன்னு இங்கே தெண்டச்சோறு தின்னுக்கிட்டுக் கிடக்கு பாரு இந்தக் கிழம்!—இப்படிப் பேசினர் சிலர்.

'அண்ணன்! அண்ணன்னு! அண்ணன் சொத்தை முப்பத்தஞ்சு வருசம் தின்னு அண்ணனை மொட்டையடிச்சி வைகுண்டத்துக்கும் அனுப்பிடுச்சி இது! இன்னும் யாரெ மொட்டையடிக்க இங்க இருக்கோ!''— இப்படிச் சிலர்.

'டேய்! கிழத்தை . லேசா நினைக்காதே! பாகம் கேட்டாலும் கேக்கும்!' இப்படியும் ஒருவர்.

'ஏன், பெத்த பிள்ளைகிட்டே போய் இருக்கிறதுதானே! — அவன் தான் பட்டணத்திலே பெரிய ஆபீசரா இருக்கானே! அவன் வளர்க்கிற நாய்க்குப் போடுற சோறிலே கால்வாசி இந்தக் கிழத்துக்குப் போட மாட்டானா! நம்ம தலையெ உருட்டிக்கிட்டு இங்கே கிடக்கே'' இப்படி ஒருவர்.



'தலையெ உருட்டினாலும் பரவாயில்லை! தலையெப் போட்டுட்டா இந்தப் பஞ்ச காலத்திலே வேண்டியவன் வேண்டாதவன் எல்லாம் சொந்தம் சொல்லிகிட்டு ஏழெட்டு நாள் சோறு, திங்க வந்துடுவான். கடைசிக் காலத்திலே அது அது, அது அது இடத்திலேதான் இருக்கணும்; சாகணும்; அதுதான் மரியாதை! அதுதான் பெருமை!'

விட்டு விட்டு ஆளுக்கு ஆள் போகிறபோதும் வருகிற போதும் பேசுகின்ற இந்தப் பேச்சுக்களைக் கேட்கச் சகிக்காமல் கடுதாசி மேல் கடுதாசி போட்டு என்னை அழைத்துக்கொண்டு போகும்படி எழுதியிருந்தேன் என் மகனுக்கு; அவனும் வரவில்லை. பதில் கடுதாசியும் வரவில்லை. ஒரு நாள் துணிந்து நானே புறப்பட்டு எப்படியோ கையிலிருந்த முகவரியைக் காட்டிப் பட்டணத்தில் அவன் வீட்டைக் கண்டு பிடித்துப் போய்விட்டேன்.

நான் போயிருந்தபோது என் மகன் வேலைக்குப் போயிருந்தான். வீட்டில் யார் யாரோ இருந்தனர். என் மருமகளது உறவினர்களாக இருக்கலாம். மிக அந்யோன்யமாகப் பழகிக்கொண்டிருந்தவர்கள் என்னைக் கண்டதும் ஏனோ முகத்தைச் சுளித்துக்கொண்டு சாடைமாடையாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். 'வா' என்று வாய் திறந்து அழைப்பவர் இல்லை! வேலைக்காரன் தோட்டத்துப் பக்கம் அழைத்துப்போய் ஒரு மூலையில் இடங்காட்டி உட்காரச் சொன்னான். இதனையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மருமகள் வாய்திறந்து ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. அவள் பட்டுப்புடவைகளுக்கும் நகைகளுக்கும் முன்னே கந்தல் ஆடையோடு நரைத்துத் திரைத்துப்போய் நான் நின்றேன்.

அங்கே பக்கத்து அறையில் கட்டியிருந்த கறுப்பு நாய் ஒன்று குலைத்து என்னைக் குலை நடுங்கச் செய்தது. 'எப்படியோ உயிரைப் பிடித்துக்கொண்டு 'மகனைப் பார்க்க வேண்டும்; அவன் இருந்தால் இப்படி எல்லாம் நடந்திருக்காது; அவன் வரட்டும்' என்று காத்துக் கிடந்தேன். சாயங்காலம், "ஏம்மா வந்தே! உனக்கு இங்கேமரியாதை கிடைக்காதுன்னுதானே நான் அழைத்துவரலே. வா போகலாம்," என்று என்னை அழைத்துக் கொண்டு ஒரு சிற்றுண்டிச் சாலைக்குப் போய் இரண்டு இட்டலி வாங்கிக் கொடுத்துத் தின்னச் சொன்னான். மடியிலும் தோளிலும் போட்டு, சர்க்கரை தொட்டு அவனுக்கு இட்டலி ஊட்டிய நெனப்பு வந்தது. தொண்டை அடைத்தது. இட்டலி உள்ளே இறங்கவில்லை. தலையைத் தூக்கிப் பார்த்தேன். தலை குனிந்துகொண்டு உட்கார்ந்திருந்தான். கண்களிலிருந்து 'பொலபொல' என்று கண்ணீர் அந்தச் சாப்பாட்டு மேசையில் உதிர்ந்து கொண்டிருந்தது.

''தம்பி! டேய் தம்பி! அழாதே! உனக்காகத்தான் இவ்வளவுநாள் உசிரு வைச்சிக்கிட்டிருந்தேன். அழாதேடா-நான் போயிடுறேன். ஏதோ - ஒங்கிட்டே கொஞ்ச நாள் இருந்து, நீ ஊத்துற கஞ்சியைக் குடிச்சிட்டு உன் கண் முன்னாலேயே சாகணும்னு ஒரு ஆசை. பரவாயில்லை. அதெல்லாம் போனா போகட்டும். நீ நல்லாயிரு. அதுபோதும். இந்த நெனப்புலேயே கண்ணெ மூடிடுவேன்'' என்று அழுதபடியே நாற்காலியை விட்டு எழுந்தேன். அதைக் கேட்டுப்பெருமூச்சு விட்டபடியே அவனும் எழுந்தான். என்னோடு ரயில் நிலையம் வரை வந்தான். ''அம்மா என் பியூனை வைத்துவிட்டுப் போறேன். வீட்டில் வேலையிருக்கு '' என்று தயங்கித் தயங்கிச் சொல்லி விட்டுப் போய்விட்டான். அந்தப் பியூன் இரவு மூணு மணி வரை காத்திருந்து ரயில்வண்டியில் ஏற்றி ''அம்மா மானாமதுரைக்கு டிக்கட் எடுத்திருக்கேன்; இறங்கி ஊருக்குப் போங்க'' என்று என்னை வண்டியில் ஏற்றிவிட்டான்.

வண்டி புறப்படும்போது அந்தப் பியூன் என் மகன் கொடுக்கச் சொன்னதாகக் கையில் ஏதோ ஒரு பொட்டலம் கொடுத்தான். அதைப் பிரிக்கவேயில்லை. அந்தப் பொட்டலத்தைப் பார்த்ததும் நான் ஊரிலிருந்து கொண்டுவந்த பொட்டலம் என் நினைவில் வந்து என்னைக் கொத்திக் கொத்தித் தின்றது. அவன் புள்ளெ. என் பேரனுக்காக வாங்கிய பிஸ்கோத்து அது. அதை,தையா தக்கான்னு தோட்

# கற்றாழை நாரில் கலைப் பொருட்கள்!



பெண்களின் பொருளாதார வளம், நாட்டின் முன்னேற்றம். பெண்களின் கையில் கிடைக்கும் வருமானம் அவர்கள் குடும்பம் செழிக்கப் பயன்படும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பெண்களுக்கென்று ஒரு புதிய தொழில் துவங்கப் பட்டுள்ளது. கற்றாழையில் கண்கவர் வண்ணக் கைப்பைகள், மேசை விரிப்புகள், அலங்காரப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. வெளிநாடுகளும் விரும்பும் வகையில் எழில்மிகு பொருட்கள் இங்குள்ள மகளிரால் தயாரிக்கப்படுகின்றன.

இம்மாவட்டத்தில் 20,000 கற்றாழைச் செடிகள் பயிராக்கப்பட்டுள்ளன. மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மானாங்குடி கிராமத்தில் 10,000 செடிகள் பயிர் செய்யப் பட்டுள்ளன. சூரன்கோட்டை, துத்திவலசை, புதுமடம், பிள்ளைமடம், மரக்காயர் பட்டினம் என்ற கிராமங்களில் 5 மையங்கள் உருவாக்கப்பட்டு 125 பெண்கள் பயிற்சி பெறுகிறார்கள். இந்தப் பயிற்சிக் காலங்களில் ரூ. 75 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

பயிற்சிக் காலம் முடிந்தவுடன் சுயமாகத் தொழில் துவங்கி வருமானம் பெறும் வகையில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், மூன்றில் ஒரு பங்கு மானியமாக ரூ. 3,000 கடன் தொகை வழங்கப்படும். இவர்கள் தயாரிக்கும் பொருட்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வாங்கி விற்பனை செய்யப் படும்.

இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி முகமை இப்பயிற்சினை நடத்தி வருகிறது. இம்முகமையின் தலைவரான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், 'ஆண்டு ஒன்றுக்கு 600-க்கு மேற்பட்ட பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் என்றும், சுயமாக வேலை துவங்கினால், ஒரு பெண்ணுக்கு மாதம் ரூ. 300 வரை வருமானம் பெருகும் என்றும், ஆண்டில் பாதி நாட்கள் விவசாய வேலையின்றியிருக்கும் பெண்களுக்கு நல்லதொரு வாய்ப்பு' என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

கற்றாழை நார், மதுரை மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து வரவழைக்கப்படுகிறது. ஒரு கிலோ நார் 10 ரூபாய். இந்த நாரில் பல வண்ணச் சாயம் ஏற்றி, பின்னர் பொருட்கள் தயாரிக்கின்றனர். ½ கிலோ நாரில் ஒரு அழகான கைப்பை தயாரிக்கின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில், மானாங்குடி கிராமத்தில் மணல்குவிப்பைத் தடுக்கவும் மூலப்பொருள் பெறவும் கற்றாழை பயிரிடப் பட்டுள்ளது. ஏற்கெனவே இராமேஸ்வரம், சூரன்கோட்டை, தங்கப்பாபுரம் ஆகிய இடங்களில் பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்கும் தொழில் பயிற்சி 80 பெண்களுக்கு அளிக்கப் பட்டு வருகிறது.

**க. பன்னீர்செல்வம்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

---

டத்துப் பக்கம் நடந்து வந்து என் பேரன்கிட்டே கொடுத்தேன். அவனும் வாங்கிக்கிட்டான். அவ - அதான் என் மருமவ —ஏதோ இங்கிலீசுலே சொல்லித் திட்டிட்டுப் பிடுங்கி நாய்க்குப் போட்டுட்டா. ஆ......நான் பெத்த புள்ளொயோட புள்ளெயெத் தொடக்கூட என்னாலே முடியலே— அவன்கிட்ட என் மகங்கிட்ட என்னென்னவோ சொல்லனும்னு நெனச்சேன், ஒன்னுஞ் சொல்ல முடியாமெ-என்னை ரயிலேத்தி அனுப்பிச்சிட்டான் - அவன் நல்லாயிருக்கணும் - என் மகன் குழந்தையாயிருந்தப்போ இருந்த மாதிரியே அந்தப்புள்ளெதையா தக்கான்னு நடந்திச்சு. அதுவும் நல்லா இருக்கோணும் இப்படி என் நினைவுகள் குமிழிட்டுக் கொண்டிருந்தன. தூங்கிப் போனேன். தூக்கத்திலும் இதே நினைவுகள், ஏக்கங்கள். 'மானா மதுரை, மானாமதுரை' என்ற ஓசை கேட்டது.

'ஆ! இது அவர் ஊரல்லவா' என்று பொறிதட்டியது. எதையும் யோசிக்காமல் விடு விடு என்று இறங்கிக் கால் போன போக்கில் மாலை மயங்கும் அந்த நேரத்தில் நடந்தேன். கால் சோர்ந்து, மனம் சோர்ந்து தடுமாறினேன். மெல்ல ஒரு சுமைதாங்கியைப் பிடித்தபடியே உட்கார்ந்தேன். சுற்று முற்றும் பார்தேன். சுடுகாடு. 'ஆ சரியான இடத்துக்கே வந்துவிட்டோம்' என்று என் தெம்பையெல்லாம் வரவழைத்து மெல்ல எழுந்தேன். பெரிய அம்மையில் மாண்டுபோன என் கணவரைப் புதைத்த இடத்தை மெல்லத் தேடினேன். ஏதோ ஓரிடம், கொடுக்காப்புள்ளி மரம் அங்கு முளைத்திருந்த இடம் என்பது நினைவுக்கு வந்தது. அங்கே போய் அவர் புதைந்து கிடக்கும் அந்த இடத்தில் சாய்ந்தேன். அப்போதுதான் மகன் கொடுத்த பொட்டலம் நினைவுக்கு வந்தது. அதைப் பிரித்துக் கையாலேயே தடவிப் பார்தேன். ஐந்தாறு நோட்டுக்கள் இருந்தன. ஐம்பது அறுபது ரூபாய் இருக்கும். அனாதைப் பொணமாய்ச் சாக வேண்டியதில்லை என்ற கடைசி நிம்மதி. இந்தப் பொணத்தைப் புதைக்க ஐம்பது அறுபது ரூபாய் போதாதா? - 'அப்பா! உன் காசு நல்ல சமயத்தில் உதவி விட்டதடா' என்ற வாழ்த்தோடு என் வாய் மூடிக்கொண்டது.

# பாவேந்தரின் குடும்பவிளக்கில் வாழ்வியல்

-டாக்டர் சிலம்பொலி சு.செல்லப்பன்



நல்லகுடும்பம் ஒரு பல்கலைக்கழகம். குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம். நல்ல குடும்பம் எப்படி இருக்கும் என்பதைப் புரட்சிக் கவிஞர் 'குடும்ப விளக்கில்' எழுத்தேவியமாகத் தீட்டியுள்ளார். இந்நூல் ஒவ்வொரு குடும்பத்திலும் இன்றியமையாது இருக்க வேண்டிய ஒன்று.

இந்நூல் ஒருநாள் நிகழ்ச்சி, விருந்தோம்பல், திருமணம், மக்கட்பேறு, முதியோர் காதல் என ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது. ஐந்தும் தனித்தனி நூல் என்றே கூறலாம். 'ஒரு நாள் நிகழ்ச்சி' என்னும் முதற் பகுதியில் ஒரு நல்ல குடும்பத்தின் தலைவன், தலைவி, குழந்தைகள், பணிகள் முதலிய பல கூறுகள் இடம்பெற்றுள்ளன. ஒரு நாளின் புலர் காலை தொடங்கி அன்றைய நாளின் நள்ளிரவுவரை குடும்பம் எப்படி நடக்கிறது என்பதைத் தமக்கே உரிய அழகிய கவிதை நடையில் வடித்துக் காட்டுகிறார், பாவேந்தர் பாரதிதாசன். இந்த ஒரு பகுதியிலேயே ஒரு நல்ல குடும்பத்தின் தன்மையைக் காட்டியிருந்தாலும் நிகழ்ச்சித் தொடர்ச்சி கருதியே பின்னர் உள்ள நான்கு பகுதிகளையும் பாடியுள்ளார். 'குடும்ப விளக்கில்' வாழ்வியற் கருத்துக்கள் நிறைய இடம்பெற்றுள்ளன.

வாழ்வுக்கு அன்பே அடிப்படை. அன்பு-அருள் பெருகி, அவற்றின் வழி அறம் சிறக்க வேண்டும். இல்லறம் என்பது நல்லறம் செய்தற்கே. இந்த அடிப்படையிலேயே பாவேந்தரின் 'குடும்ப விளக்கு' ஒளி விடுகிறது. குடும்ப விளக்கின் தலைவன், தலைவி, குழந்தைகள், முதியோர் அனைவரும் அன்பின் வடிவமாகத் திகழ்கிறார்கள். கணவனோடு மனைவியோ, மனைவியோடு கணவனோ, பெற்றோர்களோடு குழந்தைகளோ, குழந்தைகளோடு பெற்றோர்களோ மோதிக்கொண்ட நிகழ்ச்சியைக் குடும்ப விளக்கில் எங்கும் காணமுடியாது. கடமையை வற்புறுத்த - தொண்டு செய்யத் தூண்ட - வாழ்க்கையின் பொருளைப் புலப்படுத்த ஒருவர் மற்றொருவரிடம் அன்பாக சிலபோது கடிந்து கொள்வதை மட்டுமே ஓரிரு இடத்தில் காணமுடியும். வாழ்வியலுக்கு அன்பே அடிப்படையானது என்பதைப் பாவேந்தர் நூல் முழுதும் பரக்கப் பாடியுள்ளார். அன்புக் குடும்பமே அழகுக் குடும்பமாக இருக்கும் என்பதைக் குடும்ப விளக்குப் பாத்திரங்கள் உணர்த்திக் காட்டுவதை நூலைப் படிப்போர் எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

வாழ்வியலில் 'கடமையுணர்வு' மிக இன்றியமையாததென்பதைக் குடும்ப விளக்கின் தலைவியைக் கொண்டே அறிந்து கொள்ளலாம். கதிரவன் எழுமுன் விடியற் காலையிலேயே எழுகிறாள் அவள்; புதுப்புனல் மொண்டு முகம் துலக்குகிறாள். வாசலுக்கு நீர் தெளித்துக் கோலமிடுகிறாள். குழந்தைகள் - கணவன் துயிலெழ யாழிலே பாட்டிசைக்கிறாள். அப்பாட்டினால் துயிலெழுந்த அவர்கள் பாவை முன் அமர்கின்றனர். அமைதி தவழும் இளம்பகலில் தமிழிசை கமழக் கமழ எழுகிறது. அடுத்த பணிகளுக்கு விரைகிறாள் அழகு மங்கை.

''பறந்தனள் பச்சைப் பசுங்கிளி; மாடு
கறந்தனள்; வீட்டை நிறம் புரிந்தனள்;
செம்புத் தவலை செழும்பொன் ஆக்கினாள்;
பைப்புனல் தேக்கினாள்; பற்ற வைத்த
அடுப்பினில் விளைத்த அப்பம் அடுக்கிக்
குடிக்க இனிய கொத்து மல்லிநீர்...''

இறக்கி வைத்தாள். பின்னர் 'அத்தான்' என்றாள். அழகியோன் வந்தான். அவனுக்குக் குளிர் புனல் காட்டிக் குளிக்கச் சொல்லி முன்னின்று உதவினாள். அடுத்துப் பிள்ளைகாள் என்றனள். கிள்ளைகள் வந்தனர். அந்நின்ற திருககோலப் பொன்னின் சிலைகட்கு நன்னீராட்டி நலஞ் செய்தாள். குழந்தைகட்கும் கணவனுக்கும் அன்போடு பரிமாறினாள். இத்துணையும் முடிந்த பின்புதான் 'மணிப்பொறி' ஆறு என்று அடித்தது.

வீட்டு வேலை செய்யும் எந்திரமாக மட்டும் அவள் இருக்கவில்லை. தன் குழந்தைகட்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியையாக, கணவனுக்குப் பணிவிடை செய்து மகிழும் மனைவியாக அவனுக்கு அறிவுரை கூறும் அமைச்சராக, மாமன் மாமியின் அன்பு மருமகளாக, வீடு தொடர்பான தையல் வேலை, மரச்சாமான் வேலை, கொல்லூற்று வேலை முதலிய அனைத்தும் செய்யும் வல்லுநராக வெல்லாம் இருந்து குடும்பத்தின் விளக்காக அவள் திகழ்வதைப் பார்க்கிறோம். இங்ஙனம் அன்புடனும், அறிவுடனும், கடமையுணர்வுடனும், பெண்மைப் பாங்குடனும் அவள் பம்பரம் போல் சுழன்று பணிபுரிவதிலிருந்து வாழ்வியலில் 'கடமையுணர்வு' இன்றியமையாத தென்பதை உணர்த்திக் காட்டுகிறார் பாவேந்தர்.

வாழ்வு என்பது பெரிய வட்டம். தம் குடும்ப உறுப்பினர்கள் மட்டுமில்லாமல் நண்பர்கள், உற்றார், உறவினர் போன்ற பலரின் தொடர்பும் உடையது அது. எனவே விருந்தோம்பல் வாழ்வில் சிறப்பிடம் பெறுகிறது. இதனை;

''நற்றமிழர் சேர்த்த புகழ்
ஞாலத்தில் என்னவெனில்
உற்ற விருந்தை
உயிரென்று - பெற்றுவத்தல்''

என்று தம் மருமகளிடம் மாமன் கூறி, வந்த விருந்தைப் போற்றச் சொல்லும் பகுதியாய் அறிவுறுத்திக் காட்டுகிறார் பாவேந்தர். குடும்ப வாழ்வில் இன்பமும் துன்பமும் கணவன் - மனைவி இவ்விருவருக்கும் ஒத்ததாக இருக்க வேண்டும். இதுதான் காதல் வாழ்க்கை. இக்காதல் வாழ்க்கைதான் வாழ்வின் கடைசி வரை இனிப்பதாய் இருக்கும் என்கிறார் பாரதிதாசன்.

''அன்பில் அவளும்
அவனும் ஒருமித்தால்
துன்பம் அவளுக்கென்னில்
துன்புறுவான் - துன்பம்
அவனுக்கெனில் அவளும்
அவ்வாறே - இந்தச்
சுவைமிக்க வாழ்வைத்தான்
தூயோர் - நவையற்ற
காதல் வாழ்வென்று
கழறினார் அக்காதல்
சாதல் வரைக்கும்
தழைத் தோங்கும்''.

என்பது முதியோர் கூறும் அறிவுரைப் பகுதி.

அளவான குடும்பம் அழகான குடும்பமாக இருக்கும். பிள்ளைகள் நிறையப் பெற்றுக் கல்வியறிவு மற்றும் தேவைகளைக் கொடுக்க முடியாமல் திண்டாடுவதைவிட அளவாகப் பெற்றுக் குடும்பத்தையும் நாட்டையும் முன்னேற்றுவது வாழ்வில் அனைவருடைய கடமையாகும். இதனை—

''நன்மக்கட் பேறுபற்றி
நானுரைப்ப தொன்றுண்டாம்
ஈண்டு குழந்தைகள்தாம்
எண்மிகுத்துப் போகாமல்
வேண்டும் அளவே
விளைத்து, மேல் வேண்டாக்கால்
சேர்க்கை யொழித்துக்
கருத்தடையேனும் செய்க''

என்று கூறி வாழ்வியல் சிறக்க வழிகாட்டுகிறார் பாவேந்தர்.

தனக்கென வாழும் 'தன்னல' வாழ்வு தாழ்வானது; 'பொது நல' வாழ்வே போற்றுதற்குரியது. இக்கருத்தைப் பாவேந்தர் குடும்ப விளக்கில் பற்பல இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார்.

படுக்கையறையிலும் நாட்டு முன்னேற்றம் பற்றிச் சிந்திக்கின்ற மங்கையைப் பாவேந்தர் தம் குடும்ப விளக்கில் படைத்துக் காட்டுகிறார். இரவு மணி பத்து. வீட்டு வேலைகளையெல்லாம் முடித்த பின்னர் மனைவி படுக்கையறை வருகிறாள். ''தொண்டையிலே ஒன்றுமே அடைக்கவில்லை என்றாலும், துணைவன் அவன் சிறுகனைப்புக் கனைக்க



**தமிழரசு அச்சகத்தில் ஒழுங்கு அமைப்பாளராக (Imposer) பணியாற்றிவந்த திரு சி. பச்சையப்பன் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து 30.3.87 அன்று தமது 38வது வயதில் மறைவெய்தினார். 1975ல் அச்சுக்கோப்பாளராகப் (Compositor) பணியில் சேர்ந்த இவருக்கு மனைவியும் ஒரு மகளும் ஒரு மகனும் உள்ளனர்.**

லாயினான். அண்டையிலே மங்கை போய் 'அத்தான்' என்கிறாள். அத்தானா தூங்கிடுவான்; உட்கார் என்கிறான். அவள் அவனுக்குச் சந்தனம் பூசுகிறாள். அவன் அவளுக்கு முல்லை மலர் சூடுகிறான். அவன் பார்க்கிறான்; அவளும் பார்க்கிறாள், இந்த மகிழ்ச்சியின் இடையே அவள் ''கசப்பான சேதி ஒன்று கேட்பீர் அத்தான்'' என்கிறாள். ''பாகற்காய் கசக்கும், எனினும் அதன்மேற் கசப்பின் உள்ளேயும் ஒரு சுவை இருக்கும். அதுபோல நீ சொல்வது கசப்பான சேதி என்றாலும் அதனுள்ளே ஓர் இனிப்பும் இருக்கும். சொல்வாயாக!'' என்கிறான். அவள் கூறுகிறாள்:

''அதிகாலை தொடங்கிநாம் இரவு
மட்டும்
அடுக்கடுக்காய் நமதுநலம் சேர்ப்ப
தல்லால்
இதுவரைக்கும் பொதுநலத்துக் கென்ன
செய்தோம்
என்பதைநாம் நினைத்துப்பார்ப்பதுவும்
இல்லை''

இன்றைக்கு என்ன கறி? செலவு எவ்வளவு? ஏகாலி வந்தானா? கொழுக்கட்டை செய்யலாமா? செந்தாழை வாங்குவமா? கடைச் சரக்கை ஒன்றுக்கு மூன்றாக விற்பது எந்நாள்? கொடுக்கல் என்ன? வாங்கல் என்ன? என இவ்வாறு நாள்தோறும் நம் நலந்தான் பேசுகின்றோம்; நாடுகின்றோம்.

தமிழரென்று சொல்லிக்கொள்
கின்றோம் நாமும்!
தமிழ்நாட்டின் முன்னேற்றம் விரும்பு
கின்றோம்!
எமதென்று சொல்கின்றோம் நாடோ
றுந்தான்
எப்போது தமிழனுக்குக் கையா லான
நமதுழைப்பை ஒரு காசைச் செலவு செய்
தோம்?

நாம் இதனை வாழ்நாளில் ஒருநாளாவது நினைத்துப் பார்த்ததுண்டா? அனைவரும் இவ்வாறு தன்னலமே நாடி நின்றால் பொதுநலம் நிலைபெறுவது எங்கே?



மங்கையின் இந்தப் பொருள் மொழிகளைக் கேட்கின், கணவன் நாட்டுத் தொண்டாற்ற வேண்டியதன் இன்றியமையாமையை உணர்கிறான்.

இழந்தபழம் புகழ்மீள வேண்டும்,
நாட்டில்
எல்லோரும் தமிழர்களாய் வாழ
வேண்டும்
வழிந்தொழுகும் சுவைத்தமிழே பெருக
வேண்டும்
மாற்றலர்கள் ஏமாற்றம் தொலைய
வேண்டும்
விழுந்தமிழ் நாடுதலை தூக்க என்றன்
உயிர்தனையே வேண்டிடினும்
தருவேன்...

எனச் சூளுரைக்கிறான். உலகை மறந்து இன்பம் துய்க்க வேண்டிய படுக்கையறையில் நாட்டுக்குத் தொண்டாற்றக் கணவனைத் தூண்டுகின்ற புரட்சி மங்கையைப் பாவேந்தர் 'குடும்ப விளக்கு' எனப் போற்றிப் பாராட்டுகிறார். எந்த நிகழ்ச்சியாயினும் அதனுடன் மக்கள் முன்னேற்றத்தை இணைத்துச் சிந்தித்த புரட்சிப் பாவலராகப் பாரதிதாசன் விளங்குகின்றார்.

அடிமையுற்றுக் கிடக்கும் பெண் சமுதாயம் விடுதலை பெற்று வீறு நடைபோட அவர்கட்கு முதலில் ஊட்டப்பட வேண்டியது கல்வியே! கல்வியில்லாத பெண்கள் களர் நிலம். அங்கே நற்குழந்தைகளாகிய விளைவை நாம் காணமுடியாது. கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி. அங்கே நல்லறிவையுடைய மக்கள் தோன்றி நாளும் செழித்து வளர்வர். குடித்தனத்தைப் பேணுவதற்கும் மக்களை நன்முறையில் வளர்ப்பதற்கும் அவர்கட்குக் கல்வி வேண்டும்.

பெண்கள் சமைப்பது, உடைகள் தைப்பது போன்ற வீட்டு வேலைகளைச் செய்து வீட்டினுள்ளேயே அடைபட்டுக் கிடப்பதும், ஆண்கள் புறவுலகப் பணிகளில் ஈடுபட்டுப் பொருளீட்டி வருவதுமே பெண்ணடிமைக்குக் காரணமாகிறது. இந்நிலை மாறவேண்டும் எனத் துடிக்கிறது கவிஞரின் புரட்சியுள்ளம். சமையல் வேலையைப் பெண்கள் மட்டும் ஏன் செய்யவேண்டும்? ஆண்களும் அதைச் செய்யவேண்டும். பெண்களும் ஆண்களைப் போல் பிற பணிகளில் ஈடுபட்டுப் பொருளீட்டவேண்டும். இவ்வாறான நிலை உருவாகுமானால் பெண்ணடிமை என்னும் பேச்சுக்கு இடமிராதல்லவா? ஆகவேதான் புரட்சிக் கவிஞர்:

''சமைப்பது பெண்களுக்குத்
தவிர்க்கொணாக் கடமை என்றும்
சமைத்திடும் தொழிலோ நல்ல
தாய்மார்க்குத் தக்க தென்றும்
தமிழ்த்திரு நாடு தன்னில்
இருக்குமோர் சட்டந் தன்னை
இமைப்போதில் நீக்க வேண்டில்
பெண்கல்வி யாண்டும் வேண்டும்''

என வெடிப்புறப் பேசுகிறார்.

தமிழ்நாட்டில் தமிழர்கள் தம் குழந்தைகட்குப் பெயரிடுவது கூட வேற்று மொழியிலா? தமிழில் பெயர் இல்லையோ என எண்ணத் தக்க அளவு இன்றைய போக்கு சென்று கொண்டிருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். தம்முடைய 'குடும்ப விளக்கில்' குழந்தைக்குத் தமிழ்ப் பெயரிடுவதை ஒரு காட்சியாகப் படைத்துக் காட்டுகிறார் பாவேந்தர்.

நல்ல தமிழ்ப் பெயர்களைக் குழந்தைக்குச் சூட்டவேண்டும் என்பதற்காக ஒரு நீண்ட பெயர்ப் பட்டியலைக் 'கண்ணகி புரட்சிக் காப்பியம்' எனும் தம் நூலில் தருகிறார் நம் கவிஞர்.

தமிழ் மரபில், நின்று, காலத்துக்கேற்ற புதுமை கொண்டு, தம் எண்ணம், செயல், எழுத்து, பேச்சு, உண்ணும் உணவு, உடுத்தும் உடை ஆகிய அனைத்திலும் தமிழ்நெறியையே கண்ட தமிழ்க் கவிஞர் நம் பாவேந்தர் ஆவார். அவர் வழி நின்று,

''சான்றாண்மை இவ்வுலகில்
தோன்றத் துளிர்த்த தமிழ்
மூன்றும் செழித்த தென்று
ஊன்றிய முரசே-வாழ்வின்
ஊன்றிய புகழ் சொல்லிக்
கொட்டு முரசே''

என முரசு முழக்குவோமாக!



# புதுமைப் பெண்களுக்கு பழந்தமிழ் இலக்கியங்கள் தரும் எழுச்சி

– சு. இராசலட்சுமி

எக்காலத்திற்கும் ஏற்ற கருத்துக்களை அறிவிப்பதே இலக்கிய நோக்கமாகும். இக் காலப் பெண்களுக்கு எழுச்சி தரும் வகையில் எண்ணிறந்த கருத்துக்கள் பழநதமிழ் இலக் கியங்களில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் அழகின் விளக்கத்தைக் காணுதலே இக்கட்டு ரையின் நோக்கமாகும்.

''அழகிய பொருள் என்றும் இன்பத்தைத் தரவல்லது (A thing of beauty is a joy for ever) எனக் கீட்ஸ் பெருமகனார் கூறுகின்றார். இக்கூற்றிற்கொப்ப அமைந் துள்ள பெண்மையின் அழகைக் காண்போம். இயல்பாகவே பெண்மையிடத்து மென்மை யும், பொலிவும், கவர்ச்சியும் நிறைந்து விளங்குவது இயற்கையின் அமைப்பாகும். இக் காரணத்தால்தான் பெண்களை எழிலினம் (Fair-sex) என அழைத்தனர் போலும்.

ஆயின் இவ்வழகு புறநிலையோடு அமைந்து நிறைவு பெறுவதில்லை; புற அழகோடு அகஅழகும் அதாவது குணஅழகும் சேருகின்றபோதுதான் பொன்மலர் நாற்றம் பெற்றவாறு முழுமை அடைகின்றது.

சங்க இலக்கியங்களில் பெண்மையின் அழகு பல்வகை உவமைகளாலும், உருவகங் களாலும் பேசப்படுகின்றது; குவளைக் கண் என்றும், பிறைநுதல் எனவும், கொவ்வை இதழ் எனவும், முல்லை முறுவல் எனவும், தாமரைமுகம் எனவும், மூங்கிலை வென்ற தோள் எனவும், மின்னை முன்னே வென்ற நுண்ணிடை எனவும் இலக்கியங்கள் வருணித் துள்ளன. எனினும் அவையெல்லாம் வாசகர் மனத்தைத் தொடுவதில்லை. சங்ககால மகள் என்று நினைக்கும்போது, கற்புக்கடம்பூண்டு அறனும் ஒழுக்கமும் அறிந்து நடந்த நற்றிணைத் தலைவியே நம்முன் தோன்றுகிறாள். செல்வச் சீமானின் அருமை மகளாகப் பிறந்த அழகிய அப்பெண்சிறுமியாக இருந்தபோது பாலுண்ண மறுத்து, வீட்டின் இருமருங்கும் ஓடிச் செவிலி யைக் களைப்படையச் செய்தவள் - திருமணம் முடிந்து கணவன் வீடு செல்கின்றாள். சின் னாளில் குடி வறுமையடைந்ததால், தந்தை யின் பெருஞ்செல்வத்தை நினையாதவளாய் தந்தையிடம் பணம் கேட்டு வாழ்வது தன் கணவனுக்கு இழுக்கென உணர்ந்து, இருக்கும் சோற்றைக் கணவனுக்கு இருவேளை படைத்து, தான் ஒரே வேளை உண்டு காலத்தைக் கழித் தாள் என்பதைப் படிக்கும்போது, அம்மங்கை யின் புறஅழகைவிட, அறிவும் இல்லற மாண் பும் மேம்பட்டு நிற்பதைக் காண்கிறோம். அப்பாடலைக் கீழே காண்போம் :

'பிரசங் கலந்த வெண்சுவைத்தீம்பால்
விரிகதிர்ப் பொன்கலத்து ஒருகை ஏந்தி
... ... ...
அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
பரீஇ மெலிந்தொழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவற்ன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
பொழுதுமறுத்து உண்ணுஞ் சிறுமது கையளே


(நற்றிணை: பாடல் 110)

கண்ணகியை அறிமுகப்படுத்தும் இளங்கோவடிகள் —

''போதிலார் திருவினாள் புகழுடை
வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய
பெருங்குணத்துக்
காதலாள்பெயர் மன்னும் கண்ணகியென்
பாள்மன்னோ''

எனக் கூறுவதன் மூலம், திருமகளை ஒத்த அழகோடு வயங்கிய பெருங்குணங்களை உடையவள் கண்ணகி என்பதை அறிவிக்கின் றார். அத்துடன் நில்லாது 'சிறுமுது குறைவி' என்ற பட்டத்தைக் கண்ணகிக்கு அளித்துச் சிறுவயதில் முதிர்ந்த அறிவுடையவள் அவள் என அறிவுக்கே ஏற்றம் அளிக்கின்றார்.

கவிச்சக்கரவர்த்தி கம்பரோ தன் காப் பியத் தலைவி சீதையின் புற அழகையெல் லாம் 34 பாடல்களில் கோவைப்படுத்திக் காட்டியதோடு அமையாமல் அவளது தூய



அகஅழகினை மனத்தே அடக்கமாட்டாதவராய்,

''விற்பெருந்தடந்தோள் வீர வீங்குநீர் இலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன்
இற்பிறப் பென்பதொன்றும் இரும்பொறை என்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்''

என அவள்து குணநலன்களுக்கு ஓர் உருவம் கொடுத்துக் காட்டுகிறார்.

சிந்தாமணி ஆசிரியர் விசயையின் எழிலுருவை முடிமுதல் அடிகாறும் 16 செய்யுட்களால் அறிவிப்பவர்,

''வசையிலா வரத்தின் வந்தாள்வானுயர் அமிர்த மன்னாள்''

என்ற அடியால் அவளது அகப்புற அழகினை விதந்து கூறுகிறார்.

அங்ஙனமே மனோன்மணீய நாடக ஆசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள், மனோன்மணியை அறிமுகம் செய்கின்றபோது, அவளது அங்க அழகினை எடுத்துக் கூறாமல், அன்பும், அறனுமே யாக்கையாகக் கொண்டவள் என்றும், பிறர் இடுக்கண் களைவதையே தன் னோக்கமாகக் கொண்டவள் என்றும், பிறருக்காகத் தன்னலத்தைத் துறக்கும் தியாகவுணர்வு கொண்டவள் என்றும், நற்குண நற்செய்கைகள் அனைத்தும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவள் என்றும் கூறி மனோன்மணியை ஓர் அற்புத ஓவியமாகப் படைத்துக் காட்டுகின்றார்.

நாலடியார் பாடலொன்று, புற அழகெல்லாம் உண்மையான அழகல்ல; நடுவு நிலை தவறாத கல்வியழகே அழகு எனத் தேற்ற ஏகாரம் கொடுத்து முடிந்த முடிபாகக் கூறுகின்றது. ஈண்டு பாரதியின் நினைவு வாராமற் போகாது. புதுமைப் பெண்ணை வரைந்து காட்டுங்கால் பாரதியார்,

'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச்செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்''

என இன்றைய புதுமைப் பெண்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது திமர்ந்த ஞானச்செருக்கே என எடுத்துக் காட்டுகிறார்.

இங்ஙனம் பெண்களுக்கு வேண்டுவது புற அழகுமட்டுமன்று, அன்பும், அறனும், கற்பும், ஒழுக்கமும், பொறுமையும் திமிர்ந்த ஞானமும், இன்னபிற நற்குணங்களும் உடைமையே பெண்களின் உண்மையான அழகு எனப் பழந்தமிழிலக்கியங்கள் பட்டியலிட்டுக் காட்டிப் புதுமைப் பெண்களுக்கு எழுச்சியை ஊட்டி நிற்கின்றன.

# வள்ளுவர் கூறும் நிர்வாக இயல்

எஸ். ஆர். நடராசன்,

வான்புகழ் வள்ளுவன் அளித்த தேனூறும் திருக்குறள் தமிழ் இலக்கியச் சோலையில் ஒரு வாடா மலராகும். இத்தகைய திருக்குறளின் வழி நின்று நிர்வாக இயலை நோக்குவம். தொழிலும் வாணிபமும் மூலதனத்தின் அடிப்படை; மூலதனம் நாட்டு முன்னேற்றத்தின் உயிர்நாடி. இவ்வாறு நாட்டில் முன்னேற்றத்தின் அடிப்படையாக விளங்கும் மூலதனத்தை உருவாக்கும் தொழிலையும் வாணிபத்தையும் நிர்வகிக்கும் நிர்வாகத்தைப்பற்றியும் அதன் பணிகளைப்பற்றியும் வள்ளுவம் வழி நின்று விளக்க முயலுகின்றோம்.

நிர்வாகம் என்பது தான் தலையிடாமல் தான் விழையும் செயலைப் பிறர் மூலம் சாதித்துக் கொள்ளும் ஒரு கலையாகும்.

Management is an art of getting the things to be done by others.

இதனையே வள்ளுவர் 'வினையான் வினையாக்கிக் கோடல்' என்று குறிப்பிட்டுள்ளார்: மேலும்,

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்' — என்றும்

'செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவால் உள்ளம் கொளல்' — என்றும்

குறளில் தெளிவாக்க் கூறியுள்ளார்.

நிர்வாகத்தை இரண்டு பகுதியாகப் பிரிக்கலாம். அவை 'கொள்கை வடிவமைப்பு நிர்வாகம்' Administrative Management, 'செயலாட்சி நிர்வாகம்' Executive Management என்பன.

கொள்கை வடிவமைப்பு நிர்வாகம் என்பது தொழில் மற்றும் வாணிபத்தில் நடைமுறைப்படுத்தக்கூடிய கொள்கைகளை உருவாக்கும் நிலையாகும்.

செயலாட்சி நிர்வாகம் அக்கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் பணிகளைச் செய்வதாகும்.

தொழில் மற்றும் வாணிபத்தின் வெற்றி என்பது இவ்விரு நிர்வாகங்களுக்குமிடையே உள்ள உறுதியான ஒருமைப்பாட்டால் அமைவதாகும்.

இனி நிர்வாகத்தின் பணிகள் சிலவற்றை வள்ளுவன் வழி நின்று நோக்குவம் :

நிர்வாகத்தின் பணிகளை (PODSCORB) என்னும் ஆங்கில வார்த்தையால் எளிதில் அறியலாம்.

திட்டமிடுதல் (Planning) என்பது ஒரு தொழிலை அல்லது வாணிபத்தைத் துவக்கு முன்பு அந்த வாணிபத்தில் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள். வழி முறைகள், மற்றும் அடைய வேண்டிய குறிக்கோள் அதனை அடையும் வழிமுறைகள்.

P- Planning O-Organisation D - Direction
S- Staffing Co- Control, Communication
R- Reporting B- Budgeting

செயல் நிலைகளைப் பற்றி ஆய்ந்து எடுக்கப்படும் ஒரு முடிவாகும். திட்டத்தைச் செயல்படுத்தும் முன் நம்முன் உள்ள பிரச்சனைகளை ஆராய வேண்டும். அவ்வாறு ஆராயும்போது நாம் செய்ய வேண்டிய செயல் யாது, அச்செயலை எப்போது, யார் வாயிலாக, எவ்வாறு, எங்கே, எப்படி, செய்து முடிக்கலாம் என்பனவற்றை ஆய்ந்து தெளிதல் நிர்வாகத்தின் வெற்றிக்கு வழி வகுக்கும் என்று கூறுகின்றனர். இதனையே வள்ளுவர்,

''பொருள், கருவி, காலம், வினை, இடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்''

என்று கூறியுள்ளார்.

ஒன்றைச் செய்யத் துவங்கும்போது அதற்கு வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தகுந்த காலம், செய்து துவங்கும் செயல், செய்தற்குரிய இடம் ஆகிய இந்த ஐந்தினையும் மயக்கம் தீர எண்ணிப் பார்த்த பின்பே அந்தச் செயலைச் செய்யத் துவங்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

அடுத்து 'முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும் படுபயனும் பார்த்துச் செயல்' என்னும் குறளில் ஒரு தொழிலைச் செய்யும் போது அது முடியும் வகையும், அப்போது வரக்கூடிய இடையூறும், அச்செயல் வெற்றிகரமாக முடியும்போது அடையக்கூடிய பெரிய பயனும் ஆகிய இவற்றை ஆராய்ந்து பார்த்துச் செய்ய வேண்டும் என்றும் கூறுகின்றார்.

அமைப்பு : (Organisation) எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிக்க அமைவதுதான் 'அமைப்பு' (Organisation) என்பதாகும். குறிப்பாக 'அமைப்பு' என்பது அதில் அடங்கியுள்ள நபர்களையே குறிப்பதாகும். (Organisation is what its people are)

இத்தகைய அமைப்பினைப் பின்வருமாறு பகுக்கலாம். அவை

1. நேர் அமைப்பு: Line Organisation
2. அலுவலர் அமைப்பு: Staff Organisation
3. நேர் அலுவலர் அமைப்பு : Line and Staff Organisation
4. செயல் அமைப்பு : Functional Organisation
5. குழு அமைப்பு: Committee Organisation

என்பன.

இவ்வமைப்புக்கள் கடினமான காரியத்தை எளிதாக்க அக்காரியத்தைப் பல

பகுதிகளாகப் பகுத்து அவ்வாறு பகுக்கப் பட்ட செயலை அச்செயலில் வல்லவரிடம் தந்து எளிதில் முடிக்கவென்று ஏற்பட்டன வாகும். இவ்வமைப்புக்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்ளும் ஒவ்வொருவரின் கடமை, நிலை, மற்றும் தன்மைகளை வரையறுத்துச் செயல்படுவதால் அச்செயலை எளிதில் செய்ய ஏதுவாகின்றது. இதனை வள்ளுவர்,

'செய்வானை நாடி வினைநாடிக்
காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்'

என்று கூறியுள்ளார்.

பணியாளர் (Staffing) :

பணியாளர்களைத் தேர்ந்தெடுத்தலும் அவர்களுக்குச் சிறந்த பயிற்சி அளித்தலும், அவர் தம் திறன் அறிந்து அவர்களை ஊக்கு வித்தலும் நிர்வாகத்தின தன்மையாகும். இவ்வாறு பணியாளர்களைத் தேர்ந்தெடுக் கும்போது கவனிக்க வேண்டியதைப் பற்றி வள்ளுவா,

''செய்வினை செய்வான் செயன்முறை
அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்''
என்ற குறளில்

முகக்குறிப்பினாலேயே உள்ளக்கருத்தைஅறிய வல்லவரை அவர் யாது வேண்டுவதாயினும் அதனைக் கொடுத்துக் கொள்ளுதல் வேண்டும் என்று கூறியுள்ளார். மற்றும்,

'முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின்'

முகக் குறிப்பை உணர்ந்து செயல்படும் பணி யாளர்களை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதாகும். அதாவது ஒருவன் தன் உள்ளத் தில் எண்ணுவதை அவன் முகத்தால் அவ னுக்கு உற்றதை உணர்ந்து கொள்ளும் வல் லமை வாய்ந்த பணியாளர்களைப் பெற்றி ருந்தால் அவர் முகம் நோக்கி நின்றால் அது ஒன்றேபோதும். இத்தகைய பணியாளர் களைப் பெற்றிருக்கும் நிர்வாகம் சீரோடும் சிறப்போடும் விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



இயக்கம் : (Director ) இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களைச் சிறந்த முறையில் ஊக்குவித்து நிர்வாகத்தில் பங்கு பெறச் செய்து, எடுத்த காரியத்தை எளிதில் முடிப்பதாகும். இவ்வாறு இயக்கும் போது நிர்வாகி பணியாளர்களை

'கடிதுஓச்சி மெல்ல எறிதல் வேண்டும்'
என்கிறார் வள்ளுவர்.

நிர்வாகக் கட்டுப்பாடு : (Control) நிர்வாகத்தில் குறிக்கோளை அடையத் திட்டப்பட்ட திட்டத்தின் செயல்முறை, அதன் வெற்றி மற்றும் தோல்விக்கான கார ணங்கள் ஆய்ந்து குறைகளை நிவர்த்தி செய்து குறிக்கோளை அடைதலே கட்டுப்பாடாகும். இத்தகைய கட்டுப்பாடு உடையவர்களை

'எண்ணிய எண்ணியாங்கு எய்துபஎண்ணியார்
திண்ணியராகப் பெறின்'

என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

செய்தித் தொடர்பு : (Communication) கொள்கை வடிவமைப்பு நிர்வாகத்தில் எடுக் கப்படும் முடிவுகளைச் செயலாட்சி நிர் வாகம் திறம்படச் செயல்படுத்தச் செய்தித் தொடர் மிகவும் முக்கியமானதாகும். இவ் வாறு கொள்கைகளை எடுத்துச் சொல்லும் போது அச்சொல்லானது

'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க்
கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்'' என்றும்

''சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல்
அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை யறிந்து''


என்றும் வள்ளுவர் கூறியுள்ளார்.

அதாவது நிர்வாகி தான் எடுத்துக் கொண்ட கொள்கைகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டும். அக்கொள்கை களைச் செவிமடுத்தவர்கள் நிர்வாகி. எந்தக் காரியத்தை நின்னக்கின்றாரோ, அந்தக் காரி யத்தைச் செய்து முடித்திடல் வேண்டும் தன்மைத்தாக இருத்தல் வேண்டும்.

அறிக்கை : ( Reporting ) ஒரு கொள்கையைச் செயலாக்கும்போது விளையக் கூடிய அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் பற்றிய அறிக்கைகளை அவ்வப்போது கொள்கை வடிவமைப்பு நிர்வாகத்திற்கு அறி வித்தல் மூலமாகக் கொள்கை மற்றும் வடிவ மைப்பில் மாற்றங்களைச் செய்து, கொள்கை களை எளிதில் செயலாக்க அறிக்கை மிகவும் பயன்படுகிறது. இத்தகைய அறிக்கைகள் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாக இருத் தல் வேண்டும்.

இவ்வாறு திருக்குறளில் இன்றைய அறிஞர்களின் நிர்வாகவியல் கோட்பாடுகள் பொதிந்து உள்ளன. ஆழ்ந்து நோக்குவார்க்கு இவ்வுண்மை புலப்படும்.

# வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி



வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி!
தாய்மையின் தனிப்பரிவுடன் உங்கள் சேமிப்பு
எங்களிடம் பூரிப்புடன் வளர்கிறது!

உங்களது அனைத்து சேமிப்புகளுக்கும் ½%
கூடுதல் வட்டியும் கிடைக்கிறது.


மக்களுக்கேற்ற வங்கி—
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001

TNSC—*வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

TNSC-BANK/166



'சீயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி' எனத் தந்தை பெரியார் அவர்களால் போற்றப்பட்ட-'நமக்கோர் வால்டேர் கிடைத்து விட்டார்! நமக்கொரு ஷெல்லி கிடைத்து விட்டார்...'என்றெல்லாம் .பேரறிஞர் அண்ணா அவர்களால் பெருமையோடு புகழப்பட்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் பிறந்த நாளை (29-4-1891) நாம் நினைவு கூர்கிறோம்.

"பாட்டால் பரமனைத் தொழலாம்" என்றிருந்த நிலைமாற்றிப் பாட்டாளிகளுக்காகவும் பாடிய சிறப்பு அவருடையது. அவருடைய கவிதைகளிலே தென்றலின் தண்மையைக் காணலாம்; புயலின் சீற்றத்தை உணரலாம்; தீயின் வெம்மையை அறியலாம். சொல்லாட்சியில் வெறும் ஜோடிப்புகளை அவர் அடியோடு வெறுத்தார்; அகராதி உதவியோடு படிக்க வேண்டிய அவசியம் தன் எழுத்துக்கு இல்லாமல் தரம்மிக்க புரட்சிக் கவிதைகளைப் படைத்தார்.

புதுமைக்கவி பாரதியின் வழித்தோன்றலான இந்தப் புரட்சிக் கவிக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்னின்று (25,000 ரூபாய்) நிதி வழங்கி அன்னாரின் தமிழ்க் கவிதைப் பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். சென்னையில் ,29-7-1946ல் நடைபெற்ற இவ்விழாவுக்கு நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமை தாங்கினார்.

பிறர்தொட அஞ்சிய நிகழ்ச்சிகளையெல்லாம் தமிழர்லே தான் தொட்டுப் புரட்சிக் கவிஞரான அவர் பெயரில், திருச்சிராப்பள்ளியில் பல்கலைக் கழகம் கண்டு பெருமை கொண்ட தமிழக அரசு, ஆண்டு தோறும் அவருக்கு விழா எடுப்பதோடு சிறந்த தமிழ்க் கவிஞர்களுக்குப் பரிசும் வழங்கிச் சிறப்பித்து வருகிறது. அவர் புகழ் ஓங்குக!

## அருமை மக்களால் பெருமை

விண்ணோ நிலவால்
விளக்கம் அடைந்தது
தண்கடல் முத்தால்
தனிச்சிறப் புற்றது

தரையோ தானறிந்தது
பிறர்க்குச் சாற்றும்
அருமை மக்களால்
பெருமை பெற்றது.

—பாவேந்தர்



## மாங்குயில்

மாங்குயில் கூவி இவ்
வண்ணத் தமிழ்மொழி விற்கும்-இந்த
வையமெலாம் அதைக் கற்கும்-களி
தாங்காது தோகை
விரித்தாடி மாமயில் நிற்கும்.

—பாவேந்தர்

# தெரிந்து கொள்ளுங்கள்!

தண்டவாளங்கள் இணையும் இடத்தில் இடைவெளி விடுவதேன்?

கோடையில் விரிவதற்கு வசதியாக.

வெளிக்காதின் பயன் என்ன?

வெலிக்காது ஒளி அலைகளைக் குவித்துக் காதுக்குள் அனுப்பப் பயன்படுகிறது.

இந்தியாவில் சர்வதேச விமான நிலையங்கள் உள்ள நகரங்கள் எவை?

கல்கத்தா, சென்னை, அமிர்தசரஸ், டில்லி.

குளிர்ப் பதனியில் குளீரூட்டிகளாகப் பயன்படும் திரவங்கள் யாவை?

அம்மோனியா திரவம், கந்தகடை ஆக்சைடு திரவம்.

தெர்மாஸ் குடுவையில் வெள்ளிப்பூச்சு பூசுவதன் காரணமென்ன?

வெப்பக் கதிர் வீசலைக் குறைக்க.

நடு இரவில் சூரியன் உதிக்கும் நாடு எது?

நார்வே..

நீராவி எஞ்சினில் நீராவிக்கலசத்திற்கும், நீராவிப் பெட்டிக்கும் இடையேயுள்ள வால்வின் பெயர் என்ன?

தொண்டை வால்வு.

வீட்டிற்காகப் பயன்படுத்தப்படும் மின்சாரத்தைக் கணக்கிடும் அலகு எது?

கிலோவாட்

கொள்கலத்திலிருந்து வெப்பம் வெளியே செல்லாவாறு தடுக்கப்படுவதால் வெப்ப உயர்வு ஏற்படுகிறது. இதை என்னவென்று கூறுகிறோம்?

மாறா வெப்ப நிலைமாறுதல்.

உலகத்திலுள்ள சர்க்கரைக் களஞ்சியம் எனப்படும் நாடு எது?

இந்தோனேஷியா.

எலுமிச்சம்பழத்தில் உள்ள அமிலம் எது?

சிட்ரிக் அமிலம்.

அண்ணல் காந்தியடிகள் எங்கு பிறந்தார்?

குஜராத் மாநிலத்தில் உள்ள போர்பந்தரில்.




# சிக்கனத்தின் பெருமை

கே. எஸ். நாகராஜன்

சிக்கனமாய் நாமிருந்தால் தொல்லை நேருமோ - வீண்
செலவுகளைக் குறைத்துவிட்டால் துயரும் சேருமோ
விக்கலுக்கு நீர்போதும் பாலும் வேணுமோ - இவ்
விஷயங்களைப் புரிந்துகொண்டால் நன்மை கொஞ்சமோ

ஆடைமீது மோகங்கொண்டு அலையுதல் ஆகுமோ - நாம்
அளவுக்குமேல் வாங்கியதை அடுக்கிடல் நியாயமோ
வாடுகின்ற நேரத்திலே ஆடையும் உதவுமோ - நம்
வயிற்றுப்பசி நீங்கிவிட வழிமுறை கிடைக்குமோ?

வளமாக இருக்கும்போது மதிகெட வேண்டாம் - பிறர்
மகிழ்ச்சிக்காகச் செலவுசெய்து ஏழையாக வேண்டாம்
இளமையிலே சேர்த்திடுதல் இன்பமுண் டாக்கும் - அது
எந்நாளும் துயரம்நீக்கி நன்மைகள் சேர்க்கும்.



# திருக்குறள் திறம்

தமிழ் இலக்கியப் பூங்காவில் பூத்த ஒரு சிந்தனை மலரே திருக்குறள். மனித இன வளர்ச்சிக்கு மாண்புடைய நீதிகளைச் சொன்ன மாக்கவிஞா திருவள்ளுவர். சாதி, மத, இன, மொழி வேறுபாடற்ற மனித சமுதாயத்தைக் காணத் துடித்த பொதுமை விரும்பி அவர். உலகளாவிய நோக்குடன் கூடிய உயர்ந்த நூலைப் படைத்த பெருமை அவருக்கே உண்டு.

அறத்தின் ஆட்சியையும், பொருளின் மாட்சியையும், இன்பத்தின் ஏற்றத்தையும் ஒருங்கே விளக்கும் அறநூல் திருக்குறளைத் தவிர வேறு இல்லை எனலாம்.

குறள் உணர்த்தும் அறம் சமயங்களுக்கெல்லாம அப்பாற்பட்ட பொதுமைப் பண்பைப் பெற்றுள்ளது. தரும சாத்திரம் போன்ற நூல்கள், குறிப்பிட்ட ஓர் இனத்தின் வளர்ச்சிக்கான விதிகளையே வகுத்ததுரைத்தன. ஆனால் குறள், மனிதன் மனிதனாக வாழவும் - இல்லறத்தில் ஈடுபட்டு இன்பம் காணவும் - துறவு ஒழுக்கத்தில் இணைந்து ஆன்மீக அநுபவத்தை அடையவும் - சமுதாய வாழ்விலே தோய்ந்து மனித உறவை வலுப்படுத்தவும் ஆக்கப்பூர்வ சிந்தனைகளை அள்ளித் தந்தது.

மனச்சான்றின் குரலையே அறமாகப் போற்றிய திறம் குறளுக்கே உரியதாகும். 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்', 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' 'அறத்தால் வருவதே இன்பம்' என்ற தொடர்கள் குறள் கண்ட அறம் எத்தகையது என்பதைத் தெளிவாக உணர்த்துவன.

அறங்களில் 'ஈதலே சிறந்தது' என்பது தமிழ் மரபாகும். தமிழ் மூதாட்டி ஔவையும் 'ஈதலே அறம்' என்றார். 'ஈதல் இசைபட வாழ்தல்' ஆகிய இரண்டுமே மனித வாழ்வின் குறிக்கோள் என்று வரையறுக்கிறது வான்புகழ் வள்ளுவம்.

மக்களை மாக்களிலிருந்து பிரிப்பது ஒழுக்கம். அதுவே மனிதரைப் பண்படுத்தி மன்பதையில் உயர்த்துகின்றது. கல்வியில் வல்ல அறிஞர்களாலும் கவியில் வல்ல கவிஞர்களாலும் போற்றப் பெறுவது ஒழுக்கம். ஆகவேதான் குறள் 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்று உரக்கக் கூறுகிறது.

கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இலக்கணம் வகுத்த நூலும் திருக்குறள்தான். பொருட்பாலில் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என நான்கு அதிகாரங்களும் அறத்துப்பாலில் 'மெய்யுணர்தல்' என்ற ஒரு அதிகாரமும், இன்பத்துப் பாலில் சில குறள்களும் கல்வியின் விலாசத்தையும், விசாலத்தையும் வியந்துரைக்கும், 'கேடில் விழுச் செல்வம்' என்று கல்வியை அது சிறப்பிக்கும்.

இந்திய தேசிய பண்பாக மிளிரும் 'கொல்லாமை' யைக் குறித்தும் குறள் பல இடங்களில் பரக்கப் பேசுகின்றது. 'கொல்லா நலத்தது நோன்மை', 'உயிர் செகுத்துண்ணாமை நன்று', 'அறவினை யாதெனில் கொல்லாமை' என்ற பாக்கள் எவ்வுயிரையும் தன்னுயிர் போல் எண்ணும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்ச்சியின் முகிழ்ப்புகள் என்று சொல்லலாம்.

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்றும் 'பெண்ணின் பெருந்தக்கது இல்' என்றும் பெண்ணின் பெருமையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பாடிய நூல் குறளேயன்றி வேறு எது?

இவ்வாறு குறள் பல பொருள் களஞ்சியமாகப் பரிமளிக்கிறது. அறநெறி உணரவும் - அரசியல் அறிவு பெறவும் - இன்பக் கற்பனைகளில் மகிழவும் - மொழி வளம் காணவும்-பலரும் அதைப் பல நோக்கில் படித்துக்கொண்டே இருக்கின்றனர்.

அதைப் படிக்கப் படிக்கப் புதுமை நயங்கள் இன்னும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. புதிய கொள்கைகள் இலக்கியத் துறையில் உருவாகிக் கொண்டே உள்ளன!

—த. சீ. பாலு

**விந்தை விலங்குகள்**

வனவிலங்குகளிலேயே சிங்கம் வலிமை மிக்கதல்ல. புலி சிங்கத்தைக் காட்டிலும் வலிமை கொண்டது. சிங்கத்தைக் காட்டிலும் சிறுத்தை வேகமாக ஓடவல்லது!

## நூலின் பெருமை

இந்தக் காலத்தில் பெரும்பாலான மக்கள் எப்படிப் படிப்பது என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்; இது நல்ல முன்னேற்றம் தான். ஆனால் எதைப் படிப்பது என்பதை அறிந்து கொள்ளவில்லையே; இது ஆபத்தல்லவா?

—தந்தை பெரியார்



## விளையும் பயிர்

சென்னை பத்மா சேஷாத்திரி பாலபவன் மேல்நிலைப்பள்ளியில் ஒன்பதாவது படிக்கும் செல்வி எஸ். ஹேமமாலினி, பேச்சுப் போட்டிகள் பலவற்றில் வெற்றி பெற்றுப் பரிசுகள் பெற்றுள்ளார்.

ஆங்கிலத்தில் கதை, கவிதை, எழுதுவதிலும் திறம் பெற்ற இவர், நடிப்பிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்குகிறார். இம்மாணவி அறிந்த பிற மொழிகள் ஆங்கிலம், இந்தி, பிரெஞ்சு.



# உலக மொழிகளில் திருக்குறள்



உலகமெலாம் போற்றிப் புகழப்படும் ஒப்பற்ற நூலாக விளங்குவது திருக்குறள். சொல் நயமும், பொருள் வளமும் மிகுந்த இந்நூல், காலகாலத்துக்கும் பொருந்துகின்ற கருத்துக்களைக் கூறி 'பொதுமறை' என்னும் பெயரைத்தாங்கி நிற்கின்றது. இதன் அருமை பெருமைகளை உணர்ந்த தமிழறிஞர்கள் பலர் குறளுக்குத் தக்க உரை எழுதியும், செம்மையாகப் பதிப்பித்தும் வந்தார்கள், வருகிறார்கள்.

வாழ்வாங்கு வாழ்வதற்கான வழி முறைகளைக் கூறும் ஒரே நூலாகக் குறள் விளங்குவதால், அது உலக நாட்டு அறிஞர்களையும் கவர்ந்ததில் வியப்பில்லை. இன்று உலகில் ஏறக்குறைய எல்லா மொழிகளிலுமே திருக்குறள் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றது. தாய்மொழியாம் தமிழில் தோன்றிய திருக்குறள், தரணியிலுள்ள மக்கள் எல்லார்க்கும் தாரக மந்திரமாகத் திகழ்ந்து வருகிறது என்பதை நினைக்கும்போது நம் நெஞ்சம் பெருமிதம் அடைகிறது.

திருக்குறள் எந்தெநத மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது?

இது தொடர்பாக, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக ஆட்சியாளர் திரு இரா. முத்துக்குமாரசாமி அவர்களைக் கேட்டபோது கூறினார்:

''ஒன்றேமுக்கால் அடியில், உலக மககளை இணைககும் நூற்பாலமாக விளங்கிடும் திருவளளுவர் அருளிய திருக்குறள, ஆங்கிலம், ஜெர்மன், லத்தீன், பிரெஞ்சு ரஷ்யன், சமஸ்கிருதம், சிங்களம், இந்தி, மராத்தி, குஜராத்தி, பெங்காலி, உருது, மலையாளம், கன்னடம், தெலுங்கு, பர்மா, பிஜி, ஜப்பான் ஆகிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது.

''சென்னையிலுள்ள மறைமலையடிகள் நூலகத்தில் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூல்கள் உள்ளன. அதுமட்டுமல்ல, டாக்டர் ஜி. யூ. போப்பையர் பயன்படுத்திய திருக்குறள், நாலடியார் நூல்களும் இந்நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

''கையடக்க அளவில், டாக்டர் மு.வ. தெளிவுரை எழுதிய திருக்குறளை இதுவரை 75 பதிப்புகள் வெளியிட்டுள்ளோம். ஒரு தமிழ் நூல் இத்தனை பதிப்புகள் வெளிவருவது இதுவே முதல் தடவை. இதுவரை 15 இலட்சத்துக்கு மேற்பட்ட பிரதிகள் விற்பனையாகியுள்ளது, தமிழ்நூல்கள் வெளியீட்டுத் துறையில் பெரும் சாதனையாகும்.

''குறைந்த விலையில் - மூன்று ரூபாய் விலைக்கு திருக்குறள் மூலம் மட்டும் வெளியிட்டிருக்கிறோம். தீப்பெட்டி அளவிலும் திருக்குறளை வெளியிட்டிருக்கிறோம்.''

'என்றும் புலராது யாணர் நாட் செல்கினும் நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்' விளங்கும் திருக்குறள் நெறியை நாளும் பரப்பிட நற்பணியாற்றிடுவோம்.!

—பி.வி.கிரி

## திருக்குறளில்...

ஒரு முறை பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்

ஙீ

ங

அதிக முறை பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்து

"ன்" - 1705 முறைகள்

பயன்படுத்தப்படாத எழுத்துக்கள்

ஔ, ஙா, ஙி, ஙீ, ஙு, ஙூ, ஙெ, ஙே, ஙை, ஙொ, ஙோ, ஙௌ, சௌ, ஞி, ஞீ, ஞு, ஞூ, ஞை, ஞொ, ஞோ, ஞௌ, டௌ, ணௌ, தௌ, ஙை, நை, நௌ, பௌ, மௌ, யௌ, ரௌ, லௌ, வௌ, ழீ, ழூ, ழெ, ழே, ழோ, ழௌ, ளோ, ளௌ. றௌ, னௌ.

(மொத்த எழுத்துக்கள் -43)

-கணிப்புமையம்,

நன்றி: தமிழ்ப் பல்கலைக் கழகச் செய்தி மலர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை. அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



# பத்தாண்டுகளில் பலரும் பாராட்டும் வண்ணம் புரட்சித் தலைவர்

# எம்.ஜி.ஆர்

ஆட்சியில்

# தமிழகத்தில் நவீனமயமான தொழிற் புரட்சி !

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற்சாலை திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்
- ரூ. 5½ கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் திட்டம்
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்சாலை
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் 'பென்சிலின்' மருந்து தயாரிக்கும் திட்டம்
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்திட்டம்
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் திட்டம்.

ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை,
சென்னை-600 002.

டிட்கோ

